

கல்கி

KALKI 30.11.1975 75 காசு

கண்ணதாசன் எழுதும்

சேரமான் காதலி

அடுத்த இதழில் ஆரம்பம்



நடத்திய பரிசோதனைகள் நிரூபிக்கின்றன...





பிஸ்கட் என்றால் இதுதான்—சுவைக்கும்


வைட்டமின்களுக்கும்
போஷாக்குக்கும் இதுதான்:

பிரிட்டானியா

க்ளுக்கோஸ்-D




பிரிட்டானியா க்ளுக்கோஸ்-Dயுடன் மற்றொரு முன்னணி ரக க்ளுக்கோஸ் பிஸ்கட்டை ஒப்பிட்டுப் பார்த்த பரிசோதனைகளில் தெள்ளத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது: வைட்டமின் சத்திலும், மொத்த போஷாக்குத் தன்மையிலும் உயர்ந்தது க்ளுக்கோஸ்-D பிஸ்கட் தான், இனிமைக்கும், சுவைக்கும், முறுமுறுப்புக்கும், அதிகமாக விரும்பப்படுகிறது. சக்தி வேண்டுமா—க்ளுக்கோஸையும் விட 20 சத விகிதம் அதிக சக்தியைத் தருகிறது க்ளுக்கோஸ்-D. பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D பிஸ்கட்—தித்திக்கும் சக்தி!



எனவேதான், வேறெந்த க்ளுக்கோஸ் பிஸ்கட்டையும் விட அதிக மக்களைக் கவர்ந்துள்ளது பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D

பிரிட்டானியா பிரிட்டானியா பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை

லின்டாஸ்-BBC-GL-10-140 TM


வாழ்க்கையில் அதிர்ஷ்டமுள்ள ஆடவர் ஒருவரை மீண்டும் சந்திக்கும்போது...
...அவர் அணிந்துள்ள ஆடைகளின் அழகையும் பாருங்கள்!
நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான்!



கல்கி

ராக்ஷஸ
கார்த்திகை 14

நவம்பர் 30
1976

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





இரண்டு படங்களும் ஒரே மாதிரி இருப்பதுபோலிருக்கிறதில்லையா? ஆனால் அப்படி இல்லை. கீழுள்ள படத்தில் எட்டு அம்சங்கள் மாறுபட்டிருக்கின்றன. கண்டுபிடியுங்கள்.

விடை: 1. பார்வையாளர் மூவரில் நடுவரின் வலது கை. 2. நான்காவது நபரின் கையிலுள்ள குச்சியின் அளவு. 3. பள்ளியின் இடது பக்கத்து ஜன்னல். 4. ஆறாம் எண் ஓட்டக்காரின் இடக்கை. 5-6. ஐந்தாம் எண் ஓட்டக்காரின் வாய்-எண்கள். 7. வலப்பக்கக் கீழ் புல். 8. மோட்டார் காரின் ஜன்னல்.

வாளும் கேடயமும் - 1

கல்கி

மலர் 35

இதழ் 18

எதிர்க் கட்சியினர் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று ஸ்ரீமதி இந்திரா அடிக்கடி கூறி வருகிறார். ஆனால் அவரது கட்சியே எதிர்க் கட்சியாக இருக்குமிடத்தில் இந்த நியாயம் எடுபடவில்லை.

அப்படி நியாயமாக நடந்து கொண்டிருந்தால் பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றத் தவறுவதாகத் தமிழக அரசு மீது கண்டனத் தீர்மானத்தைக் காங்கிரஸ் உறுப்பினர் திரு மாரிமுத்து சட்டசபையில் கொண்டுவந்திருக்க மாட்டார்.

ஆனால் அப்படிக் கொண்டு வந்ததும் ஒரு வகையில் நல்லதாயிற்று! கண்டனத் தீர்மானத்துக்குப் பதிலளிக்கும்வகையில் முதல்வர் சட்டசபையில் நிகழ்த்திய இரண்டு மணி நேரப் பிரசங்கம் நமக்கு லாபமாயிற்று.

கழக வெளியீடாக ஐம்பது பைசா விலையில் இந்தப் பிரசங்கத்தை அச்சிட்டிருக்கிறார்கள். கைக்கு அடக்கமான, விலையிலும் அடக்கமான நூல்தான். ஆனால் விசுவரூபம் எடுக்கும் முதல்வரின் சொல் வன்மையை எடுத்துக் காட்டும் புத்தகம். வெற்றுப் பேச்சல்ல, தமிழக அரசின் செயலாற்றலையும் விளக்குகிறது. அத்துடன் ஆங்காங்கே நகைச்சுவை கொப்பளித்துக் 'களுக்' என்ற சிரிப்பை ஏற்படுத்துகிறது.

கழகத்தின் கொள்கைகள் எல்லாவற்றையுமே நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. எப்படி இந்திரா காங்கிரஸின் கொள்கைகள் பலவற்றிலிருந்து மாறுபட்டு நிற்கிறோமோ அதேபோல் கழகத்தின் கொள்கைகள் சிலவும் நமக்கு ஒப்புதல் இல்லைதான். ஆனால் 'பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தைத் தமிழக அரசு நிறைவேற்றத் தவறுகிறது' என்பது அபாண்டமான, பொறுப்பற்ற குற்றச்சாட்டு.


முதல்வர் தமது பதிலில் முதலில் ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றியும், பிறகு காங்கிரஸ் கொணர்ந்த பத்து அம்சத் திட்டம் குறித்தும் கடைசியாக இருபது அம்சத் திட்டம் பற்றியும் சட்டசபை உரையில் பேசுகிறார். இந்த இதழில் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி அவர் சொல்வதை மட்டும் கவனிப்போம்:

''ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மிகப் பெரிய பிரும்மாண்டமான திட்டம் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டு ஐம்பத்து மூவாயிரம் கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டபோது நாமெல்லாம் மகிழ்ச்சி அடைந்தோம்... ஆனால் இந்த ஐம்பத்து மூவாயிரம் கோடி ரூபாய் என்ற இலக்கை நாம் அடைய முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வோர் ஆண்டுத் திட்டத்துக்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டதோ அந்த அளவுத் தொகைதான் இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் ஒவ்வோர் ஆண்டுக்கும் நம் மாநிலத்துக்கு ஒதுக்கப்படுகிறது... நாம் ஏறத் தாழ நானூறு கோடியிலிருந்து ஐந்நூறு கோடி ரூபாய் வரை நிதி உதவியாகப் பெற வேண்டிய கொள்கைக்கு மாறாக இருநூறு கோடி ரூபாய்தான் பெறவிருக்கிறோம்..... ஆக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் போலவே தான் இருக்கிறது. இவர்கள் அறிவித்தது நடைபெறவில்லை.''

இதைத்தான் ராஜாஜி டம்பாச்சாரித் திட்டங்கள் என வர்ணித்தார். நாம் திட்டம் போடும் முறையில் உள்ள அடிப்படைக் கோளாறுகளை அவர் விளக்கினார். எவ்வளவு வரி வருவாய் கிடைக்கும் என்று பார்த்து அதற்கேற்பத் திட்டம் வகுப்பதில்லை. மாபெரும் திட்டங்களை வகுத்துவிடுகிறார்கள். இவ்வளவு பணம் செலவழிப்பது என்று தீர்மானித்தும் விடுகிறார்கள். இதனைப் பிரபலப்படுத்தி மக்களின் ஆசைகளையும் வளர்த்து விடுகிறார்கள். மக்கள் ஆஹா ஓஹோ என்று எதிர்பார்த்து ஏமாந்து போகிறார்கள்.

திட்டத்தை அறிவித்தவர்களுக்கு அதை ஒன்றுக்குப் பாதியாவது நிறைவேற்ற வேண்டுமே என்ற கவலை பிடித்து வாட்டுகிறது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயெனக் கும்பிடடி பாப்பா — பாரதியார்


இங்கே யாராவது ஃபாஸிஸ்ட்
இருக்காங்களா பார்த்தேன்!
சி.ஐ.ஏ

எனவே எப்படியாவது திட்டத்தை நிறைவேற்றவேண்டும், அதற்குப் பணம் வேண்டும் என்று கருதி மேன்மேலும் புதிய வரிகளை விதிக்கிறார்கள். இருக்கிற வரி விகிதங்களை உயர்த்துகிறார்கள். போதாக் குறைக்குக் கரன்ஸி நோட்டுக்களை அச்சடித்தும் விடுகிறார்கள். வரி உயர்வாலும், விலைவாசி உயர்வாலும் மக்கள் மேன்மேலும் கஷ்டமடைகிறார்கள். பாலும் தேனும் பெருக்கெடுக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றத்துக்குள்ளாகிச் சோர்வடைகிறார்கள்.

இனியேனும் தேசம் விழித்துக் கொள்ள வேண்டும். யதார்த்த நோக்கில் பார்த்து வருவாய்க்குத் தக்க திட்டங்களை அளவோடு அரசு வகுக்க வேண்டும். அரசு மட்டுமே செய்யக் கூடியதான தொழில், வியாபாரத்தில் அது ஈடுபட்டால் போதுமானது. மற்றவற்றைத் தனியார் துறைக்கு விட்டு, கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலமும் வரி விகிதங்களைக் குறைப்பதன் மூலமும் அவர்களை ஊக்குவித்துத் துரிதப் பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிகாண வேண்டும்.

திட்டம் போட்டதால் பொருளாதாரம் செழிக்காது. கடின உழைப்பே நாட்டின் செல்வச் செழிப்பு என்பதை அனைவரும் உணர்ந்து செயலாற்ற வேண்டிய காலம் இது.

(அடுத்த இதழில்: பத்து அம்சத் திட்டம்)

நிர்வாகத்தில் பங்கா? முதலீட்டில் பங்கா?

'தொழிலாளருக்கு நிர்வாகத்தில் பங்கு' என்று பரவலாக இன்று அரசியல்வாதிகள் பேசுகிறார்கள். இது பற்றி நன்கு யோசித்தார்களா என்பது தெரியவில்லை.

'மத்திய அரசு நிர்வாகத்தில் பங்கு என்றுதான் சொல்லி வருகிறது. ஆனால் தமிழக அரசோ முதலீட்டிலும் பங்கு தருகிற கொள்கையைப் படிப்படியாக நிறைவேற்றி வருகிறது' என்று திருச்சியில் முதல்வர் பேசியிருக்கிறார்.

நிர்வாகத்தில் பங்கு என்பது வேறு; முதலீட்டில் பங்கு என்பது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை.

முதலீட்டில் பங்கு தொழிலாளருக்குத் தந்தால் அவர்களுக்கு, 'இந்த நிறுவனம் நமக்கும் சொந்தம், நன்கு உழைத்து இந்த நிறுவனம் சிறந்து பொலிய உதவுவோம்' என்ற எண்ணம் மனத்தத்துவ ரீதியில் ஏற்படலாம். எனவே அவர்களின் செயலாற்றல் அதிகரிக்கலாம்.

ஆனால் நிர்வாகத்தில் பங்கு என்பது வேறு விஷயம். நிர்வாகம் என்பது முன்போலன்றி இன்று ஒரு விஞ்ஞானமாகவே விளங்குகிறது. முதலீட்டாளரே நிர்வாகியும் கூட என்ற பழைய பத்தாம் பசலிக் கொள்கை இன்று துரிதமாக மறைந்து வருகிறது. நிர்வாகப் பயிற்சியும் பட்டமும் பெற்ற ஆற்றலுள்ள நபர்களைத் தேர்ந்தெடுத்து நிறுவனத்தை நிர்வகிக்கச் செய்கிற காலம் இது. பங்குதாரர்களில் மிக அதிகமான முதலீடு செய்தவர் நிறுவனத்தின் அதிபராக இருந்து அனைத்தையும் கண்காணித்த போதிலும் நிர்வாகப் பொறுப்புக்கு அதில் தேர்ந்த நிபுணர்களையே வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்.

நமது தொழிலாளர்களுக்கு நவீன நிர்வாகக் கலை உயர் பட்டக் கல்விக்கு உரிய விஞ்ஞானப் பாடமாகவே வளர்ந்து விட்டது என்பது கூடத் தெரியாது. அவ்வாறிருக்க அவர்களுக்கு நிர்வாகப் பொறுப்பு கொடுத்தால் வீணான மனஸ்தாபங்களும் சண்டை சச்சரவுகளும்தான் வளரும். உற்பத்தி அதிகரிக்காது. குறையும்.

செய்ய வேண்டுவது என்னவென்றால் அனைத்துத் தொழிலாளர்களிடமும் கடின உழைப்பின் மூலம் நமக்கு நாமே உதவிக் கொள்கிறோம். அதே சமயம் இந்த நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவுகிறோம் என்ற எண்ணத்தை வளர்ப்பது.

ராஜாஜி சிந்தனை

கற்றது கைம்மண் அளவு

கிரீஸ் தேசத்தில் சாக்கரடீஸ் என்று ஒரு ஞானி இருந்தார் என்பதை அறிவீர்கள். ''நாம் எதையும் அறிய முடியாது அதனால் எவ்வளவு கல்வி யுடையவர்களாயினும் பணிவுடையவர்களாக இருப்பதே நமது முதற் கடமை'' என்று அவர் திரும்பத் திரும்ப வற்புறுத்தி வந்தார். எப்படி நமக்கு அரசியலில் மகாத்மா காந்தியோ அப்படியே விஞ்ஞானிகளுக்கு நியூட்டன் எனும் அறிஞர். இதுவரை பிறந்த விஞ்ஞானிகளில் அவரே தலைசிறந்தவர் என்று எல்லோரும் கருதுகிறார்கள். ஆனால் அவரோ தமது அறிவும் ஆராய்ச்சியும் கடற்கரையில் ஒதுங்கும் சிப்பிகளைச் சேகரிப்பது போன்றதே என்று கூறுகிறார். அறிய முடியாத அளவு பெரிதாகும் அறிவு என்னும் மகா சமுத்திரம். ஏதோ அங்குமிங்கும் அலைகள் கொண்டு வந்து ஒதுக்கும் சிப்பிகளில் சிலவற்றைச் சேகரித்ததும் சமுத்திரத்தைப் பற்றி முற்றிலும் அறிந்துவிட்டதாக எண்ணிவிடுகிறோம். நியூட்டன் எப்படிப் பணிவுடனும் மரியாதையுடனும் அறிவைப் போற்றினாரோ அப்படித்தான் நாம் போற்ற வேண்டும். பணிவுடையோர்தான் எதையும் அறிய முடியும்.

- சமயம் என்ற கட்டுரையில்.



everest/281/ACW tm

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

புராண கைங்கரியம் 4

மூப்பட்டை வாந்தரில் மூன்றாவது பக்கம், கண்ணாடிக்குக் கலர் பூசாமல் உள்ளபடியே . விட்டிருக்கிறது. ஞானத்தில் எல்லாம் எரிகிறபோது முதலில் கரிக்கட்டையாக ஆயிற்று. அந்தக் கரியையும் போட்டுவிடாமல் எரித்தால் எல்லாம் சாம்பலாகி விடுகின்றன. ரூபம் என்பதே இல்லாமல் எல்லாம் நீற்றுப் பொடியாகி விடுகின்றன. இப்போது நிறமும் மாறிக் கறுப்பு அத்தனையும் வெள்ளை வெளேர் என்று ஆகிவிடுகிறது. வெளுப்பு சுத்த வெளிச்சத்துக்கு ரொம்பக் கிட்டின வர்ணம். அந்த வெளிச்சத்திலிருந்து வந்த எல்லாக் கலர்களும் — அதாவது பரமாத்விடமிருந்து உண்டான சகல பிரபஞ்ச வியாபாரங்களும்—அடியோடு அடிபட்டு நீற்றுப் போய், அந்தப் பரமாத்மா மட்டுமே மிஞ்சி நிற்கிற நிலை இது. நிற்பது — நீறு. எல்லாம் போனாலும் நிலைத்து நிற்கிற நிலை இது. நிற்பது—நீறு. எல்லாம் போனாலும் நிலைத்து நிற்கிற சத்தியம் திருநீறு. மகாபஸ்மம் என்கிற பரமேசுவரன் அதுதான். சம்ஹாரம் என்கிற பேரில் எல்லாவற்றையும் அழிக்கிறபோது அது கொடூரமான காரியமாகத் தோன்றினாலும், அழிப்போடு நிற்காமல், ஆதாரமான சத்தியத்தில் கரைக்கிற பரம காருண்யமான தொழிலைத்தான் சிவபெருமான் செய்கிறார். விஷ்ணு, லீலையோடு சேர்த்துச் சேர்த்து ஞானத்தைத் தந்த போது, நானா . தினுசான (ஸர்வம்) லோகம் (ஜகத்) என்ற ஒன்று கரிக் கட்டை மாதிரி பார்வைக்குத் தெரிந்தது. அதனால் தான் '**ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்**' என்றது. இப்போது லீலை எல்லாம் முடிந்து, சம்ஹாரம் என்ற பரம ஞான நிலை வந்திருக்கிற போது ஸர்வமும் இல்லை, ஜகத்தும் இல்லை. அதனால்தான் 'சிவமயம்' என்று மட்டும் சொல்கிறோம்.

ஒரே விளக்குத்தான் — பிரம்ம சைதன்யம். அதுவே சிவப்புப் பட்டை வழியாகத் தெரியும் போது பிரம்மா எனப்படுகிறது; நீலப் பட்டை வழியாகப் பார்க்கிற போது அதுவே விஷ்ணு ; வர்ணம் பூசாத ட்ரான்ஸ்பாரண்ட் வெளுப்புக் கண்ணாடி மூலம் பார்த்தால் அதுவே சிவன். ''ஒருருவே மூவுருவாய்'' என்றுதான் நம் பெரியவர்கள் பாடி வைத்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட ஃபிலாஸஃபியைத்தான் சொல்ல வேண்டும், ஒரு சித்தாந்தத்தைத்தான் நிலை நாட்ட வேண்டும் என்ற எண்ணங்கள் இல்லாமல், திறந்த மனசோடு, விசாலமான பார்வையோடு தங்களுக்குத் தோன்றிய சத்தியங்களையே சொல்லிக் கொண்டு போன மகாகவிகள் எல்லோரும் ஒரே வஸ்துதான் மும்மூர்த்திகளாக, முப்பத்து முக்கோடி தேவதைகளாக ஆகியிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். பாணன் ''ஸர்க்க — ஸ்திதி — நாச ஹேதவே'' (ஸர்க்கம் என்றால் ஸ்ருஷ்டி) என்று ஒரே வஸ்துவை மூன்று தொழிலுக்காக மூன்றானதாகச் சொல்கிறார். காளிதாஸனும் ஸ்பஷ்டமாக, ''ஏக ஏவ மூர்த்தி: பிபிதே த்ரிதா ஸா'' — (ஒன்று தான் பரமாத்மா. அது முத்தொழிலுக்காக மூன்றாகப் பிரிந்தது) என்கிறான்.

''பதினெண் புராணங்கள்'' . என்று பதினெட்டை நம் மதத்துக்கு ஓர் ஆதாரமாகச் சொல்கிறோம். இவற்றில் சிவபரமானவை, விஷ்ணுபரமானவை இரண்டும் இருக்கின்றன. சைவமானவைதான் பிரமாணமுடையவை, வைஷ்ணவமானவை தான் பிரமாணமுடையவை என்று கட்சி கட்டினால், கட்சிதான் நிற்குமே ஒழிய, சண்டைதான் மிஞ்சுமே தவிர தெளிவு, சாந்தி பிறக்காது. 'ஒன்று ஸத்; அதைத்தான் ஞானிகள் பல பேரில் சொல்கிறார்கள்' என்கிற வேத வாக்கியத்துக்கு அதிகமாக நமக்குப் பிரமாணம் இல்லை.

ஆகையால் சைவ · வைஷ்ணவ பேத பாவங்கள் இல்லாமல், எல்லோரும் அன்போடு கூடி சகல தெய்வங்களையும் பற்றிய விருத்தாந்தங்களை சிரவணம் செய்து ஒரே பலனை அடைய வேண்டும்.

திருவிச நல்லூர் அய்யாவாள் என்று ஒரு மகான் இருந்தார். ஸ்ரீதர வேங்கடேசுவரர் என்பது அவர் பெயர்; ஆனால் அவர் இருந்த ஊரை மட்டும் சொல்லி, பேரைச் சொல்லாமல் 'அய்யாவாள் அய்யாவாள்' என்றே சகல ஜனங்களும் அவரை மரியாதையோடு குறிப்பிட்டு வந்தார்கள். சுமார் முந்நூறு வருஷங்களுக்குமுன் இருந்தவர். பகவந்நாம போதேந்திராளின் 'காண்டெம்பரரி' . (சமகாலத்தவர்). போதேந்திராள் விசேஷமாக ராம நாமாவையும், கோவிந்த நாமாவையும் பிரசாரம் செய்து வந்தார். அதே சமயத்தில் அய்யாவாள் சிவநாமாவின் மகிமையைப் பரப்பி வந்தார். இரண்டு பேருக்குமே சைவ—வைஷ்ணவ பேதம் கிடையாது. அதனால் இருவருமே சேர்ந்துகூடத் திருவிசநல்லூரில் நாம சித்தாந்தத்தைப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குள் பரஸ்பரம் அன்பும் மரியாதையும் இருந்தன. கலிகாலத்தில் கண்கண்ட மருந்து எனப்படும் நாமத்தின் பிரபாவத்தை இரண்டு பேருமே நிலைநாட்டினார்கள். பஜனை சம்பிரதாயத்தில் இவர்களைத்தான் முக்கியமான ஆசாரியர்களாக ஸ்தோத்திரம் செய்துவிட்டு அப்புறம் மற்ற தெய்வபரமான நாமாவளிகள் சொல்வது வழக்கம். முதலில் போதேந்திராளைப் பற்றியும், அப்புறம் அய்யாவாளைப் பற்றியும் குருவந்தனம் சொல்லிவிட்டுத்தான் பஜனை செய்வார்கள்.

(தொடரும்)

(1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.)

அன்பார்ந்த நேயர்களுக்கு

அரியாசனத்தில் தமிழ் என்கிறீர்களே அதை உணர்ந்து அறிந்து மகிழ்கிறோமே யன்றிக் கண்ணுக்கு மெய்யாகத் தமிழை அரியாசனத்தில் அமர்த்தி நீங்கள் பார்த்திருக்க முடியாது! ஆனால் அண்மையில் கவிதா ஹோட்டலுக்குத் திரு கண்ணதாசனைப் பார்க்க நான் சென்றிருந்தபோது அந்தக் காட்சியைக் கண்டேன்!

ஒரு நீண்ட கூடத்தின் எல்லையில் திரு கண்ணதாசன் நாற்காலி போட்டுக் கம்பீரமாய் அமர்ந்திருந்தார். அங்கு மட்டும் பிரகாசமான விளக்கொளி. கூடத்தின் மற்றப் பகுதிகள் மங்கலாய் இருந்தன. வாசலில் நுழைந்து மறு முனையில் அமர்ந்திருப்பவரை நோக்கி நடக்கும்போது ஏதோ அரச சபையில் அமர்ந்திருக்கும் மன்னனை அணுக நடந்து செல்வது போலத்தான் தோன்றியது!

கண்ணதாசனைப் பொறுத்தவரை அவர் தமது பேனாவைச் செங்கோலாக்கித் தமிழை இலக்கிய உலகின் அரியாசனத்தில் அமர்த்தி விடும் ஆற்றல் வாய்ந்தவர் என்பது பற்றி யாருக்கும் ஐயமிராது. தமிழை அவர் ஆள்கிறாரா தமிழ் அவரை ஆள்கிறதா என்று புரியாத அளவுக்கு இன்றைய தமிழகத்தின் மிகச் சிறந்த சிந்தனையாளருள் ஒருவரான கண்ணதாசன் எழுத்தில் எழில் கொஞ்சுகிறது; நடையில் நயம் மிகுந்திருக்கிறது. ஆத்ம திருப்தி இல்லாமல் வருவாயைக் கருதி மட்டுமே அவர் சிலவற்றை எழுதியிருக்கலாம். அவரே அதை ஒப்புக்கொள்வார். ஆனால் தமிழுக்கு அவர் அளித்திருக்கும் சிறப்புக்கள் இதனை நாம் மறந்துவிடச் செய்கின்றன.

இந்தச் சிறப்புக்களிலெல்லாம் தலையாய ஒன்றாகச் ''சேரமான் காதலி'' என்ற அற்புத சரித்திர நவீனத்தை அவர் கல்கியில் தொடர்ந்து எழுதவிருக்கிறார்.

இது பற்றிப் பேச நான் சென்றிருந்தபோது அங்கே ஓர் இளம் டாக்டர் அமர்ந்திருந்தார். தொழிலால் வைத்தியர் ஆனாலும் மனத்தால் கவிஞர். சிறிய அளவில் ஒரு பத்திரிகை நடத்தி வருகிறார். கண்ணதாசனை நோக்கும்போது அவர் கண்களில் குடிகொண்டிருந்த மதிப்பையும் மரியாதையையும், பளிச்சிட்ட மன நிறைவையும் மகிழ்ச்சியையும் கண்டு நான் அதிசயிக்கவில்லை. இப்படி எத்தனை ஆயிரம் தமிழர்கள் இன்று கண்ணதாசன் என்ற பெயரைச் சொன்னதுமே மெய் சிலிர்க்கிறார்கள் என்றுதான் எண்ணிப் பார்த்தேன்.

''எனக்குத் தெரிந்த நண்பர்கள் கல்கியை வாங்கியதும் முதலில் கடைசிப் பக்கத்தைத்தான் படிக்கிறார்கள்'' என்றார் அந்த இளம் டாக்டர்.

''அதை இவரே எழுதியிருக்கிறாரே!'' என்றார் கண்ணதாசன். '''கல்கியின் கடைசிப் பக்கத்தை வாசகர்களைப் பொறுத்தவரை முதல் பக்கமாக்கிய கண்ணதாசன்' என்று என்னைப் பற்றிப் பெருந்தன்மையுடன் குறிப்பிட்டு அண்மையில் எழுதியிருக்கிறார்''

அதுமட்டுமல்ல, கண்ணதாசனின் கடைசிப் பக்கத்தில் பத்திரிகை ஆசிரியன் என்ற முறையில் என்னுடைய பெயரும் ''இம்பிரிண்டில்'' வந்து கொண்டிருந்ததைப் பெருமையாகவே நான் கருதினேன். அந்தப் பெருமிதத்துக்கு இப்போது முடிவு ஏற்படப் போகிறது.

ஆனால் என்னுடைய நஷ்டம் வாசகர்களுக்கும் கல்கிப் பத்திரிகைக்கும் பன்மடங்கு லாபமாகவும் மாறப் போவதை எண்ணி மகிழ்கிறேன். ஒரு பக்கம் மட்டுமே எழுதி வந்த கண்ணதாசன் இனி கல்கியில் ஐந்தாறு பக்கங்கள் எழுதுவார் அல்லவா?

கண்ணதாசனின் தமிழ் நடையைப் பார்த்து வியப்பவர்கள் இதனை எங்கே பயின்றார் என்று யோசிப்பதுண்டு. எங்கும் பயிலவில்லை, அது ரத்தத்திலேயே ஊறி வருகிற ஒன்று. கிராமப்புறங்களில் இன்றைக்கும் விசேஷ வைபவங்களின்போது கற்பனையாகப் பாடும் பெண்மணிகள் உண்டு. அப்படிப்பட்ட ஆற்றல் அளவுக்கு மீறியே கொண்டிருந்தவர் விசாலாட்சி ஆச்சி. கண்ணதாசனின் தாயார். சாதாரணமாகப் பேசும்போதுகூட கவிதை நயம் சொட்ட வார்த்தைகள் பிறக்கும். ஏன், மரணத் தறுவாயில் கூட அவர் அப்படித்தான் பேசினார். கலங்கி நின்ற கண்ணதாசனைச் சுட்டிப் பிறரிடம் சொன்னார்: ''சின்னமுள்ள தம்பி, சிந்தை உருகுகிறான்!'' (சின்னமுள்ள: தன் தனித்தன்மையால் முத்திரை பதித்துள்ள).

கண்ணதாசன் மூன்றாவது ஃபாரத்துக்கு மேல் படித்ததில்லை. பொருளாதாரத் தட்டுப்பாடுதான் காரணம். ''இன்னும் இருபத்திரண்டு ரூபாய் யாராவது எனக்காகச் சம்பளம் கட்டியிருந்தால் நான் ஹிந்தியில் விசாரத் தேறியிருப்பேன். அல்லது தமிழ்ப் பண்டிதராகியிருப்பேன்'' என்றார்.

'நல்லவேளை யாரும் பணம் கட்ட முன் வரவில்லை' என்று நினைத்துக் கொண்டேன். அப்படிக் கட்டியிருந்தால் தமிழுக்கோ ஹிந்திக்கோ ஒரு பண்டிதர் கிடைத்திருக்கலாம். ஆனால் தமிழ் இலக்கிய உலகுக்கு ஒரு கண்ணதாசன் கிட்டாமல் போயிருக்கலாமல்லவா?

இவர் தகப்பனார் பர்மாவில் இருந்து நகரத்தார் பலருக்குத் தமது பர்மிய மொழி ஞானத்தால் உதவி வாழ வைத்தார். தமிழகத்திலிருந்த குடும்பத்துடன் தொடர்பு சிறிது சிறிதாகக் குறைந்தது. இங்கே குடும்பத்துக்கு இருந்த சொத்தும் கவனிப்பார் இன்றியே கைவிட்டுப் போனது. ''இப்போது கிடைத்துள்ள பழைய தஸ்தாவேஜுகளின் படி ஆராயப் புகுந்தால் அயனாவரம் அருகே விசாலமான நிலப்பரப்பு குடும்பத்துக்குச் சொந்தம் என்று தெரிய வருகிறது'' என்றார் கண்ணதாசன். ''மீட்க முடியுமா என்று யோசித்து வருகிறேன்!''

மூன்றாவது ஃபாரம்தான் படித்தார் என்றாலும் கல்வித் தரம் அந்த நாளில் உயர்ந்

இருந்ததால் இலக்கணமெல்லாம் முக்கால் திட்டத்துக்கு அப்போதே கரைத்துக் குடித்தாயிற்று. மிச்சத்தைத் தாமே கற்று அறிந்து கொண்டு விட்டார் பின்னாளில். ''அக்காலத்தில் மனப்பாடம் செய்வது அதிகம். எனக்கு அது இலகுவாகவும் இருந்தது. ஜீவா எழுதி வெளியிட்ட தலைவர்களின் வாழ்க்கை வரலாறு நூல்கள் ஓரணாவுக்குக் கிடைக்கும். அப்படியே உருப்போட்டு விடுவேன். ஒரு முறை வி. ஆர். தாஸ் பற்றி நான் பள்ளிக்கூட அரங்கில் பேசியதைக் கேட்டுத் தலைமை ஆசிரியர் உள்பட அனைவரும் வியந்து போனார்கள்'' என்று கூறிச் சிரித்தார் கண்ணதாசன்.

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவும் இதே போல் சிறுவனுக்கு மனப்பாடமாகி விட்டன. இளைஞரானபோதோ – பதினேழாவது வயதில் ''திருமகள்'' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகவே விளங்கினார்..

''அப்போதுதான் நான் கல்கி அவர்களையும் சதாசிவம் அவர்களையும் முதன் முதலாகச் சந்தித்தது. புதுக்கோட்டைக்கு வந்திருந்தபோது என்னைத் தேடி அவர்கள் வந்தார்கள். மீரா திரைப் படத்துக்கு விமர்சனம் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொள்ள. திருமகள் பத்திரிகை ஆசிரியன் என்றால் ஏதோ பெரிய மனுஷனாய் இருப்பான் என்று எண்ணியிருப்பார்கள். இளைஞனை என்னைப் பார்த்ததும் முதலில் ஏற்பட்ட திகைப்பு நீங்கப் பெற்று ரொம்ப மகிழ்ச்சியுடன் வந்த காரியத்தைக் கூறி விடை பெற்றார்கள்.''

'கல்கி'யுடன் ஏற்பட்ட முதல் சந்திப்பு அது. கடைசிச் சந்திப்பு அவர் காலமான சமயத்தில். தென்றல் பத்திரிகையில் தலையங்கம் எழுதாமல் அன்னாருக்கு அஞ்சலியாக அப்பகுதியை வெற்றிடமாக்கினார் கண்ணதாசன். அதற்கு அன்றைய அவரது வட்டாரத்தில் பலத்த எதிர்ப்பு இருந்தது. கண்டனக் கடிதங்கள் கூட வந்தன. சிலவற்றைப் பிரசுரித்துத் தக்கபடி பதிலும் எழுதினார்.

அமரர் கல்கி அவர்களின் நினைவு நாள் டிசம்பர் 5ந் தேதி. அதை யொட்டி வெளியாகும் டிசம்பர் 7ந் தேதி இதழில் கண்ணதாசனின் தொடர்கதை ஆரம்பமாகிறது. புதியதொரு சரித்திரத் தொடர்கதையைத் தருதியுள்ள ஒருவரைக் கொண்டு எழுதச் செய்வதை விடச் சிறந்த விதத்தில் கல்கி அவர்களுக்கு நாம் அஞ்சலி செலுத்த முடியாது.

தமிழ் இலக்கிய உலகுக்கு ஓர் அருமையான காணிக்கையாகக் கண்ணதாசன் வழங்கப் போகும் சேரமான் காதலியைப் படிக்கவிருக்கும் நம்முடைய அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்கிறேன்.

ஆசிரியர், கல்கி





○ தி. ஜானகிராமன்.



○ ஜெயகாந்தன்.

படித்தோம், சொல்கிறோம்!

பிடி கருணை

"நான் மடிக் கதைகள்தான் எழுதுவேன் என்று நினைக்காதீர்கள். என் கதைகளில் விழுப்புக் கதைகளும் இடம் பெற்றிருக்கின்றன" என்று ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகச் சொல்லிவிடுவார் திரு தி. ஜானகிராமன்.

இந்தத் தொகுதியில் "பிடி கருணை" கதையிலும் "சந்தானம்" சிறுகதையிலும் காணப்படும் நடை நம்மையறியாமல் குலுங்கக் குலுங்க நகைக்க வைத்துவிடுகிறது.

"பாயசம்" உணர்ச்சிக் கொந்தளிப்பு நிறைந்த கதை. சாமநாது சுப்பராயனைப் பழிதீர்த்துக் கொள்ளக் கல்யாணத்தில் பாயசச் சோட்டுத்தவலையைக் கவிழ்க்கும்போது அவர் மீது நாம் அளவு கடந்த ஆத்திரத்தைக் கொட்டும்படியாகச் செய்து விடுகிறார். 'இப்படியும் ஒரு கிராதகனா?' என்று நம் மனமே சீறுகிறது.

"தாத்தாவும் பேரனும்" கதையில் க்ஷத்திரிய தர்மத்தில் பட்டமகிஷிகளின் குழந்தைகளாக இல்லாதவர் படும் மனச் சஞ்சலத்தைத் தத்ரூபமாகத் தந்திருக்கிறார்.

கதையின் கடைசி வரிகள்: "எல்லோரும் மரணத்துக்குப் பயப்படுவார்கள். தாத்தா சாப்பாட்டுக்கே பயந்து விட்டார். அவர் சுத்தமான க்ஷத்திரியர். சுத்த க்ஷத்திரியர்கள் தோற்றுப் போகலாம். தற்கொலை செய்து கொள்ளலாம். எந்தப் பெண்களையும் தீண்டிச் சுவைக்கலாம். அவர்கள் தொட்டதை மாத்திரம் சாப்பிடக் கூடாது! என்ன அழகான தர்மம்! அவரது மகிமைகளைப் பற்றி அர்ஹதரிடம் சொல்ல வேண்டும்!" என்று கூறிக்கொண்டே விடுடபன் நகர்ந்தான். மகாராஜாவை விழுங்கிய தடாகம் வயிறு புடைக்கத் தின்றவன் போல் உறங்கிக்கொண்டிருந்தது...."

"நேத்திக்கு" — குதிரைப் பந்தயத்தில் ஈடுபடுபவர்களின் மனநிலையை அற்புதமாகச் சித்திரிக்கிறது. இதோடு மாப்பிள்ளைத் தோழன் போன்ற அழுத்தமான சிறுகதைகள் கதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. ஆனால் திரு தி. ஜானகிராமன் தம் கதைகளைப் பற்றி "இலக்கண சுத்தமான சிறுகதைகள் அல்ல. அந்த வகை எப்போதும் என் கைவசமானதில்லை. குடிசைத் தொழில் பீங்கான் போல பொருக்கு, கட்டி எல்லாம் சேர்ந்திருக்கின்றன. இப்போது நீக்குவது சிரமம். இந்த நேரம் ஒரு முறை மீண்டும் படித்தபோது பழைய ஓலைக் கிலுப்பையை ஆட்டுவது போலிருந்தது. இதற்கும் பத்துப் பேர் இருப்பார்கள் என்ற நம்பிக்கை. இந்த டில்லிக் குளிரில் நம்பிக்கை போர்வை மாதிரி தோற்ற மளிக்கிறது!" என்று தாமே குறிப்பிட்டிருக்கிறார். 'அதிர்வு' 'மேரியின் ஆட்டுக்குட்டி' போன்ற விழுப்புக் கதைகள் இடம் பெற்றுள்ளதால் அவர் இப்படி ஒரு வேளை மனச் சஞ்சலப்படுகிறாரோ?

பி. எஸ். எம்.

பிரசுரம்: மீனாட்சி புத்தகநிலையம், 60, மேலக் கோபுரத் தெரு, மதுரை—1. விலை: ரூ. 5.00.

சக்கரம் நிற்பதில்லை

ஜெயகாந்தனின் ஐந்து சிறுகதைகள் இடம் பெற்றுள்ள இந்தத் தொகுதியிலே 'இந்த இடத்தில் இருந்து' 'சக்கரம் நிற்பதில்லை' ஆகியன புதுக் கதை வகையைச் சேர்ந்தவை. இவ்விரு கதைகளிலும் ஆசிரியரின் கூரிய பார்வை பளிச்சிடுகிறது. முதற் கதையில் பண்டிதர் ஒருவரை மாடியில் உட்கார வைத்து ஊர் நிலை அவ்வளவையும் நோட்டம் விடச் செய்கிறார். இரண்டாவது கதையில் ரயிலில் உட்கார வைத்துச் சக்கரம் நிற்பதில்லை என்று நிரூபிக்கிறார்.

'குருக்கள் ஆத்துப் பையன்' ஆகம சாஸ்திரங்களை அறியாமலே பூஜை செய்தாலும் அவனது நம்பிக்கையை நன்கு சித்திரித்துக் காட்டுகிறார்.

'அரைகுறைகள்' கதையின் சாயையில் எத்தனையோ கதைகள் வந்திருக்கின்றன. கணவன் தன் மனைவிக்கு மன வியாதி என்று எண்ணி டாக்டரிடம் அழைத்துச் செல்லுகிறான். அவளோ அவனையே மன வியாதிக்காரனாக்கிவிட்டு வருகிறாள். இக்கருத்தை ஜெயகாந்தன் கம்பீரமாக எழுதிச் செல்லுகிறார். இதே கருத்தை அந்தக் காலத்தில் ஸ்ரீ கி. ரா போன்றவர்கள் நகைச்சுவை கதையாக்கி வடித்திருக்கிறார்கள். 'மனைவியைக் கவருவது எப்படி?' என்று கணவன் 'மாதாடு'வான். கணவனைக் கவருவது எப்படி?' என்று மனைவி 'தோதாடு'வாள்.

ஜெயகாந்தன் 'டச்' இருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். சீஸர் என்னும் கதையும் 'அரை குறைகள்' வகையைச் சேர்ந்ததுதான்.

தெலுங்கிலே 'பாரதி' என்று ஓர் இலக்கியப் பத்திரிகை. அது திகம்பரக் கவிகளைத் தேடிச் சென்று கவிதைகளை வாங்கிப் பிரசுரித்ததில்லை. ஆனால் அதில் வெளியானால் பெருமை என்று திகம்பரக் கவிகள் சிலர்

எழுதினார்கள். அவர்கள் கவிதையைப் பிரகரித்த பாரதி சொல்லிற்று: 'எங்களுக்கேற்ப எழுதினார்கள். பிரகரித்தோம் !' என்று. 'எங்கள் கவிதையும் தேவைப்பட்டது; பாரதி பிரகரித்தது' என்றார்கள் இவர்கள்.

இதைச் சொல்வதற்குக் காரணம், ஆசிரியரது முகவுரையில் உள்ள சில வரிகள் :

'' நான் எழுத ஆரம்பித்த காலத்திலிருந்து எந்தப் பத்திரிகைக்கும் நாளுக எழுதப் போனதில்லை என்ற செய்தியைப் பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன். பத்திரிகைகளுக்கு இலக்கியத்திலும் எழுத்தாளனிடமும் இருந்த ஈடுபாட்டுக்கு ஓர் உதாரணமாகவே அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள் என்பதை விளக்கியிருக்கிறேன் !''

இந்தக் கூற்றினை, இந்தத் தொகுதியில் வரும் 'சீஸர்' கதைப்படி ஐயப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக ஏற்றுக் கொள்ள வேண்டியது தான். ஆனால், கதைகளில் ஐந்துக்கு மூன்று பழுதில்லாமல் அவை பிரசுரமான பத்திரிகைக்கு ஏற்பவே அமைந்துள்ளன! — ரா.வீ.

பிரசுரம் : மீனாட்சி புத்தக நிலையம், 60 மேலக் கோபுரத் தெரு, மதுரை—625001 விலை: 4.00

இராகவ காவியம்

வால்மீகி இயற்றிய இராமாயணத்தைக் கங்காநதியின் பிரவாகமாகக் கொண்டால், கம்ப ராமாயணத்தைப் பொங்கி வரும் காவேரி நதியின் புதுப் புனலாகக் கொள்ளலாம். இவற்றுக்குப் பிறகு வந்த துளசி இராமாயணத்தை, திரிவேணி சங்கமத்தில் உதித்த ஸ்ரீ ராம பக்தி வெள்ளமாகக் கருத இடம் இருக்கிறது. இம்மூன்று கவி வெள்ளங்களிலும் பொங்கித் ததும்பி உதித்த நான்காவது வெள்ளமாகச் சொல்லலாம், இந்நூலை.

அப்படி வரிசைப்படுத்துவதற்கேற்ற புது நடை, புதுக் கற்பனை, புது நிகழ்ச்சிகள் இந்தக் காவியத்தில் மோதியடித்துக் கொண்டு வருகின்றன.

எதிலும் எளிமையை விரும்பும் இந்நாளில் இந்த இராகவ காவியம் நல்லதொரு வரவேற்பைப் பெறும். சிறந்த ஹிந்திக் கவிஞரான மைதிலிசரண் குப்தருடைய ''ஸாகேத்'' என்னும் மகா காவியத்திலிருந்து சில நல்ல கருத்துக்களைத் தமது காவியத்தில் சேர்த்துக் கொண்டிருப்பதாக இந்நூலாசிரியர் கூறுகிறார். ஊர்மிளையைப் பற்றிச் சற்று விரிவாகவே சிந்தித்து இலட்சுமணனும் அவளும் வாழ்ந்த இன்ப வாழ்வைப் பற்றி 'ஸாகேத்'தின் அடியொட்டி விளக்கியிருப்பது இக்காவியத்துக்கு பெருமை சேர்த்திருக்கிறது.

மிக மிக எளிய கவிதைகளில், விளக்கவுரை ஏதும் தேவைப்படாமல் ராமாயணக்கதையை விறுவிறுப்பாக எடுத்துக் கூறும் பாங்கு பாராட்டுக்குரியது. முதற் பாகமாகிய இந்நூலில் பால காண்டம், அயோத்தியா காண்டம் இரண்டும் இடம் பெற்றிருக்கின்றன.

இக்காவியத்தைப் பற்றிக் குறிப்பாகக் கூற வேண்டியது ஒன்று உண்டு — இது கம்ப ராமாயணத்தை ஒட்டியோ, அல்லது வெட்டியோ எழுந்தது அல்ல; கம்பராமாயணத்தின் வழி நூலாக எழுந்ததாகவே கொள்ள வேண்டும்.

கருத்து வேறுபாடுகளுக்கு என்றுமே இடமுண்டு; ஆனால் வேறுபட்ட கருத்துக்களுக்கும் மாறுபட்ட கருத்துக்களுக்கும் வேற்றுமை உண்டு. மாறுபட்ட கருத்தைத் தெரிவிப்பதானல் ஆதி காவியத்துக்கு இழுக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது இன்றியமையாததாகும். இந்நூலாசிரியர் கம்ப ராமாயணக் கருத்துக்களிலிருந்து பல இடங்களில் வேறுபட்டு நின்றாலும் மாறுபட்ட கருத்து எதையும் சொல்லவில்லை. அடுத்த பதிப்பில், பிழைகளை யெல்லாம் களைந்து சுத்தமான பதிப்பாக எடுப்பான தோற்றத்தில் வெளியிட வேண்டும். — ஸோமாஸ்

ஆசிரியர்: தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்; விற்பனை உரிமை: வானதி பதிப்பகம், 82-11, பாண்டி பஜார், தியாகராய நகர், சென்னை 17; விலை: ரூ. 11—00.

வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம்....

வல்லப கணபதி த்ரிசதி நாமாவளி இது வரை அச்சில் கிடைக்காமல் இருந்து வந்தது. ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமிகள் ஆக்ஞைப்படி பழைய ஏடுகளிலிருந்து அதனை எடுத்துச் சிவ பஞ்சாக்ஷர அஷ்டோத்ர நாமாவளிகளுடன் சேர்த்துப் பிரகரித்திருக்கிறார் ஸ்ரீ ரங்கநாத சாஸ்திரிகள். இருபத்தைந்து பக்கங்கள் கொண்ட இந்தப் பிரசுரம் கணபதி பக்தர்களுக்கு இலவசமாகக் கிடைக்கிறது. தபால் செலவுக்கு ஸ்டாம்பு அனுப்பினால் போதுமானது. விலாசம்: ரங்கநாத சாஸ்திரிகள், 116டி, வேளாளத்தெரு, சென்னை 84

Bhavan's Journal Diwali Number

பவன்ஸ் ஜர்னல் என்றாலே தெய்வ மணம் கமழும் கட்டுரைகளும் ஆன்மீக தத்துவக்

○ மேஜர் அஹ்லுவாலியா ○ வேங்கடகிருஷ்ண அய்யங்கார்





கட்டுரைகளும் இடம் பெற்றிருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும்.

தீபாவளி சிறப்பிதழில் இவை இன்னும் அதிகமாகவே இடம் பெற்றுள்ளன. அத்துடன் கண்ணனின் பெருமைகளை வர்ணிக்கும் சூர்தாஸரின் பாடல் ஒன்றுக்கு ஓவியர் வினுவின் இரு வர்ணப் படங்கள் மலருக்கு அணி செய்கின்றன. வைஷ்ணவ ஜனதோ என்ற பாடலில் நரசிமேத்தா எந்த குண நலன்களை சுத்தமான வைஷ்ணவனுக்கு எடுத்துக் கூறுகிறாரோ அந்தக் குண நலன்களுக்கு எடுத்துக்காட்டான ஞானிகளை ஓவியர் கனு தேசாய் அற்புத வண்ணப் படங்களாகத் தீட்டினார். அவற்றைப் புகைப்படங்களாக்கிப் பிரசுரித்திருக்கிறார்கள்.

ஆன்மீகக் கட்டுரைகள் தவிர, காந்திஜி பற்றி மார்டின் லூதர் கிங் எழுதியதும் பவன்ஸ் ஜர்னல் ஆசிரியர் ராமகிருஷ்ணன் மானெக்ஷா அவர்களைச் சந்தித்து உரையாடியது பற்றிய கட்டுரையும் சுவையான அம்சங்களில் சில.

கலாசாரப் பகுதியில் மோகினி ஆட்டம் பற்றி கனக் ரேலே எழுதியுள்ளார். ஸ்ரீமதி எம். எஸ். அவர்களைப் பேட்டி கண்டு எழுதிய கட்டுரை மலருக்குச் சிறப்பு சேர்க்கிறது.

கிடைக்குமிடம்: பாரதீய வித்யாபவன், பம்பாய் – 7; விலை: ரூ. 4.00. —ஜெயந்தி

மண்ணும் இமயமலை

ஏதற்காக எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடிக்க வேண்டும் என்று கேட்டபோது எட்மண்ட் ஹிலரி சொன்னார்: ''எவரெஸ்ட் அங்கே இருக்கிறதே! அதனால்தான்'' என்று.

இதேபோல் ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தியிடம், ''இலக்கியத் தரமான நூல்களை வெளியிட்டு வாசகர் வட்டம் நஷ்டம் அடைந்து கொண்டே இருக்கும்போது எதற்காக அவற்றைப் பிரசுரிக்க வேண்டும்?'' என்று கேட்டால், ''இலக்கியத்தரமான நூல்கள் இருக்கின்றனவே! அதனால்தான்'' என்று பதிலளிப்பார் போலும்!

ஆம், ஸ்ரீமதி லட்சுமியும், அவர் கணவர் திரு கிருஷ்ணமூர்த்தியும் வாசகர் வட்டத்தை லாப நோக்குடன் ஆரம்பித்து நடத்தவில்லை. நல்ல இலக்கியத் தரம் வாய்ந்த புத்தகங்கள் சில உடனடியாக விற்பனையாகாது. போ. ட முதல்கூட உடனடியாகத் திரும்பாது. ஆகவே, இத்தகைய காரணங்களால், தமிழுக்கு நல்ல இலக்கியத் தரம் வாய்ந்த புத்தகங்களும் எழுத்தாளர்களும் கிடைக்காமல் போய்விடுவார்களோ என்ற எண்ணத்தால் இத்தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கிறார்கள். தமக்கு ஓரளவு பண நஷ்டம் ஏற்பட்டாலும் தாங்கக் கூடிய வசதியை இறைவன் அளித்திருக்கையில் தமிழிலக்கியத்துக்குத்தான் சிறிது சேவை புரியலாமே என்று முன்வந்திருக்கிறார்கள். இவர்களது சமீபத்திய பிரசுரம் மண்ணும் இமய மலை.

மேஜர் ஆஹ்லுவாலியா பஞ்சாபைச் சேர்ந்த சீக்கியர். சிறு வயது முதலே அவருக்கு வெண்பனி மூடிய மலைச் சிகரங்களிலும், மலை ஏற்றத்திலும் தனி ஈடுபாடு. ராணுவத்தில் சேர்ந்த ஆஹ்லுவாலியாவுக்கு, எவரெஸ்ட் மலையில் ஏறும் குழுவினருடன் சேர்ந்து கொள்ளும் அரிய வாய்ப்புக் கிடைக்கிறது. அந்தச் சமயத்தில் அவர் கல்யாணம் வேறு நிச்சயிக்கப் பெற்றோர்கள் முயல்கின்றனர். கல்யாணமா? எவரெஸ்ட் ஏற்றமா? இதில் ஏதாவது ஒன்றைத்தான் தேர்ந்தெடுக்க முடியும் என்ற நிலை. அந்நிலையில் கல்யாணத்தைத் தள்ளி வைத்துவிட்டு, எவரெஸ்ட் மலை ஏறும் குழுவில் சேர்ந்தார்.

மேஜர் ஆஹ்லுவாலியா எவரெஸ்ட் சிகரத்தை அடைந்ததும் அவருக்கு ஏற்பட்ட உணர்ச்சிகள் யாவை ?

''உலகத்தின் மிக உயரமான இடத்திலிருந்து நாற்புறமும் நோக்கினேன். அவ்வளவு உயரத்தில் நின்று உலகத்தின் பேரெழில் காட்சிகளை யெல்லாம் கண்ணுற்றபோது உள்ளத்தில் அதிகமாகத் தூக்கி நிற்கும் பாவனை என்ன?—மனிதனின் சிறுமை என்ற அடக்க உணர்வு.''

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து அங்கு என்ன செய்தார் என்ற ஆவல் எழுமல்லவா?

''என்னுடைய தாயார் ஒரு ஜபமாலையைக் கொடுத்திருந்தார்கள். அதையும் என்னிடமிருந்த பாபா நானக்கின் படத்தையும் பனியைத் தோண்டி அதனுள் அடக்கினேன். (உடன் சென்ற) பூடோர்ஜி, தலாய் லாமா சின்னமுடைய வெள்ளிப் பதக்கமொன்றைப் புதைத்தார். ராவத், துர்க்கையின் பிரதிமை ஒன்றை நிறுவி அதற்குத் தீபாராதனை செய்தார். இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. என்னுடைய கைக்கடிகாரத்தைக் கழற்றி 1965ம் ஆண்டு அங்கு வந்த அமெரிக்கக் குழு நாட்டிய கொடிக் கம்பத்தில் அதைக் கட்டினேன்'' என்கிறார். அர்த்த பாவம் பொதியப்பெற்றுள்ள இந்த வரிகள் நம்மை நெகிழ்விக்கின்றன.

கடும் புயலையும், கடுங் குளிரையும் இன்னும் பலப்பல இடையூறுகளையும் ஈடு கொடுத்து எவரெஸ்ட் உச்சியைத் தொட்டு வெற்றி வாகையோடு திரும்பிய மேஜர் ஆஹ்லுவாலியாவின் வாழ்வில் ஒரு திடீர் திருப்பம்:

''மூன்று நண்பர்களுடன் ஒரு நாள் மாலை நான் அந்தப் பாதையில் சென்று கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு துப்பாக்கி ரவையின் ஒலி. நான் கீழே சாய்ந்தேன். அந்த ரவை என் கழுத்தில் பாய்ந்திருக்கிறது என்று பின்னால்தான் புரிந்தது. நான் நினைவிழந்தேன்'' என்கிறார்.

இந்த விபத்து பல மாதங்களுக்கு நடக்கக் கூட முடியாமல், சக்கர நாற்காலியில் நடமாட வைத்துவிட்டது அவரை. பிரிட்டனுக்குச் சென்று சிகிச்சை பெற்றார். இவற்றையெல்லாம் அரிய வாழ்க்கை வரலாறாக மேஜர் ஆஹ்லுவாலியா ஆங்கிலத்தில் எழுதியதைத் திரு தி.சா. ராஜு தெளிவான தமிழில் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். தமிழிலக்கிய மாலைக்கு மற்றும் ஒரு நறுமலர். -எஸ்.வி.எஸ்.

[பிரசுரம்: வாசகர் வட்டம், 14, தணிகாசல செட்டி ரோடு, தியாகராய நகர், சென்னை—600017, விலை: ரூ. 12.50.]

சிவகாமியின் சபதம்

நாற்பத்துநாலாம் அத்தியாயம்

கடைசிப் பரிசு

எல்லையற்ற அந்தகார சமுத்திரத்தின் கர்ப்பத்திலேயிருந்து, மோனக் கடலின் அடிவாரத்திலிருந்து, சிவகாமி மெதுவாக மேலே வந்து கொண்டிருந்தாள்.

கன்னங் கரிய இருளிலே திடீரென்று சிறு சிறு ஒளித் திவலைகள் தோன்றிச் சுழன்று வந்தன.

நிச்சப்தத்தின் மத்தியிலிருந்து ஸ்வரூபம் தெரியாத ஒரு சத்தம் எழுந்தது. முதலில் அது மெல்லியதாயிருந்து வர வரப் பெரிதாகச் சமுத்திரத்தின் பேரிரைச்சல் போலக் கேட்டது.

அந்தப் பெரிய அகண்டாகார சத்தத்தின் நடுவே சிறு சிறு ஒலிகள் விட்டு விட்டுக் கேட்கத் தொடங்கின.

அந்தச் சிறு ஒலிகள் சிறிது நேரத்துக்கெல்லாம் மனிதர்களின் பேச்சுக் குரலாக மாறின.

ஆ! இரண்டு குரல்கள் மாறி மாறிக் கேட்கின்றன. அவற்றில் ஒன்று சிவகாமிக்குத் தெரிந்த குரல்; நாகநந்தி பிக்ஷுவின் அடிவயிற்றிலிருந்து கிளம்பி வரும் கம்மலான கர்ஜனைக் குரல்.

இன்னொருவரின் குரலும் தெரிந்த குரல் போலத்தான் தோன்றுகிறது. ஆனால், அது யாருடையது?





சிவகாமி தன்னுடைய கண்ணிமைகள் இன்னும் மூடியிருக்கின்றன என்பதை மனத்துக்குள் உணர்ந்தாள்.

ஒரு பெரு முயற்சி செய்து கண்களை இலேசாகத் திறந்தாள்.

அப்போது அவள் முன்னால் தோன்றிய காட்சியானது, வியப்பையும் இரக்கத்தையும் பரபரப்பையும் பயங்கரத்தையும் ஒருங்கே அளித்ததோடு, இது தூக்கத்திலே காணும் கனவா அல்லது பிரமை கொண்ட உள்ளத்திலே தோன்றும் கற்பனைக் காட்சியா என்று சந்தேகிக்கும்படியும் செய்தது.

கற்பாறையைக் குடைந்தெடுத்த பௌத்த விஹாரம் ஒன்றில் தரையிலேதான் கிடப்பதை உணர்ந்தாள். மேடு பள்ளமான பாறைத் தளமானது தேகம்பட்ட இடமெல்லாம் சில்லிடும்படி அவ்வளவு குளிர்ந்திருந்தது.

அவள் கிடந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் தரையிலே ஒருவர் விழுந்து கிடக்க, அவருக்குப் பக்கத்தில் சம்ஹார ருத்ரமூர்த்தியைப் போல் கையில் வாளுடன் ஒருவர் கம்பீரமாக நின்றார். இன்னும் சற்றுத் தூரத்தில் வாளும் வேலும் ஏந்திய வீரர்கள் பலர் முகத்தில் வியப்பும் ஆங்காரமும் குரோதமும் மரியாதையும் போட்டியிடும் பாவத்துடன் நின்றார்கள். அவர்களில் சிலர் ஏந்திக் கொண்டிருந்த தீவர்த்திகளிலிருந்து கிளம்பிய ஒளிப்பிழம்பும் புகைத் திரளும் அந்தக் குகை மண்டபத்தை ஒரு யமலோகக் காட்சியாகச் செய்து கொண்டிருந்தன.

பிரம்மாண்டமான சிலை வடிவில் யோக நிஷ்டையில் அமர்ந்திருந்த பகவான் புத்தர் மேற்படி காட்சியை அரைக் கண்ணாலே பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டிருந்தார்.

சிவகாமி தனக்குமுன் தோன்றியதெல்லாம் கனவா, பிரமையா அல்லது உண்மைக் காட்சிதானா என்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்காக ஒரு தடவை கண்ணை மூடி மறுபடியும் திறந்தாள். உண்மைக் காட்சிதான் என்று அறிந்து கொண்டாள். கொஞ்சம் கொஞ்சமாக அறிவு தெளிவடைந்தது. சிந்தனா சக்தியும் ஏற்பட்டது. தரையில் கிடப்பது நாகநந்தி பிக்ஷு என்பதைக் கண்டாள். அவருக்கு அருகில் கம்பீரமாகக் கையில் வாள் ஏந்தி நின்று கொண்டிருப்பவர் தளபதி பரஞ்சோதிதான் என்பதையும் ஊகித்து உணர்ந்தாள்.

அவர்களைச் சுற்றிலும் சற்றுத் தூரத்தில் விலகி நிற்பவர்கள் தளபதியுடன் வந்த பல்லவ வீரர்களாய்த் தானிருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் எல்லோரும் இங்கே எப்படி வந்து சேர்ந்தார்கள்? தான் இவ்விடம் வந்த விதம் எப்படி?

ஸ்வரூபம் தெரியாமல் கேட்டுக் கொண்டிருந்த பேச்சுக் குரல்கள் தெளிவடைந்தன. நாகநந்தி சொல்லிக் கொண்டிருந்தார்:

''அப்பனே பரஞ்சோதி! நீ நன்றாயிரு! நீ மிக்க குணசாலி; மிக்க நன்றியுள்ளவன். உன்னை ஒரு சமயம் நாகப்பாம்பு தீண்டாமல் இந்தக் கை காப்பாற்றியது. உன்னைப் பல்லவன் சிறையிலிருந்து இந்தக் கை விடுதலை செய்தது. நீ ஆசாரியராகக் கொண்ட ஆயனச்சிற்பியாரின் உயிரை இந்தக் கை ரட்சித்தது. அவருடைய மகள் சற்று முன்னால் காபாலிகையின் கத்திக்கு இரையாகாமல் இந்தக் கை காப்பாற்றியது. அப்படிப்பட்ட என் வலது கையை நீ வெட்டி விட்டாய். அடியோடு துண்டித்து விட்டாய்! ஆ! ரொம்பவும் நன்றியுள்ள பிள்ளை நீ!''



அப்போது பரஞ்சோதி குறுக்கிட்டுப் பேசினார்: ''ஆஹா; கள்ள பிக்ஷுவே! உம்முடைய திருக்கரத்தின் அற்புத லீலைகளை ஏன் நடுவிலே நிறுத்தி விட்டீர்? மகேந்திர பல்லவர் மீது விஷக் கத்தியை எறிந்தது அந்தக் கைதானே? சற்று முன்னால் ஆயனர் குமாரியைத் தூக்கிக் கொண்டு சுரங்க வழியில் நீர் ஓடப் பார்த்ததும் அந்தக் கையின் உதவியினால்தானே? தப்பி ஓட வழியில்லை என்று தெரிந்ததும் தேவியின் பேரிலேயே உமது கொடூரமான விஷக் கத்தியை எறியப் பார்த்ததும் அந்தக் கைதான் அல்லவா?''



''ஆமாம், அப்பனே! ஆமாம்! நீ சொல்லுவது எல்லாம் உண்மைதான். ஆனால் எதற்காக ஆயனர் மகளை நான் கொண்டு போக முயன்றேன்? தெரிந்து கொண்டாயா? ஆ! பரஞ்சோதி! ஆயனர் மகள் மீது என்னைக் காட்டிலும் உனக்கு அதிக அன்பு, அதிக பக்தி, அதிக சிரத்தை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன் எஜமானனை அந்த மூட மாமல்லனும் அவளை என்னைக்காட்டிலும் அதிகம் காதலிப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறான்! அப்பனே! அன்பு என்பதற்கு உனக்கு அர்த்தம் தெரியுமா? உன்னுடைய தலைவன் மாமல்லனுக்குக் காதலின் தன்மை தெரியுமா? பரஞ்சோதி! இன்று இந்த வாதாபி நகரம் பற்றி எரிந்து நாசமாவதற்குக் காரணமானவன் நான். சிவகாமிக்காக என் சொந்த சகோதரனைப் பலி கொடுத்தேன். ஹர்ஷவர்த்தனை நடுநடுங்கச் செய்த சளுக்க மகாசாம்ராஜ்யத்தையே என் காதலுக்குப் பலியாக அர்ப்பணம் செய்தேன். ஆஹா! அன்புக்கும் காதலுக்கும் அர்த்தம் உங்களுக்கு என்ன தெரியும்?''

''அடிகளே! தாங்கள் சொல்லுவது உண்மையே. அன்பு என்பதற்குப் பொருள் எனக்குச் சற்று முன்னால்தான் தெரிந்தது. ஒருவரிடம் நம்முடைய அன்பைக் காட்டுவதென்றால் அவர் மேல் விஷக் கத்தியை எறிந்து கொல்ல வேண்டும்! இல்லையா? இதைச் சற்று முன்னால் நான் தெரிந்து கொண்டேன். வஞ்சகப் பிக்ஷுவே! உம்மிடம் பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. உம்முடைய வேஷத்தை மட்டும் கலைக்காமல் நீர் இராஜரீக உடை தரித்திருந்தால் இத்தனை நேரம் உம்மைப் பரலோகம் அனுப்பி யிருப்பேன். காவி வஸ்திரம் தரித்த பிக்ஷுவைக் கொல்ல மனம் வரவில்லை. ஒரே ஒரு நிபந்தனையின் பேரில் உம்மைக் கொல்லாமல் விடுகிறேன். பத்து வருஷங்களுக்கு முன்னால் அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து வருவதற்காக ஆயனர் என்னை அனுப்பினார். நானும் அப்படியே செய்வதாக வாக்களித்து விட்டுக் கிளம்பினேன்... அஜந்தா வர்ணத்தின் ரகசியம் உமக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும். இதோ, இந்தச் சுரங்க விஹாரத்தின் சுவர்களிலே கூட வர்ணச் சித்திரங்களைக் காண்கிறேன். உமக்குக் கட்டாயம் இந்த இரகசியம் தெரிந்துதான் இருக்க வேண்டும். அதை உடனே சொன்னீரானால் உம்மை உயிரோடு விடுகிறேன். இல்லாவிடில் உம்முடைய இஷ்ட தெய்வத்தை...உம்மைப் போன்ற கிராதகளுக்குத் தெய்வம் என்பதாக ஒன்று இருந்தால் அந்தத் தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து கொள்ளும்!''

''அப்பனே! உன்னுடைய கருணைக்காக மிக்க வந்தனம். என் இஷ்ட தெய்வம் ஒன்றே ஒன்றுதான். அது சிவகாமிதான். அந்தத் தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். ஆயனரையும் அவர் மகளையும் அஜந்தாவுக்கே அழைத்துப் போய் அழியா வர்ண இரகசியத்தை நேரிலேயே காட்டிக் கொடுக்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அது எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. அவர்களுக்கும் கொடுத்து வைக்கவில்லை. அந்த அற்புதமான இரக


சிங்கார் அழகு, வெறும் சிமிழ் அழகு அல்ல ...
KUMKUM
Shingar
Shingar
DELUXE BIN
மங்கள திலகமாம்
குங்குமப் பொட்டழகு
குங்குமத்தின் உண்மையான மதிப்பு அதன் உள்ளமைப்பு. சீரிய விஞ்ஞான முறையில் தயாரிக்கப் பட்டது சிங்கார். உங்கள் சருமத்தின் pH இயல்புக்கு சிங்கார் குங்குமப்பொட்டின் pH இயல்பு பொருந்துமாறு பார்த்துக்கொள்கிறோம். pH என்பது என்ன? அமில, காரத் தன்மைகளை வரையறுக்கும் அளவுகோல் அது; 0 முதல் 14 வரை வேறுபட்டிருக்கும். சருமத்திற்கு உள்ள pH ஏறத்தாழ 5.0. சிங்கார் குங்குமுக்கும் 5.0 இதன் அர்த்தம், உங்கள் முகத்துக்கு முழுப் பொருத்தம்—எனவே, எரிச்சலூட்டாது.
● அனுமதி பெற்ற வர்ணங்களின் வண்டல்படியாத் தைலக் குழம்பாகிய சிங்கார் குங்குமம், கலையாப் பண்புடனே களை பொலிந்திடும்.
● உன்னதமான தரமுள்ள தயாரிப்பு—இதனைப் படைப்போர்: இந்தியாவிலேயே, பொதிவிட்ட குங்குமப் பொட்டுத் துறையில் முன்னோடிகள்.
● சிங்கார் டிலக்ஸ் குங்குமம், வைபோகமான குங்குமம்—பளிச்சிடாப் பணிவுள்ள எழில்ரகமாக வருகுது. ஒளிமின்னும் சாதாரண குங்கும ரகமும் கிடைக்கும்.
Shingar
KUMKUM
கருத்துடனே தெரிந்தெடுப்பீர்
சிங்கார்
பாரத நாட்டின்
உச்ச விற்பனையுடைய
பரிபூரண நம்பிக்கைக்குரிய
குங்கும திலகம்
everest/282/SH/tm



ஸ்ரீமதி சகுந்தலா பாரதியின் பேத்தியும், பம்பாய் B. A. R. C.யைச் சேர்ந்த *Dr. S.* நாராயண சுவாமியின் புத்திரியுமான சௌ. Dr. நிருபமாவுக்கும், *ECAFE*ல் பணியாற்றிய ஸ்ரீ *P. R.* சுப்பிரமணியன் அவர்களின் புத்திரன் சிரஞ்சீவி S. ராமமூர்த்திக்கும் *(Accounts Manager Macy's Sanfrancisco, U. S. A.)* சென்னை 'நியூ உட்லண்ட்ஸ்' கலியாண மண்டபத்தில் 30-10-75ல் திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்



ஸ்ரீ *N. V.* சுப்பிரமணியன் (ஓய்வுபெற்ற *U. N. Official*) அவர்கள் குமாரி சௌ. டாக்டர் பட்டுவுக்கும், சென்னை *M. P.* அருணாசலம் அய்யர் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி டாக்டர் வைத்தியநாதனுக்கும் சென்னையில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்

சியத்துக்கு — உலகில் வேறு யாரும் கற்பனை செய்ய முடியாத இரகசியத்துக்கு— என்னுடைய உயிரை ஈடாக வைத்தாயே! நீ நன்றாக இருக்க வேண்டும்! சொல்லுகிறேன்; கேள்; மரஞ் செடிகளின் இலை, வேர், காய், விதை முதலிய தாவரப் பொருட்களைச் சாறு பிழிந்து காய்ச்சிச் சாதாரணமாக வர்ணங்கள் குழைப்பது வழக்கம். தாவரப் பொருள்கள் காய்ந்து உலர்ந்து அழிந்து போகக் கூடியவை. ஆகையால் அவற்றிலிருந்து உண்டாக்கப்படும் வர்ணங்களும் சீக்கிரத்தில் மங்கி அழிந்து போகின்றன. ஆனால், மலைகளிலும், பாறைகளிலும் சிற்சில பகுதிகள் இயற்கை வர்ணம் பெற்று விளங்குகின்றன. இந்த வர்ணங்கள் காற்றுக்கும் வெயிலுக்கும் மழைக்கும் மங்குவதில்லை; அழிவதில்லை. ஆகவே, இந்த வர்ணப் பாறைகளைப் பொடி செய்து அதற்கேற்ற பக்குவப்படி அரைத்துக் குழைத்து உண்டாக்கும் வர்ணங்கள் அழிவதே கிடையாது. இம்மாதிரி வர்ணப் பாறைகளைப் பொடித்துக் குழைத்த வர்ணங்களைக் கொண்டுதான் அஜந்தாவில் சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.... பரஞ்சோதி! சென்ற ஐந்நூறு வருஷ காலமாக அஜந்தா சங்காராமத்தைச் சேர்ந்த பிக்ஷுக்களைத் தவிர வேறு யாரும் அறியாத பரம இரகசியத்தை உனக்கு நான் சொல்லி விட்டேன். இனி நான் போகலாமா?''

''அடிகளே! உடனே போய்விடுங்கள். அடுத்த நிமிஷம் என் மனம் மாறினாலும் மாறிவிடும். சிவகாமி தேவியுடன் நீர் ஓடிப்போக யத்தனித்த கள்ளச் சுரங்க வழியாகவே இப்போது போய்விடுங்கள். சீக்கிரம்! சீக்கிரம்!''

நாகநந்தி மிக்க பிரயாசையுடன் எழுந்திருந்தார். வெட்டுப் பட்ட தம்முடைய வலது கையை இன்னொரு கையினால் தூக்கிப் பிடித்துக் கொண்டு நின்றார்.

''பரஞ்சோதி! நீ நல்ல பிள்ளை. என் உயிரைத் தப்பித்து விட்டாய். என் கையை வெட்டியதற்குப் பதிலாகக் கழுத்தை வெட்டியிருந்தாயானால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். ஆனால், எனக்கு இன்னும் உயிர்மேல் ஆசை விடவில்லை. உன்னிடம் உயிர்ப் பிச்சை கேட்டேன். நீயும் கொடுத்தருளினாய். மாமல்லன் வருவதற்குள்ளே நான் போய்விட வேண்டும் என்பது உன் கருத்து என்பதை அறிந்துகொண்டேன். இதோ போய்விடுகிறேன். ஆனால் இன்னும் ஒரே ஒரு கோரிக்கை: சிவகாமி சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்து எழுவாள். அவளிடம் ஒரு விஷயம் அவசியம் தெரியப்படுத்து. அவள் மேல் நான் விஷக் கத்தியை எறிந்து கொல்ல முயன்றேன் என்பதைக் கட்டாயம் சொல்லு! அதுதான் அவள் பேரில் நான் கொண்ட காதலின் கடைசிப் பரிசு என்றும் சொல்லு!''

இவ்விதம் கூறிக் கொண்டே நாகநந்தி சிவகாமி கிடந்த பக்கம் நோக்கினார். சிவகாமி மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்து பாறைத்தூணின்பேரில் சாய்ந்து கொண்டு சிலையைப் போல் அசைவற்று நிற்பதை அவர் பார்த்தார்.

''ஆ! சிவகாமி! எழுந்து விட்டாயா? ஆயனரின் சீடர் பரஞ்சோதியிடம் நான் சொன்னது உன் காதில் விழுந்ததா? ஆம்! உன்மீது கத்தி எறிந்து கொல்லப் பார்த்தேன். எதிர்காலத்தை நினைத்து உன்மேல் இரக்கம் கொண்டு தான் அந்தக் காரியத்தைச்செய்ய முயன்றேன். பல்லவ சேனாதிபதி குறுக்கே வந்து உனக்கு அந்த நன்மையைச்செய்ய முடியாமல் தடுத்து விட்டார். சிவகாமி! வருங்காலத்திலே... வேண்டாம்; வருங்காலத்தில் என்னை நீ நினைக்க வேண்டாம். இந்தப் பாவியை மறந்துவிடு! உடல் பொருள் ஆவி அனைத்தையும் இகத்தையும் பரத்தையும் உன் காலடியில் அர்ப்பணம் செய்த இந்தக் கள்ளப் பிக்ஷுவை மறந்துவிடு. மறந்துவிட்டுக் கூடுமானால் சந்தோஷமாயிரு! ஆனால் நான் மட்டும் உன்னை மறக்க மாட்டேன். பரஞ்சோதியையும் மாமல்லனையுங்கூட நான் மறக்க மாட்டேன்! போய் வருகிறேன். சிவகாமி! போய் வருகிறேன். உன்னைப் புத்த பகவான் காப்பாற்றட்டும்!''





இவ்விதம் பேசிக் கொண்டே தன் ளாடித் தள்ளாடி நடந்து நாகநந்தி பிக்ஷு புத்த பகவானுடைய சிலைக்குப் பின்னால் மறைந்தார்.

நாகநந்தி அவ்விதம் தப்பிச் சென்று சுரங்க வழியில் மறைந்ததை அனைவரும் பார்த்துக்கொண்டு நின்றார்கள். சேனாதிபதியின் அனுமதியின் பேரிலேயே பிக்ஷு செல்கிறார் என்பதை அறிந்திருந்தபடியால் யாரும் அவரைத் தடுக்க முடியவில்லை.

சிவகாமியும் பார்த்த கண் பார்த்த வண்ணம் நாகநந்தி மறையும் வரையில் அவரையே நோக்கிக் கொண்டு நின்றாள். சற்று முன்னால் காபாலிகையின் கத்திக்கு இரையாகாமல் அவர் தன்னைக் காப்பாற்றியபோது அவர் புலிகேசிச் சக்கரவர்த்தியா அல்லது நாகநந்தி பிக்ஷுவா என்று ஐயமுற்றாள். இப்போது அவர் மனிதனா, மனித உருக் கொண்ட அரக்கனா, ஏதோ பெருந் துக்கத்தினால் மூளை சிதறிப் போன பைத்தியக்காரனா, அல்லது ஈவு இரக்கமற்ற கொடிய கிராதகக் கொலைகாரனா என்னும் சந்தேகங்கள் அவளுடைய மனத்தில் தோன்றி அலைத்தன.

இதற்கிடையில் சேனாதிபதி பரஞ்சோதி, ''சத்ருக்னா! நல்ல சமயத்தில் வந்தாய்! இந்தப் பாதாள புத்த விஹாரத்திலிருந்து வெளியேறுவதற்கு ஏதாவது நல்ல மார்க்கம் இருக்கிறதா என்று பார். நாங்கள் வந்த கிணற்றுச் சுரங்க வழியாக எல்லாரும் போவது கஷ்டம். பிரதான வாசல் எங்கேயாவது இருந்து அடைபட்டிருக்கவேண்டும். சீக்கிரம் கண்டு பிடி!'' என்றதும், சத்ருக்னன், ''சேனாபதி! பிரதான வாசலை ஏற்கனவே கண்டுபிடித்து விட்டேன். அந்த வழியை உடனே திறப்பதற்கு இதோ கட்டளையிடுகிறேன்!'' என்றான்.

சேனாதிபதிக்குச் சட்டென்று ஒரு நினைவு வந்தது. ''சத்ருக்னா! குண்டோதரன் எங்கே?'' என்று கேட்டார்.

''ஆ! சேனாதிபதி! என் அருமைச் சீடர்களில் அருமைச் சீடன் காபாலிகையின் கத்திக்கு இரையாகி விட்டான்! அந்த ராட்சஸியைக் குகையில் காணாமல் சுரங்க வழியிலே தேடிக் கொண்டு வந்தோம். 'தாங்கள் அந்தச் சண்டாளியைப் பார்த்தீர்களா?'' என்று சத்ருக்னன் கேட்க, ''பார்த்தேன், சத்ருக்னா; கண்ணனும் காபாலிகையும் பக்கத்து வீட்டிலே செத்துக் கிடக்கிறார்கள். கண்ணன் எப்படிச் செத்தான் என்பது தெரியவில்லை? அவ்விடம் போய்ப் பார்க்க வேண்டும்'' என்றார்.

பரஞ்சோதி இவ்விதம் சொல்லிக் கொண்டே தூணின் மேல் சாய்ந்து நின்று கொண்டிருந்த சிவகாமியின் அருகிலே சென்று பக்தியுடன் வணங்கினார்.

''அம்மணி! எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருந்தீர்கள். ஏகாம்பரர் அருளால் எல்லா அபாயமும் தீர்ந்தது. ஒன்பது வருஷங்களுக்குப் பிறகு தங்களை மறுபடியும் உயிருடன் பார்க்க முடிந்தது. சிறிது நேரம் உட்கார்ந்து இளைப்பாறுங்கள்! இந்தக் குகையின் வாசல் திறந்ததும் வெளியேறலாம். தங்கள் தந்தையும், சக்கரவர்த்தியும் கோட்டைக்கு வெளியே காத்துக் கொண்டிருக்கிறார்கள்!'' என்றார்.

சிவகாமி துக்கம் நெஞ்சை அடைக்க, நாத் தழுதழுக்க, ''தளபதி! போவதற்கு முன்னால் எனக்குக் கமலியின் கணவனை மறுபடியும் பார்க்க வேண்டும். என்னை அந்த வீட்டுக்கு அழைத்துப் போங்கள்'' என்றாள்.

அதே சமயத்தில் அடைக்கப்பட்டிருந்த அந்தப் புத்த விஹாரத்தின் பிரதான வாசலைப் பல்லவ வீரர்கள் படார் படார் என்று இடித்துத் தள்ளிக்கொண்டிருந்தார்கள். (தொடரும்)



அதற்கும் ஒரு மெஷின்!

மேற்கு ஜெர்மன் நகரான டஸ்ஸல்டிராஃபில் நடைபெற்ற மாபெரும் ஆஸ்பத்திரி கண்காட்சி ஒன்றில் ரொட்டிக்கு வெண்ணெய் தடவும் சாதனம் ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இது 10,000 ரொட்டித் துண்டுகளுக்கு வெகு சீக்கிரத்தில் வெண்ணெய் தடவக்கூடியது!

ஒரு பிடி அவல்

'வம்பன்'



ஸ்ரீமதி சாவித்திரி சபாநாயகம், பெண் வழக்கறிஞர்கள் நடத்திய அகில உலக மாதர் மகாநாட்டினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் அவர்களின் பெருமை மிக்க பாரம்பரியத்தை நினைவுறுத்தினர். ''புராண காலத்துச் சாவித்திரி யமனோடு வாதாடித் தனது கணவனின் உயிரை மீட்டு வந்தாள். சகுந்தலை கணவனோடு வாதாடித் துஷ்யந்தனின் மனைவி தான் என்பதை நிலைநாட்டினாள். கண்ணகி பாண்டியன் அவைக்களத்திலே சான்றுகளுடன் சென்று தனது கணவன் நிரபராதி என்று நிரூபித்தாள். இப்படியொரு அரிய பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைய பெண் வழக்கறிஞர்கள்'' என்று கூறியபோது இயல்பான நாணத்துடன் தலை குனிந்து உட்கார்ந்திருந்த பெண் வழக்கறிஞர்கள் எல்லாம் தலை நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

● ● ●

பிரதம நீதிபதி திரு வீராசாமியிடம் அமெரிக்க அம்மையார் ஒருவர் பின்வருமாறு குறைப்பட்டுக் கொண்டாராம்:

''என் கணவர் காலை மாலை பகல் இரவு எல்லா நேரமும் பிஸியாக இருக்கிறார், பணம் சம்பாதிப்பதில். என்னிடமோ குழந்தைகளிடமோ பேசுவதற்குக்கூட அவருக்கு நேரம் கிடைப்பதில்லை. என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது. அவரை விவாகரத்து செய்துவிடலாமா என்று யோசித்து வருகிறேன்!''

''இதுவே நம் நாடாக இருந்தால், நம் பெண்கள், கணவர் அதிகமாகச் சம்பாதிக்கிறார் என்று மெய் புளகித்து, அவர் இன்னும் கொஞ்சம் சம்பாதிக்க உதவியாக அல்லவோ இருப்பார்கள்!'' என்றார் வீராசாமி.

எனக்குப் பின்னால் அமர்ந்திருந்த பெண்கள் நீதிபதி வீராசாமி இன்றைய மாதர் சமுதாயத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவேயில்லை என்று பேசிக் கொண்டார்கள்.

● ● ●

திராவிட முன்னேற்றக் கழகம் பூர்வாசிரமத்தில் — அதாவது சட்ட சபைக்குள் புகாத கட்சியாக இருந்த காலத்தில் பேசி வந்த நிரீசுவர வாதத்தைத் தமிழகம் பொறுத்து வந்தது. மதுரையில் அடியெடுத்து வைத்து அப்படிப் பேசத் தொடங்கியதும் மதுரை சீறியெழுந்தது! மதுரை மண்ணின் விசேஷம் போலும். கண்ணகியை [illegible] எரிய வைத்த மண் அல்லவா? இந்த நினைவில் கொண்டுதானோ என்னவோ முதல்வர் திரு மு. கருணாநிதி மதுரை தி. மு. க. பெண்கள் மகாநாட்டில் கடவுள் தம் பக்கம் இருப்பதாக உறவு கொண்டாடிப் பேசியிருக்கிறார். அவர் பேச்சு:

''தமிழகத்தில் இரண்டு முறை வறட்சி வந்த நேரத்தில் இங்கே இருக்கின்ற சில தலைவர்கள் ஆண்டவன் இந்த அரசின் மீது கோபித்துக் கொண்டுதான் இவ்வளவு கடும் வறட்சியைக் கொண்டு வந்திருக்கிறான் என்று பேசினார்கள்; எழுதினார்கள். அந்த ஆண்டவனுக்கு எங்கள் கஷ்டம் புரிந்திருக்கிறது. அதனால்தான் நீண்ட காலமாகச் சீர்படுத்தாமல் கிடந்த ஏரிகளையும் குளங்களையும் வாய்க்கால்களையும் சீர்ப்படுத்தி அதிக அளவு தண்ணீர் கொள்கின்ற அளவுக்கு உருவாக்கிடும் வரையில் நீரை யெல்லாம் வற்ற வைத்து இப்போது மீண்டும் மழையைக் கொடுத்திருக்கிறான். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறவர்கள் என்ற தத்துவத்தின் அடிப்படையில் அந்த ஆண்டவனும் எங்கள் பக்கம் இருக்கிறான்.''

எப்படி இருந்தவர்கள் காலப் போக்கில் எப்படி மாறிவிட்டார்கள்! இதுவும் ஆண்டவன் லீலைகளுள் ஒன்றுதான்!

● ● ●

பிரதமர் இந்திரா காந்தியின் வழக்கின் மீது சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் அளித்த தீர்ப்பின் மீது, நமது தமிழக முதல்வர் திரு கருணாநிதி தெரிவித்த கருத்து பின்வருமாறு:

''நான் அலகாபாத் தீர்ப்பைக் கேட்டு மகிழ்ச்சி யடையவுமில்லை; சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைக்கேட்டுக் கவலை அடையவும் இல்லை''

இதைப் படித்தவர்களுக்கு வள்ளுவரின் கீழ்க்கண்ட குறள் நினைவுக்கு வந்தால் வியப்பில்லை.

இன்பத்துள் இன்பம்
விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்

● ● ●

மகாராஷ்டிர மாநில முதல்வர் திரு எஸ். பி. சவான், நிர்வாகத்தில் அதிகமாக மராத்தி மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறிய அதே நேரத்தில் ''ஆங்கிலத்தை அகற்ற வேண்டும்'' என்று கூறும் மராத்தி வெறியர்களைக் கண்டித்தார். ''ஆங்கில துவேஷம், மாநிலத்தின் மற்ற துறைகளிலும் நிலைகளிலும் பெரும் தீங்கு விளைவிக்கும். ஆங்கிலம் அகில உலக மொழி. ஆங்கிலத்தை ஒழிப்பதற்குத் தாம் ஒரு நாளும் உடன்பட முடியாது'' என்று கூறியிருக்கிறார்.

மற்ற மாநில — முக்கியமாக ஹிந்தி மாநில மக்கள் இதை உணர்வார்களேயானால் நாட்டுக்கு நலம் விளையும்.

● ● ●

மகாராஷ்டிர மாநிலத்தில் 225 பள்ளிக்கூடங்களில், எஸ்.வி.வி. (நமது மாநிலத்து எஸ்.எஸ்.எல்.வி. பரீட்சைக்கு இணையானது) பரீட்சையில் மாணவர்கள் நூற்றுக்கு நூறு பேர் தோல்வியுற்றிருக்கிறார்கள்! இத்தகைய சிறப்புப் பெற்ற பள்ளிகள் சில பம்பாய் நகரத்திலேயே இருக்கின்றன!

10

ரூபாவின் தோழிகள் அடிக்கொரு தரம், 'எங்கேடி உன் பிரின்ஸ்?' என்று குத்தலாகக் கேட்டு அவள் ஆத்திரத்துக்கு நெய் வார்த்தார்கள்.

ஏமாற்றம் ரூபாவின் எரிச்சலைப் பன்மடங்கு உயர்த்திக் காட்டியது.

மலைச் சரிவின் எழில்மிகு காட்சி படமாக்கப் பட்டுக் கொண்டிருந்தது. ஹீரோவும் ஹீரோயினும் பனி மாவினால் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ராஜேஷ் பாடியவாறே ஷர்மீலாவின் மீது பனி உருண்டையை வீசிக் கொண்டிருந்தான். அதற்கு அவள் அழகு காட்டிக் கொண்டிருந்தாள். அந்த அற்புதக் காட்சியைக் கண்டு பார்வையாளர்கள் சிரித்த சிரிப்பில் அந்தப் பள்ளத்தாக்கே எதிரொலித்தது.

அநூப்பை எங்கும் காணமற் போகவே ரூபா படப் பிடிப்பைக் காண்பதில் தன்னை மறந்தாள். ராஜேஷ் பனி மாவைச் சிறு சிறு உருண்டையாகப் பிடித்து ஷர்மீலாவின் மீது வீசினான். அவள் மீது பட்டு அது பொடிப் பொடியாக உதிர்ந்தது. இக்காட்சியைப் பார்த்தவாறே ரூபா அதே போன்ற கற்பனையில் மூழ்கினாள். பனி உருண்டையை வீசுபவன் அவளுடைய பிரின்ஸ் ஆனான். அந்தப் பொடியடியை ஏற்பவள் அவள் ஆனாள். இந்த நினைப்பில் அவள் மனம் லயித்தபொழுது அடுக்கடுக்காகக் கற்பனை அலைகள் எழுந்தன. 'ஆகா இந்த விளையாட்டில்தான் என்ன ஆனந்தம் !'

திடீரென்று அவள் துணுக்குற்றாள். உண்மையாகவே அவள் கன்னத்தில் பனி உருண்டை பட்டுப் பொலபொலவென்று உதிர்ந்தது. அதன் குளிர்ச்சியில் அவளுக்குக் காலிலிருந்து தலை வரை தூக்கிவாரிப் போட்டது. அவளை அறியாமலே இலேசானதொரு கீச்சொலி அவள் வாயிலிருந்து எழுந்தது. அவளை அப்படிக் குறி வைத்தவன் படத்துக் கதாநாயகன் ராஜேஷ் அல்ல; அவள் வாழ்க்கைக் கதாநாயகனான அநூப். அவன் சற்றுத் தொலைவில் நின்று கொண்டு, தன் குறியில் மகிழ்ந்தவனாய் முறுவலித்துக்கொண்டிருந்தான். ரூபா பார்வையை அகற்றி அவனைப் பார்த்து விட்டாள். ஆனால் வேண்டுமென்றே பார்த்தும் பாராதவள் போலப் படப் பிடிப்பை ஆழ்ந்து பார்ப்பதாகப் பாவனை செய்தாள்.

''ஹலோ !'' அநூப் அவள் அருகில் வந்துவிட்டான்.

ஆனால் ரூபா அவனைக் கவனிக்காதவள் போலப் படப் பிடிப்பையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

''ஐ ஆம் ஸாரி ரூபா!'' என்றவாறே அநூப் அவளை இன்னும் நெருங்கி வந்தான்.

''உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமோ?'' தன் வீம்பு தளர்ந்து விடவே, அவனைத் திரும்பிப் பார்த்து ரூபா கேட்டு விட்டாள்.

'' என்ன?''

''பனி அதிகம் பெய்வதனால் நகரத்துக் கடிகாரங்கள் அத்தனையும் நின்றுவிட்டனவாம்!'' கேலியும் குத்தலுமாக ரூபா சொன்னாள் : ''அந்த நிலையில் நேரம், பொழுதை எப்படிச் சரியாகத் தெரிந்து கொள்ள முடியும் ?''

இன்பத் தென்றல்

குல்ஷன் நந்தா

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

''இல்லே, ரூபா ! கடிகாரம் எல்லாம் சரியாகத்தான் ஓடுகிறது. நான் வரத்தான் நேரமாகிவிட்டது !''

''நீங்கள் குப்ரி ஷாப்பில் எங்களைச் சந்திக்கிறதாகச் சொல்லியிருந்தீர்களே !''

'' சொன்னபடி அங்கேதான் முதலில் போனேன். ஆனால் உங்களில் யாரையுமே காணவில்லே. எனவே, இங்கே வந்து விட்டேன் !''

''நான்கூட .உங்களை இன்னும் கொஞ்ச நேரம் எதிர்பார்க்கலாம் என்றுதான் சொன்னேன். ஆனால் ரோஸ்லீனும் நிஷியும் கேட்டால் தானே ? அவசரப்படுத்தி இழுத்துக் கொண்டு வந்து விட்டார்கள் !'' ரூபாவே சிறிது உருகி விட்டாள்.

''எங்கே அவர்கள் ?''

'' அதோ எதிர்த்தாற்போல் இருக்கிறார்கள்.'' ரூபா தொலேவில் நின்ற தோழிகளைச் சுட்டிக்காட்டினாள். அப்புறம் அநூப்பின் பார்வையோடுபார்வையைப் பொருத்தி. ''படப் பிடிப்பை அவர்களாகவே பார்த்து விட்டார்கள். வாருங்கள், ராஜேஷ்கன்னுவையும் ஷர்மீலா டாகுரையும் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து விட்லாம்!'' என்றாள் ரூபா.

''அறிமுகமா ?''

''ஆமாம் !''

'' எப்படி முடியும் ? எனக்கு அவர்களைத் தெரியவே தெரியாதே !''

''என்ன?'' சிறிய ரூபாவின் கண்களில் கோபம் ருத்ர தாண்டவமாடியது.



விஜய் அமிர்தராஜ் டென்னிஸ் சர்வீஸ் போடும்போது பந்தின் வேகம் மணிக்கு 99.5 மைல்! — ஆன்லுக்கர் - பாலி

தகிக்கும் அந்தப் பார்வையை அநூப்பினால் தாங்க முடியவில்லை. தன் பார்வையைத் தாழ்த்தித் தயங்கித் தயங்கிக் கூறினான்: "ப்ளீஸ், என்னை மன்னித்துவிடு. ரூபா! உன்னை இங்கே வரவழைப்பதற்கு அது ஒரு வெறும் சாக்கு!"

ரூபா தோள்பட்டையைக் குலுக்கிக் கொண்டு அவனிடமிருந்து விலகி நின்றாள். அலை பாயும் விழிகளோடு இங்கும் அங்கும் பார்க்கலானாள். அநூப் எத்தனையோ விளக்கங்கள் கூற முயன்று தோற்றுப் போனான். ரூபா எதற்குமே மசியவில்லை. 'தன் தோழிகளிடம் இதற்கெல்லாம் எப்படி ஏச்சுப் பேச்சுக்கள் வாங்கிக் கட்டிக் கொள்ளவேண்டியிருக்குமோ? என்னை இங்கு தருவிப்பதற்காக இவர் எதற்கு இப்படிப் பொய் சொல்ல வேண்டும்? நமது அடுத்த சந்திப்பு குஃப்ரியில் என்று ஒளிவு மறைவின்றி நேரிடையாகவே சொல்லியிருக்கலாமே?' என்ற எண்ணம் அவளுடைய கோபத்தைக் கிளறிக் கிளறி விட்டது. அநூப் அதைச் சமனப்படுத்தச் சமனப்படுத்த அது கொழுந்து விட்டு எரிந்தது. அவனைத் தவிர்க்க அவள் 'விசுக், விசு'கென்று நடந்தாள். அவளைச் சமாதானப்படுத்த அவன் அவள் பின்னே பின்னே நடந்தான்.

கூடியிருந்த மக்கள், ராஜேஷும் ஷர்மிலாவும் படப்பிடிப்புக்காக நடித்த அந்தப் போலிக் காட்சியைக் கண்டு களிப்பதிலேயே மனத்தைப் பறிகொடுத்திருந்ததால், அநூப்பும் ரூபாவும் உண்மையாகவே நடத்திக் காட்டிய அந்த அற்புதக் காட்சியைக் காணக் கொடுத்து வைக்காதவர்கள் ஆனார்கள்.

சிறிது தூரம் சென்று தனிமை கிடைத்ததும் அநூப் ஓடிப் போய் ரூபாவின் கையைப் பற்றிக் கொண்டான்.

"இதென்ன விளையாட்டு?"

"விளையாட்டு அல்ல; உண்மை!"

"நீங்கள் எதற்காக இத்தனை பொய் சொல்கிறீர்கள் என்று விளங்கவில்லை!"

"உண்மையைத் தெரிந்து கொள்வதற்காக!"

"எந்த உண்மையை?".

"வந்து.....வந்து...."

"வந்து என்ன"

"நம் இருவருடைய காதலும் உண்மையானதுதானா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக!"

"இது எந்தப் படத்தில் வரும் உரையாடல்?"

"இன்னும் ரிலீஸ் ஆகவில்லை!"

"....என்றாலும் அதற்கு ஒரு பெயர் இருக்கும் அல்லவா?"

"இருக்கிறது!"

"என்ன?"

"லவ் இன் சிம்லா!"

"அது ரொம்பப் பழைய படம் ஆயிற்றே!" ரூபாவினால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

"ஆனால் இந்தக் காதல் புதிதாயிற்றே!" என்று கூறி அநூப் அவளைப் பார்த்தான்.

அவள் நாணிக் கண்புதைத்தாள். பிறகு இருவருடைய பார்வைகளும் மோதியபோது கோபம் விலகிக் காதல் பொங்கியது. இந்திரஜாலம் புரியும் வானவில்லில் இருவரையும் அமர்த்தி அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டவாறே காலம் ஸ்தம்பித்து நின்றுவிட்டாற்போலத் தோன்றியது ரூபாவுக்கு. நேரம் போவதே தெரியாமல் அவள் எத்தனை நேரம் நின்றாளோ? இவ்வுலக நினைவுக்கு வந்த பொழுது "அட, அவர்கள் போய்விட்டார்களே!" என்று கூறித் துணுக்குற்றாள்.

"யார்?"

"ரோஸ்லீனும் நிஷியும்!"

"போனால் என்ன, நான் இருக்கிறேனே!"

"அவர்கள் என்ன நினைப்பார்கள்?"

"உன்னைப் பற்றி நினைக்கும் நிலையிலா அவர்கள் இப்பொழுது இருப்பார்கள்? ராஜேஷ் கன்னாவின் மயக்கத்தில் அல்லவா கிறங்கிக் கிடப்பார்கள்!" என்று குறுநகை படரக் கூறினான் அநூப்.

"நீங்கள் யார் மயக்கத்தில் கிறங்கி நிற்பீர்களாம்?"

"உன் – அதாவது என் ரூபாவின் அழகில், எழில் உருவத்தில் மெய்மறந்து நிற்பேன்!" என்றவன், "இல்லை, இல்லை! நிற்கிறேன்!" என்று முடித்தான்.

ரூபாவுக்கு உடம்பு முழுவதும் வெட்கம் இழையோடியது. நல்லவேளையாக அதை மறைக்கப் பனி மேகம் அவளைச் சூழ்ந்து கொண்டது. சிறிது நேரத்துக்கு ஒருவருக்கொருவர் பார்வையிலிருந்து அவர்கள் மறைந்து போயினர். ரூபாவுக்குக் குறும்பு தோன்றவே, சட்டென்று ஒரு பெரிய தேவதாரு மரத்தின் பின்னால் போய் மறைந்து கொண்டாள்.

பனி மூட்டம் விலகியபோது ரூபாவைக் காணாமல் அநூப் இடமும் வலமும் பார்வையை ஓட்டினான். அதைக் கண்டு ரூபா சிரித்துவிட்டாள். சிரிப்பொலி வந்த திசையை நோக்கி அவன் நடந்தான். அவன் அருகில் வருவதைக் கண்ட ரூபா வேறு ஒரு மரத்தின் மறைவில் ஒளிந்து கொண்டாள்.

இப்படி இருவரும் கண்ணாமூச்சி விளையாடிய நேரத்தில் மிகப் பெரிய பனிப் போர்வை ஒன்று அந்தப் பள்ளத்தாக்கையே போர்த்திக் கும்மிருட்டாக்கி விட்டது. தட்டித் தடவி அடி எடுத்து வைக்க வேண்டிய நிலை. ஆனால் ரூபா எப்படியோ முன்னேறி நடந்தாள். அநூப் அவளைப் பலமுறை பெயர் சொல்லி அழைத்தான். ஆனால் அவள் வேண்டுமென்றே மௌனம் சாதித்தாள். அநூப்பும் அவளுடைய காலடி ஓசையைக் குறிப்பாகக் கொண்டு அவளை நெருங்க முயன்றான். ஆனால் யார் எந்தப் பக்கம் போகிறார்கள் என்று யாருக்குமே தெரியவில்லை. அநூப்பை இப்படித் துன்புறுத்தி வேடிக்கை பார்ப்பதில் ரூபா இன்பம் கண்டாள். இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டில் அவளுக்குச் சொல்லொணாத ஆனந்தம். ஒரு முறை இருவரும் மோதிக் கொள்ளக் கூடிய அளவுக்கு

புது டெல்லியில் 23 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 'நிஜாமுத்தீன்' ரயில் நிலையத்தில் யாரும் இறங்குவதில்லை. கூட்டமே இல்லை. ராணுவத்தினர் மட்டும்தான் இந்த ரயில் நிலையத்தை உபயோகிக்கிறார்கள். — இந்துஸ்தான் டைம்ஸ் - பாலி

அம்போ!

நெருங்கி விட்டனர். ஆனால் ரூபா சட்டென்று இரண்டடி பின்னால் நகர்ந்து தன்னைச் சமாளித்துக் கொண்டாள். "எங்கே போய்த் தொலைந்தாளோ, தெரியவில்லையே!" என்று அநூப் முணுமுணுத்தான்.

அப்படியே ஓடிப் போய் அவனை ஆரத் தழுவிக் கொள்ள மாட்டோமா என்று தோன்றியது ரூபாவுக்கு. ஆனால் அவனுடைய உள்ளத் துடிப்பைச் சோதிக்கும் ஆசையில் தன்னை அடக்கிக் கொண்டாள். மூச்சை அடக்கிக் கொண்டு ஒரு மரத்தோடு ஒட்டி நின்றாள்.

"ரூபா!" அநூப் உரக்கக் கூப்பிட்டான். அவன் குரல் அப்படியே எதிரொலித்துவிட்டுப் பனியில் கரைந்து அடங்கியது. ரூபாவின் உதடுகளில் பொல்லாக் குறும்பு தாண்டவமாடியது. பனிக் காற்று ஊசியைப் போல் உடலைத் துளைத்தது. கால்களோ மரத்துப் போயின. இருந்தாலும் அவள் ஒளிந்து விளையாடினாள்.

"ரூபா, ரூபா!" அநூப் உரக்கக் குரல் கொடுத்தான்.

ரூபா குரலை மிகவும் மெதுவாக்கி, "பிரின்ஸ்!" என்று இழைத்தாள்.

பனி மூட்டத்தில் மெல்லொலியில் கேட்ட அந்தக் குரலைக் கொண்டு ரூபா வெகு தூரத்துக்கு வெகு தூரம் போயிருக்க வேண்டும் என்று எண்ணினான் அநூப்.

"ரூபா! எங்கே இருக்கிறாய் நீ?" மீண்டும் கேட்டான் அநூப்.

"இங்கேதான்... எனக்கு எதுவுமே தெரியவில்லை!" ரூபா வேண்டுமென்றே மிக அடக்கமான குரலில் பதிலளித்தாள்.

"என் குரல் கேட்கும் திசையை நோக்கி வா!"

"எந்தப் பக்கம்? இங்கே நாற்புறமும் ஒரே பனி மூட்டமாயிருக்கிறதே!"

"நீ அங்கேயே நில்! நானே வருகிறேன் உன்னிடம்!"

அநூப் ஓர் அநுமானத்தில் ரூபாவின் குரல் வந்த திக்கை நோக்கி நடந்தான். அங்கே ஒரே மரத் தோப்பு. 'டொ'ரென்று ஏதோ கனமான பொருள் விழுகின்ற ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து ரூபாவின் அபயக் குரல் வந்தது. 'ரூபா அகழியில் விழுந்திருப்பாளோ?' மனத்தில் இந்த எண்ணம் எழுந்த அடுத்த கணம் அகழிப் பக்கம் குதித்து விட்டான். உருண்டு புரண்டு பனி மூடிய ஒரு பாறையின் தடுப்பில் போய் நின்றான். பிறகு பனி மூட்டத்தை ஊடுருவி ரூபாவைப் பார்க்க முயன்றான். அப்பொழுது ரூபா சிரித்த இளஞ்சிரிப்பைக் கொண்டு அவள் இருக்கும் இடத்தை அநுமானிக்க முடிந்தது. அவன் அவளை அடைய எழுந்து நடக்க முயலு முன் அவள் பனி மேகங்களை ஊடுருவிக் கொண்டு அவனைத் தாங்கி நின்ற பனிமூடிய பாறைக்கு அருகில் வந்து நின்றாள்.

"காயம் படவில்லையே!" ரூபா உதடுகளில் குமின்சிரிப்பை ஏந்திக் கேட்டாள்.

"நீ வழுக்கி விழவில்லை?"

"இல்லையே! விழுந்தது ஒரு பாறை அல்லவா?"

"அந்த அபயக் குரல்?"

"உங்கள் காதலுக்கு ஒரு சோதனை!" என்று சொல்லியவாறு ரூபா அவன் அருகில் அமர்ந்தாள்.

அவள் கண்களில் ஒரு 'பளிச்' ஒளி. 'டொ'ரென்று குதித்ததனால் அநூப்பின் கால்கள் வலித்தன. ரூபா அவன் உடைகளில் படிந்திருந்த பனிப் பொடிகளைத் தட்டி விட்டாள். உருளும்போது அநூப்பின் கண்களில் ஏதோ விழவே, அவன் கண்களைக் கசக்கிக் கொண்டான். உறுத்தல் குறைந்தபாடில்லை. ரூபா சட்டென்று அவன் சட்டைப் பையிலிருந்த கைக்குட்டையை எடுத்தாள். அதை மடித்து ஊதி அவன் கண்களில் வைத்து ஒத்தடம் கொடுத்தாள். தன் விழிகளில் ரூபாவின் மூச்சுக் காற்று கடச் கடப் படுவதையும் அவள் இதழ்களின் வெம்மை தன் இமைகளைத் தீண்டுவதையும் உணர்ந்த அநூப்புக்கு இன்பத்தின் எல்லையை எட்டிப் பிடிக்கிறாற் போலிருந்தது. இப்படியே இங்கேயே உட்கார்ந்து இந்த இன்ப போதையைப் பருகிக் கொண்டே இருக்க மாட்டோமா என்று எண்ணினான் அவன்.

இருவருடைய இதயங்களும் ஒரே தாளகதியில் துடித்துக் கொண்டிருந்தன. பனி மூட்டம் இடையிடையே அவர்கள் கண்களுக்கெதிரே இருட்டைத் தோற்றுவித்து விலகினாலும், அவர்களது உள்ளங்கள் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன; புரிந்து கொண்டன. தீண்டித் தீண்டி மகிழவும் செய்தன. துடிப்புகள் காதல் செய்தியைப் பரிமாறிக் கொண்டன.

"நாம் பரீட்சையில் தேறிவிட்டோம் அல்லவா?" என்று கேட்டான் அநூப்.

"ஆம், முதல் வகுப்பில்!" என்று கூறி ரூபா மௌனமானாள்.

"என்ன யோசனை? சொல்லாமல் கொள்ளாமல் பேச்சை நிறுத்தி விட்டாயே!"

"இந்த மேகங்கள் அடிக்கடி நம்மை ஏன் மறைக்கின்றன?"

"உலகத்தின் கண்கள் நம் மீது படக் கூடாது என்பதற்காக."

"உலகம் நமக்கு எத்தனை தொலைவில் பின் தங்கிப் போயிற்று!"

"ஆனால் அதன் கண்கள் நம்மைப் பின் தொடருகின்றனவே!"

"இப்படி எவ்வளவு நாட்கள்தான் இருப்பது, பிரின்ஸ்!"

"நமது பார்வையில் உள்ள வேற்றுமை தீரும் வரை இப்படி இருந்தாக வேண்டும்!"

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? கண்களால் பார்ப்பதெல்லாம் கனவாக அல்லவா தோன்றுகின்றன?"

"அப்படியானால் கண்களை மூடிக்கொள்; கனவுகள் எல்லாம் மறைந்துவிடும்!"

"முடியாது பிரின்ஸ், முடியாது! கனவுகள் மறைந்து விட்டால் அப்புறம் நான்

"செஸ் சாம்ப்...!"



"எனக்கும் இந்தியாவின் தலைசிறந்த ஆட்டக்காரர் நாஸிர் அலிக்கும் நடைபெற்ற ஆட்டம்தான் தேசிய சாம்பியன் பதவியை நிர்ணயிக்கும் முக்கிய போட்டியாக அமைந்தது. கடைசிவரை யார் ஜெயிப்பார்கள் என்று நிர்ணயிக்க முடியவில்லை. ஒரு சமயம் நான் ஒரு காயை நகர்த்த முப்பது நிமிஷங்கள் எடுத்துக் கொண்டேன் என்றால் அந்த மாட்சின் மகிமையை அறியலாம்!" என்று விவரித்தார் புதிய தேசிய சாம்பியன் ரவிசேகர்.

இவர் விவேகானந்தா கல்லூரி மாணவர். செஸ் ஆட்டத்திலுள்ள மோகத்தினால் பி.எஸ்ஸி. பட்டப் படிப்பைப் பாதியில் நிறுத்திக் கொண்டார்!

பொள்ளாச்சி திரு என். மகாலிங்கம் தமிழக செஸ் கழகத்தின் சேர்மன். இரு ஆட்டங்கள் இந்திய தேசிய சாம்பியனோடு ஆடி நண்பர்களுக்குத் தம் ஆட்டத் திறமையை அண்மையில் அம்பலப்படுத்தினார்.

இருபத்தொரு வயதில் செஸ் விளையாட்டில் தேசிய சாம்பியனாக மிளிரும் ரவி சேகருக்குச் சர்வ தேச அரங்கில் இனி போட்டியிட்டும் புகழ் பெற வாய்ப்பு நிறைய உண்டு. - குண்டுமணி

என்ன செய்வது? எனக்குத் துணை இந்தக் கனவுகள்தானே? அவை மறைந்து விட்டால், நான் இருட்டில் அல்லவா தட்டித் தடுமாற வேண்டி வரும்!"

"ஆனால் அந்த இருள் இந்த வெளிச்சத்தைக் காட்டிலும் மேலாக இருக்கும், ரூபா! கனவுகள் நிஜமாகி விடும், கற்பனை மெய்யாகிவிடும்; கவலைப்படாதே!" என்று கூறியவாறே அநூப் அவள் கையைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டான். அவள் நெற்றியுடன் உறவாடிக் கொண்டிருந்த கூந்தலைக் கோதி விட்டான். ரூபா அவனை இன்னும் நெருங்கி வந்தாள். பனிப் போர்வை அவர்களைப் போர்த்தி மகிழ்ந்தது. அநூப் ரூபாவின் நெற்றியைத் தொட்டான். பிறகு கண்களைத் தடவினான். கன்னங்களை வருடினான். உதடுகளைத் தீண்டினான். ரூபா கண்களை மூடிக் கொண்டு இந்தக் காதல் ஸ்பரிசத்தை அநுபவித்து இன்புற்றாள். அப்புறம்....? அநூப்பின் உதடுகள் தன் காதின் அருகில் வளைய வருகின்றன என்பதை மூடிய கண்கள் மூடிய படியே உணர்ந்தாள். அவள் காதோடு அவன் என்ன சொல்ல விரும்பினானோ? ஆனால் சொல்லத்தான் முடியவில்லை அவனால்! அவன் உதடுகள் அவளது காதைத் தீண்டாத குறைதான்! அதற்குப் பதிலாக அவன் மூச்சுக் காற்று ஆவியாக மாறி ரூபாவின் ரோஜாக் கன்னங்களை முத்தமிட்டு மகிழ்ந்தது.

இந்த நேரம் பார்த்துத் தொலைவில் மேகங்கள் உறுமின. மின்னல் வெட்டியது. பனி மூட்டத்துள் மறைந்திருந்த நீர்த் திவலைகள் பளிச்சிட்டன. ரூபா பயந்து நடுங்கி அநூப்பைக் கட்டிக் கொண்டாள்.

"புயல் அடிக்கும் போலிருக்கிறதே!"

"அடிக்கட்டுமே! அதனால் என்ன?"

"எனக்குப் பயமாக இருக்கிறது."

"என்னிடமா, புயலிடமா?"

மேக கர்ஜனை மீண்டும் கேட்டது. குளிர் காற்று உடலைத் தாக்கியது. ரூபா அநூப்பிடமிருந்து விலகி, "வாருங்கள், போவோம்!" என்றாள்.

"எங்கே?"

"எங்காவது. சீக்கிரம் வாருங்கள். புயலில் சிக்காமல் தப்பிக்க முயல்வோம்!"

இருவரும் கையோடு கை கோத்துப் பனி மூட்டத்தைப் பிளந்து கொண்டு ஒற்றையடிப் பாதை வழியே வேகமாக நடந்தார்கள். அந்தப் பாதை மலைப்பகுதியில் எதிர்த்தாற் போலிருந்த பயணிகள் விடுதிக்குப் போவது. புயல் வருவதற்கு முன் ஏதாவது பாதுகாப்பான இடத்துக்குப் போய்விட வேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள்.

பயணிகள் விடுதிக்குப் போன பின்தான் அவர்கள் இருவரும் நிம்மதியான மூச்சு விட்டனர். ஆனால் காவலாளி அவர்களை உள்ளே நுழைய விடவில்லை. அநூப் எத்தனையோ வேண்டியும் அவன் மறுத்து விட்டான். வேறு வழியின்றி இருவரும் வெளி வராந்தாவிலேயே அமர்ந்தனர். ரூபா குளிரில் வெட வெடத்துப் போனாள். அநூப் தன் மப்ளரை அவளுக்குக் கொடுத்தான். ஊதல் காற்றிலிருந்து தப்ப இருவரும் தூணுக்குப் பின்னால் போய் அமர்ந்தனர். அநூப் ரூபாவின் உள்ளங் கையைப் பற்றினான்.

திடீரென்று ஒரு ஜீப் நுழையும் ஒலி கேட்கவே இருவரும் துணுக்குற்றனர். ஜீப் விளக்கின் வட்ட ஒளி இருட்டின் நெஞ்சைக் கிழித்துக்கொண்டு பாய்ந்து வந்தது. வண்டி வரும் ஒலி கொஞ்சம் கொஞ்சமாகக் கிட்டக் கேட்டது. அநூப் – ரூபா இருவர் உள்ளங்களிலும் நம்பிக்கைக் கீற்று ஒளி வீசிற்று. ஜீப்பின் 'ஹெட் லைட்' ஒளியில் பனித் திவலைகள் பளபளத்துக் கண்களைக் கூச வைத்தன. சிறிது நேரத்துக்கெல்லாம் ஜீப் வராந்தாவுக்கு அருகில் வந்து நின்றது.

அது அந்த ஃபிலிம் யூனிட்டைச் சேர்ந்த ஜீப் என்பதைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு நேரம் பிடிக்கவில்லை. காவலாளி அதைக் குறிப்பிட்டுத்தான் மறுத்திருந்தான். யார் வருகிறார்கள் என்பதை அறிய இருவரும் ஆவலோடு ஜீப்பைப் பார்த்தனர். சிலர் ஜீப்பிலிருந்து இறங்கி மங்கிய நிழல் ஒளிபோல் வராந்தாவை நோக்கி வந்தனர். அவர்கள் அருகில் வந்தபொழுது ரூபா மெதுவான குரலில், "ராஜேஷ்!" என்றாள். (தொடரும்)

பாராட்டுப் பெற்ற தீர்ப்பு!

பொதுமக்களுக்குத் திரையிடப்படுவதற்கு முன்பே மாநில விருது பெற்ற படம்: தீர்ப்பு. தெலுங்கு. ஆந்திர மாநிலத்தில் இப்படத்துக்கு வரி விலக்குக் கிடைத்திருக்கிறது. படத்தயாரிப்பாளரும், டைரக்டருமான திரு பு. விஸ்வேஸ்வர ராவ் (படம் - வலது) சமீபத்தில் தமது படத்தின் சிறப்பியல்பு களைக் கூறினார்:



படம் ஒரு மணி, ஐம்பத்தைந்து நிமிடங்களே ஓடுகிறது.

படம் தயாரிப்பில் இருக்கும்போது ஒரு மூக்குக் கண்ணாடியை மட்டும் குளோஸப் காட்சியாக எடுக்க வேண்டியிருந்தது. மேசை மீது கண்ணாடியை வைத்துவிட்டுக் காமிராவிடம் திரும்பினார் திரு ராவ். அப்போது ஒரு லைட் பாய் மேலிருந்து சரசரவென்று இறங்கி வந்தான். "சார், இந்தக் கண்ணாடியை அந்தக் காரெக்டர் போடவில்லை, சார். அது வேறே கண்ணாடி!" என்றான். "காட்சியின் அழகுக்காகத் தங்க பிரேமிட்ட கண்ணாடியைப் படமாக்க நினைத்த நான், அதை அணியும் காரெக்டரையே மறந்துவிட்டேன். தவறை உணர்ந்து, பையனைப் பாராட்டி, பொருத்தமான வேறு கண்ணாடியை வைத்துப் படமாக்கினேன். அப்படி ஒரு டீம் ஒர்க் உருவாக்கிய படம்தான் 'தீர்ப்பு'" என்கிறார் திரு ராவ்.

"என்னிடம் பிரபலமான டைரக்டர், காமிராமேன் மற்ற டெக்னீஷியன்கள் உள்ளனர். அவர்கள் என்னுடைய முந்தைய படங்களைச் சிறப்பாகத் தயாரித்து நன்றாகப் பெயர் சம்பாதித்திருக்கிறார்கள். அவர்களில் யாரையும் இந்தப் படத் தயாரிப்புக்கு நான் அழைக்கவில்லை. காரணம், இது ஒரு சோதனைப் படம். இது தோல்வி அடைந்தால், இதனால் அவர்கள் பெயரே கெட்டுவிடும். அடுத் தடுத்து அவர்கள் எவ்வளவுதான் வியாபார நோக்கில் படம் எடுத்தாலும் அதனால் நஷ்டம் ஏற்படலாம் இல்லையா?"

இப்படத்தில் எட்டுப் புது முகங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார் திரு ராவ். குறிப்பாகச் சொல்லப் படவேண்டியவள் புட்டம்மா என்ற எட்டு வயதுப் பெண். ஊதுபத்தி பாக்டரி ஒன்றில் ஊதுபத்தி உருட்டும் பெண்ணாக வேலை பார்த்த அவளைத் திரு ராவ் தம் படத்துக்குப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் துரதிருஷ்டவசமாக அந்தப் பெண் இப்போது உயிருடன் இல்லை.

வெளி நாடுகளில் காட்டப்படும் இந்தியத் திரைப் படங்கள் விழாவில் பங்கு கொள்ளும் முதல் தெலுங்குப் படம் தீர்ப்பு.



'பணத்தை நீட்டினால் ஆச்சா?' என்கிறாரோ கதாநாயகி? – தீர்ப்பில் ஒரு காட்சி.

புதுடில்லியில் நடந்த அகில உலகத் திரைப்பட விழாவில் இப் படம் திரையிடப்பட்டபோது அல்ஜீரியாவிலிருந்து வந்த ஒரு பிரதிநிதி பாதிப் படம் போய்க்கொண்டிருக்கும்போது "நிறுத்துங்கள்" என்றார். "என்னால் தாங்க முடியவில்லை; நான் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டேன். உணர்ச்சி வசப்படுகிறேன். இப்படத்தைத் தொடர்ந்து என்னால் பார்க்க முடியவில்லை" என்றார். படம் நிறுத்தப்பட்டது. "அது எனக்கு வெற்றிதான்" என்கிறார் திரு ராவ்.

தெலுங்குப் பேச்சு மொழி ஆந்திர மாநிலத்திலேயே வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு மாதிரி இருக்கிறது. அந்தந்த இடங்களிலிருந்து இந்தப் படத்தில் நடிக்க வந்தவர்களுக்கு இரவல் குரல் கொடுக்காமல் அவரவர் இயல்புப்படியே பேச வைத்துப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது. தகவல்: எஸ். எஸ்.

பாகவதர்: நேற்று ஏன் சார் என் கச்சேரிக்கு வர வில்லே?

வந்தவர்: அதற்குத்தான் கிளம்பினேன். திடீரென்று வேறு ஒரு கஷ்டம் வந்துவிட்டது.

- பண்ணைவேந்தன்

பொன்னியின் புதல்வர்



சுந்தா

9. நெஞ்சு பொறுக்குதில்லை !

இச்சகத்துளோர் எல்லாம்
எதிர்த்து நின்ற போதிலும்....

- பாரதியார்

புத்தாண்டு நன்னாளில் மங்கலமாய் எழுதுவதுதான் மரபு. ஆனால் இதற்கு மாறாகக் கல்கி ஆசிரியர், தமது பத்திரிகையின் 1944ம் வருடம் முதல் மாதம் முதல் தேதிய இதழின் தலையங்கத்தில், ஒரே வேதனையுடன் புலம்பி யிருந்தார்:

இன்னும் ஓராண்டு போய் விட்டது ! இந்தியா சுதந்திரம் அடையவில்லை.

பன்னிரண்டு மாதங்கள் பறந்து சென்று விட்டன ! பாரத நாட்டின் அடிமைத் தளை நீங்கவில்லை.

முந்நூற்று பத்து தினங்கள் உருண்டோடிச் சென்றுவிட்டன. நமது அரும் பெரும் தலைவர்கள் இன்னமும் சிறைக்குள்ளே தான் இருக்கிறார்கள்.

நினைத்தால் நெஞ்சு பொறுக்குதில்லை!
மறக்க முயன்றால் முடிவதில்லை!...

உலகத்தில் நடக்கும் பயங்கர யுத்தம் முடிந்தபாடில்லை. பூமியை இரத்த வெள்ளம் மூழ்கடித்துக் கொண்டு வருகிறது. ஆகாயத்திலிருந்து நெருப்பு மாரி பொழிந்து நாடு நகரங்களை அழித்து வருகிறது. மனிதர்களை மனிதர்கள் கொன்று தள்ளுகிறார்கள். பகைமையும் துவேஷமும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன.

``தோற்கிறவர்கள், ''கடைசி வரையில் விடோம் !'' என்று ஊளை இடுகிறார்கள். ஜயிக்கிறவர்கள் ''பழி! பழி !'' என்று கூவுகிறார்கள். ஆறறிவுள்ள மனித குலம் மிருகப் பிராயத்தை அடைந்து வருகிறது.

நினைத்தால் நெஞ்சு பொறுக்குதில்லை!
மறக்க முயன்றால் முடிவதில்லை!....

நெஞ்சு பொறுக்காத துயரங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கையில், மே மாதத் தொடக்கத்தில் மகாத்மா காந்தியை விடுதலை செய்யுமாறு வைஸ்ராய் வேவல் உத்தரவிட்டார் -- அண்ணலைப் பீடித்த மலேரியாவினால் ஏதேனும் ஆபத்து நேரிடுமோ எனப் பயந்து. காந்திஜியின் விடுதலையைப் பற்றி ''கல் மனம் கரைந்தது! சிறைக் கதவு திறந்தது!'' என்று உற்சாகத்துடன் எழுதத் தொடங்கிய கல்கி சில வரிகளுக்குப் பின், வேதனைத் தொனிக்கு மாறினார்:

ஆகாகான் அரண்மனையாகிய சிறைக்குள்ளே மகாத்மா இருபது மாதத்துக்கு முன்னால் பிரவேசித்த போது, அறுபது வருஷம் அவருடைய வாழ்க்கைத் துணைவியாக இருந்த அன்னை கஸ்தூரிபாயும், இருபத்தைந்து வருஷம் அவருடைய அந்தரங்கத் தொண்டராய் இருந்த ஸ்ரீ மகாதேவ தேஸாயும் அவருடன் அச்சிறைக்குள்ளே பிரவேசித்தார்கள்.

ஆகாகான் அரண்மனையிலிருந்து மகாத்மா வெளியே வந்தபோது அவர்கள்கூட வரவில்லை. அந்த இரு வாழ்க்கைத் துணைகளையும் தகனம் செய்த இடத்தில், கண்ணீரில் நனைந்த புஷ்பங்களைத் தூவிவிட்டு மகாத்மா தன்னந்தனியாக வெளியே வந்தார்....

காந்தி மகான் விடுதலை அடைந்தது குறித்து நாம் எல்லையற்ற குதூகலம் அடைய நியாயம் உண்டு. ஆனால் அவர் விடுதலை அடைந்த விதத்தைப் பற்றி நாம் மகிழ்ச்சி அடையவோ, பெருமை கொள்ளவோ காரணம் இல்லை. நம்முடைய முயற்சியினாலே, நாற்பதுகோடி மக்களின் தீரப் பிரயத்தனத்தினாலே மகாத்மா விடுதலை அடைந்துவிடவில்லை....

எத்தனையோ மகாநாடுகள் கூடின : மகாத்மாவை விடுதலை செய்ய வேண்டும் என்று தீர்மானங்கள் செய்தன. அத்தீர்மானங்களை எல்லாம் அதிகார வர்க்கத்தார் குப்பைக் கூடையில் போட்டார்கள்.

தேசியப் பத்திரிகாசிரியர்கள் 115 பேர் சேர்ந்து ஒரு பெரிய விண்ணப்பம் தயாரித்துக் கையெழுத்திட்டு அனுப்பினார்கள். ''உங்கள் வேலைகளைப் பாருங்கள்; யுத்த விளம்பரங்களைப் போடுங்கள் !'' என்று பிரிட்டிஷ் சர்க்கார் பதில் அளித்தார்கள்.

கடைசியாக மலேரியா சுரம் வந்து சிறையின் பூட்டை உடைத்தது : மகாத்மாவை விடுதலை செய்தது. நாற்பது கோடி மக்களாலும், அவர்களுடைய தலைவர்களாலும், பத்திரிகைகளினாலும் செய்ய முடியாத காரியத்தைக் கேவலம் கொசுக்கள் செய்து முடித்தன.

இது நமக்குப் பெருமை தரும் விஷயம் அன்று; நாம் மகிழ வேண்டிய நிலைமையும் அன்று.

ஆனாலும், இன்னொரு விதத்தில் மகிழ வேண்டிய நிலைமை ஒன்று விரைவில் வந்தது. அந்தப் புதிய நிலைமையினால், கல்கியும் அவரைப் போன்ற ராஜாஜி — ஆதரவாளர்கள் அனைவரும் மகிழ்ந்தார்கள். அவர்கள் மட்டும் அல்லாமல், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ராஜாஜியின் கொள்கையை வெறுத்தவர்களிலும்கூட சிலர் மகிழ்ந்தார்கள். அந்தகையவர்களில் ஒருவரான ம. பொ. சிவஞானம், அந்தப் புதிய நிலைமை என்ன என்பதை ''எனது போராட்டம்'' என்ற தமது சுய வரலாற்றில் எடுத்துச் சொல்லியுள்ளார். அப்போதுதான் அவர் சிறையிலிருந்து விடுதலை அடைந்து, சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் என்ற பதவியை மீண்டும் மேற்கொண்டிருந்தார்.

1944ல் நான் காந்தி விழாக் கொண்டாடும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அடிகள் உடல் நிலைக் குறைவு காரணமாக நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார். விடுதலைக்குப் பின் பம்பாய் நகருக்கு அருகில் உள்ள 'பர்ணகுடி' யில் தங்கியிருந்த அடிகளைச் சந்தித்துப் பேசினார் ராஜாஜி. இந்தச் சந்திப்பின் விளைவாகத் தலைவர் ராஜாஜியின் பாகிஸ்தான் ஆதரவுத் திட்டத்தைக் காந்தியடிகள் ஏற்றுக் கொண்டார். இதனை முதன் முதலாகப் பத்திரிகைகளில் படித்தபோது எனக்கு வியப்பு ஏற்பட்டது. ஆம்; நாட்டைப் பிளவுபடுத்தும் பாகிஸ்தான் திட்டத்தைக் காந்தி அடிகளே ஏற்றுக்கொண்டுவிட்டார் என்பது என்னால் நம்பக்கூடியதாயில்லை. ஆனால், நம்ப வேண்டிய நிலை இருந்தது. ராஜாஜியின் திட்டமானது முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கையிலிருந்து சிறிது மாறுபட்டதாகும். பாகிஸ்தான் கோரிக்கையை அது நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ளவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால், மாநில சுயாட்சி அடிப்படையில் முஸ்லிம் லீகைத் திருப்தி செய்ய முயன்றது ராஜாஜித் திட்டம்.

சிறையிலேயே, மாநில சுயாட்சிக் கோரிக்கை எனது மனத்தில் உருவாகியிருந்ததால், அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் பாகிஸ்தான் கொள்கையை அணுகும் ராஜாஜியின் திட்டத்தைக் காந்தியடிகள் ஏற்றுக் கொண்டது எனக்குப் பிடித்திருந்தது. இந்தச் சமாதானம்கூடத் தேவையில்லாமலே







○ ஜூலையில் கல்லோல் வாழ்த்துப் பெற்று செப்டம்பரில் தாக்குதலுக்கு உள்ளான திரு காமராஜ்.

○ ''பர்ணகுடி'' சந்திப்பின் விளைவாக ராஜாஜியின் பாகிஸ்தான் ஆதரவு திட்டத்தைக் காந்திஜி ஏற்றுக் கொண்டார்.

○ காந்திஜி — ராஜாஜி உடன்பாட்டின்படியான பாகிஸ்தான், ஜின்னாவுக்கு உடன்பாடாக இருக்கவில்லை.

○ ராஜாஜி வேண்டும் கட்சியில் தீவிரமாக இருந்த ''வீர அபிமன்யு'' ம. பொ. சி. யும் என். அண்ணாமலைப் பிள்ளையும்.





காந்தி அடிகள் ஏற்கும் எந்தத் திட்டத்தையும் ஏற்றுக் கொள்ளும் பக்தி மனப்பான்மை எனக்கு இருந்தது. அதனாலும், ராஜாஜி—காந்திஜி சந்திப்பும், அதன் விளைவாக அவர்களிடையே ஏற்பட்ட கொள்கை உடன்பாடும் எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தன.

(பக்கம் 290—1)

ராஜாஜியின் யோசனையை மகாத்மா ஏற்றுக் கொண்டதை அறிந்ததும், மகிழ்ச்சி பொங்கும் தலையங்கம் ஒன்றைக் கல்கி எழுதினார். அதனிடையே, முன்பு அதே யோசனைக்காகத் தமது அருந் தலைவர் பழிப்புக்கு இலக்கானதை எண்ணி வேதனைப்பட்டார்:

அரசியல் உலகத்தில், இராமாயண சூர்ப்பனகையைப் போன்ற மாய வேஷ சூர்ப்பனகைகள் அநேகம் பேர் உண்டு. சூர்ப்பனகையாவது இராமனிடம் உண்மையான காதல் கொண்டிருந்தாள். இந்த அரசியல் சூர்ப்பனகைகளுக்கு மகாத்மாவிடம் அத்தகைய உண்மையான பக்தி கிடையாது. தங்களுடைய மோச வேலைகளை மறைத்து மூடும் பொருட்டு அதீத காந்தி பக்தர்களாகவும் தேச பக்தர்களாகவும் நடிப்பவர்கள். அந்தப் பொய் நடிப்பில் ஓர் அம்சமாக இவர்கள் ராஜாஜியை ஓயாது தாக்கினார்கள்.

ராஜாஜியைத் தாக்கும் விஷயத்தில் இவர்கள் காட்டிய உற்சாகத்துக்குக் கங்கு கரை இல்லை. சொல்லத் தகாத வார்த்தைகளை யெல்லாம் சொன்னார்கள். "தேச மாதாவை வெட்டிப் பிளக்கப் பார்க்கிறார்!" என்றார்கள். "நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டார்!" என்றார்கள். "காந்திக்குத் துரோகம் செய்துவிட்டார்!" என்றார்கள். பாதகம் என்றார்கள். "பழி" என்றார்கள்....

நமது அரசியல் சரித்திரத்தில், மேற்கூறிய அத்தியாயமானது மிகவும் அவமானப்படத்தக்க ஓர் அத்தியாயமாகும். மேற்படி வஞ்சகத் துவேஷப் பிரசாரத்தினால், இந்தியப் பொதுஜனங்கள் — தமிழ் மக்களிலேகூட ஒரு பகுதியார் — ஏமாந்து போய், இந்தியாவின் சிறந்த அறிவாளியை — தமிழ்நாட்டின் தலைசிறந்த தியாகியை — தேச விரோதியாக நினைத்து நடத்தினார்கள் என்பதை நினைக்கும்போது,

"நெஞ்சு பொறுக்குதிலையே — இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்"

என்று பாரதியாருடன் நாமும் சேர்ந்து வருந்த வேண்டி யிருக்கிறது.

(கல்கி இதழ் 16-7-44)

காந்தி — ராஜாஜி உடன்பாட்டின் படியான பாகிஸ்தான், முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னாவுக்கு உடன்பாடாய் இருக்கவில்லை; அதன் அளவையும் சுய நிர்ணய உரிமை மூலம் அதை அடைய வேண்டியதான விதத்தையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. ராஜாஜியின் முயற்சிக்கு அது தோல்வியே என்றாலும் அதன் காரணமாய் அவருடைய கொள்கை தவறாகிவிடவில்லை.

அதைப் பற்றி அடுத்த இதழில் கல்கியின் கருத்து:

ராஜாஜியின் கட்சிதான் சரியான கட்சி என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிந்து போன பிறகும், சில மேதாவிகளுக்கு அவரைத் தூஷிக்காமல் இருக்க முடியவில்லை. தங்களுடைய பழைய அசட்டுத்தனங்களை மறைத்துக் கொள்வதற்காக அவர்கள், "இனிமேலாவது ராஜாஜிக்குப் புத்தி வருமா?" என்று கேட்கிறார்கள். ராஜாஜியின் புத்திதான் இந்தியாவிலேயே தெளிவான புத்தி என்பதும், அவருடைய புத்திமதியைக் கேட்காததினாலே தேசம் எவ்வளவோ மகத்தான நஷ்டங்களை அடைந்திருக்கிறது என்பதும் இப்போது மிக மிகத் தெளிவாகப் புலப்பட்டிருக்கிறது. புத்தி யாருக்கு வரவேண்டும் என்றால், அவரை வரைதுறை இல்லாமல் குற்றம் கூறியவர்களுக்குத்தான்.

ஜின்னாவின் முட்டுக்கட்டையினால் இந்திய அரசியல் முடக்க நிலையில் இருக்கையில் வெளி உலகில் யுத்த நிலைமை நாளுக்கு நாள் மாறிக் கொண்டிருந்தது. ஐரோப்பாவில் யுத்தம் மூள்வதற்கு மூல காரணமாக இருந்த முஸோலினி, 1945 ஏப்ரல் மாதத்தில் மாண்டார்; அவர் மூட்டிய யுத்தத்தை நெடுகிலும் பரப்பிய ஹிட்லர் அவரைத் தொடர்ந்து மடிந்தார். அடுத்த மாதத்தில் ஜெர்மனி சரணாகதி அடைந்தது. அதற்கு நாலு மாதங்களுக்குப் பிறகு, ஜப்பானில் அணு குண்டு வீசப்பட்டதை அடுத்து அந்த நாடும் சரணடைந்தது. அத்துடன் ஆறு ஆண்டுகளாய் உலகத்தை வாட்டி வதைத்துக் கொண்டிருந்த கோர யுத்தம் முடிவுற்றது.

ஐரோப்பாவில் யுத்தம் முடிந்த சில வாரங்களுக்கெல்லாம், இந்திய வைஸராய் வேவல், காங்கிரஸ் தலைவர்களையெல்லாம் விடுதலை செய்தார். ஏற்கனவே அவர் லண்டனுக்குப் பறந்து சென்று, இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்கான புதியதொரு திட்டத்துடன் திரும்பி யிருந்தார். அந்தத் திட்டத்தை இந்தியத் தலைவர்கள் ஏற்கும்படி செய்வதற்காக அவர் சிம்லா




"எவ்வளவு தைரியம் இருந்தா பகல் வேளையிலே இப்படித் துணிஞ்சு திருட வந்திருப்பே?"

"ராத்திரி வந்தா கறுப்புப் பணமாத் தெரியுதுங்க. அதனாலேதான் பகல்லே வந்தேன்."

— 'தி. கை. சே.'



G.E.C.
Osram



AMRUTANJAN
INHALER

தமிழக அரசு இதுவரை தயாரித்து வெளியிட்டுள்ள அத்தனை படங்களிலும் விடாமல் குரல் கொடுக்கும் வாய்ப்பைப் பெற்றவர் யார் தெரியுமா?

திரு சீர்காழி கோவிந்தராஜன்தான். ஒவ்வொரு படத்தின் இறுதியிலும் திருக்குறளை இசைப்பவர் இவர்தானே!

'டி.கை.சே,

வில் ஒரு மகாநாடு கூட்டினார். அதில் ராஜாஜியும் கலந்து கொண்டார். காங்கிரஸ் தலைவர்கள் எவ்வளவோ வளைந்து கொடுத்தும், ஜின்னா, ஒரே விரைப்பாய் இருந்த காரணத்தினால், அந்த மகாநாடு தோல்வியுற்று, முடக்க நிலை தொடர்ந்தது.

சிம்லாவில் அந்த மகாநாடு நடந்த அதே சமயத்தில் பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடந்தது. யுத்தத்தில் அடைந்த வெற்றியைத் தேர்தலிலும் அடைந்து விடலாம் என்ற ஆசையுடன் சர்ச்சில் அவசரமாய் நடத்திய அத்தேர்தலில் அவருடைய கன்ஸர்வேடிவ் கட்சிக்குப் பதிலாகத் தொழிற் கட்சிதான் வெற்றி பெற்றது. இந்தியாவின் பால் பரிவு கொண்ட ஆட்லியின் தலைமையில் புதிய மந்திரி சபை ஒன்று பதவி ஏற்றது.

சற்றுப் பொறுத்து இந்தியாவிலும் பொதுத் தேர்தல்கள் நடத்த ஏற்பாடாயிற்று; வேவல் திட்டம் பலனற்றுப் போனதால், யுத்தத்துக்கு முன்னாலிருந்த பழைய அரசியல் அமைப்பின்படியே நடந்தன அந்தத் தேர்தல்கள். அவை அறிவிக்கப்பட்ட சமயத்தில் கல்கி எழுதிய வரிகள் கவனத்துக்கு உரியன:

உளுத்துப் போன பழைய சட்டசபைகளுக்குத் தேர்தல் நடத்துவது பற்றித் தீவிரமான ஏற்பாடுகள்; தகராறுகள்; வாதப் பிரதிவாதங்கள்......

''ஆகஸ்டு தியாகங்களின் பலனாகக் காங்கிரஸ் முன்னைக் காட்டிலும் மகத்தான பலத்தை அடைந்திருக்கிறது'' என்று பண்டித ஜவாஹர்லால்ஜி முழங்கி வருகிறார். இது சத்தியமான வார்த்தை. தியாகங்களின் காரணமாக ஐந்த ஸ்தாபனமும் புதிய பலத்தை அடைகிறது. ஆனால் அப்படி அடைந்த பலத்தை வீணில் சிதறவிடக் கூடாது. இந்தியாவின் சுதந்திரத்துக்குப் பயன்படுத்த வேண்டும்.

இந்தியாவின் தேசிய சுதந்திர இயக்கத்தில் சென்ற இருபத்தைந்து வருஷ காலத்தில் நாம் பார்த்து வரும் பரிதாபமான விஷயம் என்னவென்றால், ஒரு தடவை தேசத்தொண்டர்கள் தியாகம், சிறைவாசம் முதலியவை செய்துவிட்டு வந்ததும், தேசத்தின் சுதந்திர இலட்சியம் மறந்து விடப்படுகிறது. தியாகம் செய்த தேசபக்தர்களுக்குள்ளே சண்டைகளும், பரஸ்பர வைஷம்யங்களும் மூளுகின்றன. தேச பக்தியும் தியாகமும் கேவலம் பதவிச் சண்டைகளிலும், முனிசிபாலிடி ஜில்லா போர்டு ஸ்தானங்களிலும் வந்து முடிகின்றன. இந்தத் தடவையும் அப்படியே ஆகிவிடுமோ என்பதற்கு அறிகுறிகள் காண்கின்றன.

(கல்கி இதழ் 9-9-45)

அவர் பயந்தபடியேதான் ஆயிற்று.

ஜூலை மாதத் தொடக்கத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் காமராஜ், நீண்ட காலச் சிறைவாசத்திலிருந்து வெளியே வந்தார். அவருடைய படத்தை, தமது பத்திரிகையின் அம்மாத 8ம் தேதிய இதழின் அட்டையில் கல்கி பதித்து, முன்பு அவர் ராஜாஜி மீது ஒழுங்கு நடவடிக்கை தொடுத்ததையும் அதனால் உண்டான விளைவுகளையும் மறந்த முறையில் பாராட்டுக் குறிப்பு எழுதினார்:

ஆரம்பத்திலிருந்து மாசு மறுவற்ற தேச ஊழியம் செய்து வந்திருக்கும் காங்கிரஸ் தொண்டர்களில் ஸ்ரீ காமராஜ் நாடார் ஒருவர். பதவியினாலோ செல்வத்தினாலோ அல்லது இவற்றின் தியாகத்தினாலோ அன்றி, இடைவிடாத தேச ஊழியத்தினாலும் குணத்தின் மேன்மையினாலுமே, தமிழ் நாட்டுக் காங்கிரஸின் தலைமைப் பதவிக்கு வந்தவர். காங்கிரஸின் சரித்திரத்தில் மிக நெருக்கடியான ஒரு சமயத்தில் ஸ்ரீ காமராஜ் தமிழ் நாட்டுக் காங்கிரஸின் தலைவரானார். அந்தப் பதவியை மிகத் திறமையாக வகித்து இறுதி வரையில் அவர் உறுதியாக நின்றதை எண்ணிப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

காங்கிரஸ் கட்சியின் மீது முன்பு அரசாங்கம் விதித்த தடை விலகியதை அடுத்து, மீண்டும் காமராஜ் தமது பதவியில் செயல்படத் தொடங்கினார். மேலாவின் உத்தரவுப்படி, காங்கிரஸின் வெவ்வேறு அங்கங்களையும் புதிதாய்த் தேர்ந்தெடுத்து அமைக்க வேண்டிய கட்டமும் அப்போது உண்டாயிற்று. அச்சமயத்தில் ராஜாஜி காங்கிரஸில் மீண்டும் சேர்ந்து கொள்ள விரும்பி, அகில இந்திய காங்கிரஸின் தலைவர் (அப்போது அப்பதவிக்கு ராஷ்டிரபதி என்று பெயர்) மௌலானா ஆஸாதுக்கு ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதினார். அதற்கு ராஷ்டிரபதி மகிழ்ச்சியுடன் ஒப்புதல் அளித்துப் பதில் எழுதினார். அதை அடுத்துத் திருச்செங்கோடு தாலுகா காங்கிரஸ் கமிட்டி ராஜாஜி

யைத் தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது. அந்தத் தேர்தல் செல்லாது என்று காமராஜ் அறிக்கை வெளியிட்டார்.

அவ்வளவுதான்! தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்களில் ஒரு பகுதியினர், ராஜாஜி காங்கிரஸுக்குத் திரும்பக் கூடாது. ''ராஜாஜி வேண்டாம்'', என்று பெரிதாகக் கிளர்ச்சி செய்தார்கள். ராஜாஜி பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்தார் என்பதையும், பலாத்கார ஆகஸ்டுப் புரட்சியைக் கண்டித்தார் என்பதையும் அவர்கள் காரணங்களாய்க் கூறினார்கள். அவர்கள் கூறாத காரணம் ஒன்றும் உண்டு; அதுதான், அவர் மீண்டும் பிரதம மந்திரியாய் வராதபடி தடுக்கவேண்டும் என்பது. அவர்களுடன் ஆந்திரக் காங்கிரஸ்காரர்கள் பலரும் சேர்ந்து கொண்டார்கள்.

''ராஜாஜி வேண்டாம்'' என்பதற்கு எதிராக, ''ராஜாஜி வேண்டும்'' என்ற கட்சியில் தீவிரமாய் இருந்தவர்களில் ஒருவர் ம. பொ. சிவஞானம். (எதற்கும் துணிந்து அவர் தம் கட்சியில் நின்று போராடியதற்காக, அவரை ''வீர அபிமன்யு'' என்று சொல்லி ராஜாஜி பாராட்டினார்.) இன்னொருவர் என். அண்ணாமலைப் பிள்ளை. அவருடைய ஆதரவின் தனிச் சிறப்பு என்னவென்றால், எந்தக் கமிட்டிக்குக் காமராஜ் தலைவராக இருந்தாரோ, அந்தக் கமிட்டியின் செயலாளர் அவர்.

இரு தரப்பாரும் ஊர் ஊராகக் கூட்டம் போட்டார்கள்; ராஜாஜி வேண்டும் என்றும், வேண்டாம் என்றும் கோஷமிட்டார்கள்.

ராஜாஜிக்கு எதிரான கட்சியை முறியடிப்பதிலும், ஆதரவான கட்சியைப் பலப்படுத்துவதிலும், கல்கியும் சதாசிவமும் தமது செல்வாக்கையும் தொடர்புகளையும் பயன்படுத்தினார்கள். தமது பத்திரிகையை அதற்கென முடுக்கி விட்டார்கள். ஆதரவாளர்களின் கடிதங்களையும், ஆதரவுக் கூட்டங்கள், நடவடிக்கைகள் பற்றிய விவரங்களையும் பக்கம் பக்கமாய் வெளியிட்டார்கள். அவர்களுடைய ராஜாஜி பக்தி முன்பு எப்போதும் அவ்வளவு பெரும் அளவில் வெளிப்பட்டதில்லை எனலாம்.

அந்த விவாதத்தின்போது கல்கியின் எழுத்துக்களில் ஒரு தனி வேகமும் உணர்ச்சியும் பொங்கி ஓடின. 1945 செப்டம்பர் 16ந் தேதிய கல்கி இதழில் அவர் எழுதிய தலையங்கம், நெஞ்சு பொறுக்காத அவருடைய ஆத்திரத்தை அப்படியே அள்ளி வீசிற்று:


....காங்கிரஸ் என்பது மகத்தான ஸ்தாபனம். அறுபது வருஷ காலமாகத் தேச விடுதலைக்குப் பாடுபட்டு வரும் ஸ்தாபனம். ஒரு சில மனிதர்களின் தனி சொத்து அல்ல காங்கிரஸ்; பாரதியார் பாடி இருப்பது போல் நாற்பது கோடி 'ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொது உடைமை.' அப்பேர்ப்பட்ட ஸ்தாபனத்தில் பெரிய பதவி வகிப்பவர்களிடம் சின்ன புத்தி காணப்பட்டால் அது அந்த ஸ்தாபனத்துக்கே இழிவு தருவதாகும். காங்கிரஸ் ஸ்தாபனத்தில் நிர்வாகப் பதவி வகிப்பவர்களிடம் பெரிய புத்தியையும் பெருந் தன்மையையும் எதிர்பார்க்க நமக்கு உரிமை உண்டு....

ராஜாஜி (முன்பு) ராஜிநாமா செய்தபோது மாகாணக் கமிட்டியில் திருச்செங்கோடு தாலுகா கமிட்டியின் பிரதிநிதியாக இருந்தார். எனவே, இப்போது காங்கிரஸில் மீண்டும் சேரத் தீர்மானித்ததும் திருச்செங்கோடு கமிட்டிக்குத் தெரிவித்தார். திருச்செங்கோடு தாலுகா கமிட்டியார் பழையபடி ராஜாஜியை மாகாணக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுத்தார்கள். இதைக் குறித்துத் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ காமராஜ் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் தமிழ் மாகாண ராஷ்டிரபதி என்ன தெரிவித்திருக்கிறார் என்று நினைக்கிறீர்கள்? மௌலானா ஆஸாதைப் போல் ராஜாஜி காங்கிரஸுக்குத் திரும்பி வருவது பற்றி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறாரா? பிரிந்து போன தலைவரை சந்தோஷத்துடன் வரவேற்கிறாரா? மௌலானாவைப் போல் ''சென்றதை மறந்துவிடுவோம், இனிச் சேர்ந்து தொண்டு செய்வோம்'' என்று சொல்லியிருக்கிறாரா?

இப்படி யெல்லாம் சொல்லியிருந்தால் ஸ்ரீ காமராஜ் வகிக்கும் பெரிய பதவிக்கு மிகவும் உகந்ததாக அல்லவா இருக்கும்? அவ்வளவு பெருந்தன்மையுடனோ பெரும் புத்தியுடனோ அவர் பேசிவிடவில்லை. ''திருச்செங்கோட்டில் தேர்தலே நடந்திராது; நடந்திருந்தாலும் அது செல்லாது!'' என்கிறார். ராஜாஜி எதற்காகக் காங்கிரஸுக்குத் திரும்பி வருகிறார் என்ற கோபம் அவருடைய அறிக்கையில் தொனிக்கிறது.

திருச்செங்கோடு காங்கிரஸ் காரியதரிசி மேற்படி விஷயத்தைப் பத்திரிகைக்குத் தெரிவித்தபோது, அதனுடன் விதிகளின்படி அச்சிட்ட. தேர்தல் விளம்பரம் முதலிய



''ஏனப்பா இவ்வளவு வயசாச்சே! ஏதாவது கல்யாணம் கார்த்தி பண்ணிக்க உனக்கு ஆசை இல்லையா?''
''நான் 'எவர் ரெடி' சார்!''
''பின்னே?''
''என்னைக் கல்யாணம் செஞ்சுக்க எவ ரெடி?''
'தி.கை.சே.'

வற்றையும் அனுப்பியிருந்தார். இதிலிருந்து தேர்தல், முறைப்படி நடந்திருப்பதாகவே ஏற்படுகிறது. மேற்படி தேர்தலில் அப்படி ஏதாவது முறை தவறு இருந்தால், அதை உடனே நிவர்த்தி செய்து தேர்தலை ஒழுங்கு படுத்தத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் முன்வந்திருக்க வேண்டும். ராஜாஜி காங்கிரஸுக்குத் திரும்பி வர விருப்பம் தெரிவித்ததும், அவர் ராஜிநாமா செய்த ஸ்தானங்களுக்குத் திரும்ப அவரை உடனே தெரிந்தெடுக்கும்படி ஏற்பாடு செய்ய ஸ்ரீ காமராஜே முன்வந்திருக்க வேண்டும். இதற்கு நேர்மாறாக ராஜாஜி எதற்காகக் காங்கிரஸுக்கு வருகிறார் என்று ஆத்திரப்படுவது போல் இருக்கிறது காமராஜின் அறிக்கை. மௌலானா ஆஸாதின் பெருந்தன்மையான கடிதத்துக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்?....

ராஜாஜி தமிழ் நாட்டுக் காங்கிரஸில் சேர்ந்து-தொண்டு செய்வதும் செய்யாததும் ஒரு சிலருடைய இஷ்டத்தைப் பொறுத்ததல்ல. தமிழ்ப் பொதுமக்களின் இஷ்டத்தைப் பொறுத்தது. தமிழ் நாட்டுக் காங்கிரஸ்வாதிகள் பெரும்பாலோருடைய இஷ்டத்தைப் பொறுத்தது.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர்கள் ராஜாஜி வேண்டும் என்று விரும்புகிறபடியால்தான் ராஜாஜி மீண்டும் காங்கிரசுக்கு வருகிறார். அது போலவே தமிழ்ப் பொது மக்களும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ்வாதிகளும் ராஜாஜியின் அரசியல் தொண்டை விரும்பத்தான் செய்கிறார்கள். ராஜாஜி காங்கிரஸுக்குத் திரும்பி வருவதை வரவேற்கத்தான் செய்கிறார்கள்.

ராஜாஜி காங்கிரசுக்குத்திரும்பி வருவதைத் தடுக்க நினைக்கும் சின்னத்தனமான காரியங்களை அவர்கள் வெறுக்கிறார்கள்.

இந்தத் தலையங்கம் வெளியாகியிருந்த கல்கி பிரதிகளைப் பல ஊர்களில் காமராஜ் கோஷ்டியினர் பொது இடங்களின் கொளுத்தினார்கள். அவர்கள் வெகுண்டதற்கு அந்தத் தலையங்கத்தின் கருத்துக்களை விட, அதற்குக் கல்கி கொடுத்திருந்த தலைப்புத்தான் பெரிதும் காரணமாய் இருந்தது. ''பெரிய பதவியும் சின்னப் புத்தியும்'' என்பதே அந்தத் தலைப்பு.


பின்னொரு சமயம், ''சின்னப் புத்தி'' என்று சொன்னதற்காகக் கல்கி வருத்தம் தெரிவித்து எழுதினார். எப்போது, எப்படி என்பதையும் விவாதம் மேலும் தொடர்ந்து நல்லபடியாய்த் தீர்ந்ததையும் இனி பார்ப்போம். (தொடரும்)

வென்றவர் தோற்றனர்! தோற்றவர் வென்றனர்!

இது என்ன புதிர் என்று வியக்கிறீர்களா? சென்னை சர்வ கலாசாலை யூனியன் இன்டோர் ஸ்டேடியத்தில் இந்த அற்புதம் நிகழ்ந்தது. சர்வ கலாசாலைகளுக்கான டேபிள் டென்னிஸ் போட்டியில் முதலில் நடைபெற்ற தென் பிரிவு இறுதி ஆட்டத்தில் சென்னை சர்வ கலா சாலை கோஷ்டி பம்பாய் சர்வ கலாசாலை கோஷ்டியை வென்றது. ஆனால் அடுத்து நடந்த அகில இந்திய சர்வ கலாசாலைக்கான போட்டியில் பம்பாய் சர்வகலாசாலை கோஷ்டி சென்னை சர்வகலாசாலை கோஷ்டியை வென்று விட்டது! பம்பாய் சர்வ கலாசாலை கோஷ்டியில் கிரான் குல்கர்னி, அதுல் பாரிக், கேசவானி ஆகிய மூவரும் அகில இந்திய சர்வ கலாசாலை வெற்றிக் கோப்பையைப் பெற்றனர். சென்னை சர்வ கலாசாலைக் கோஷ்டியில் இறுதி வரை போராடிய சந்திரசேகர் பாராட்டுக் குரியவர்.


பெண்களுக்கான இறுதிப் போட்டியில் வெற்றி பம்பாய்க்கு. வெற்றி தேடித் தந்தவர்களில் முக்கியமானவர்கள் காப்டன் நந்தினி குல்கர்னியும், கலாவதி சீதாராமும். - குண்டுமணி

○ அதுல் பாரிக்





○ சந்திரசேகர்



உருவெளி

—காடவன்—

படுக்கையினின்றும் எழுந்து உட்கார்ந்து கொண்டு அந்த வைகறைப் பொழுதின் சக்தி மிக்க காற்றலைகளைச் சில முறை ஆழ்ந்து சுவாசித்துக் கொண்ட சுவாமி, அடுத்தாற் போல் வீட்டுக்குள் எழுந்து செல்ல முயன்ற போது, ஒரு கனத்த தெருப் புழுதிப் படலம் காற்றில் மிதந்து வந்து அவனைத் திக்குமுக் காடச் செய்தது.

அவனுக்குத் தன் வீட்டுத் தெருவின் மேலண்டைப் பக்கம் திரும்பிப் பார்க்க மனத்துக்குள் ஒரே திகில்! அங்கு அடுத்த வீட்டு வைரக்கண்ணு ஒரு கட்டை விளக்குமாற்றால் தெரு மண்ணைச் சுரண்டிக் குவித்துக் கொண்டிருந்தாள்! அந்தப் புழுதிப் படலம் அங்கிருந்து புறப்பட்டு வந்ததுதான்!

சுவாமி படுக்கையைச் சுருட்டி வைத்துக் கொண்டு எழுந்து போக மனமில்லாமல் எழுந்து உள்ளே போனான்.

உள்ளே ஜன்னல் பக்கச் சுவரோரம் கொஞ்சம் மறைவாக நின்று கொண்டு அந்த ஜன்னலின் மேல் பக்கக் கதவுகளுள் ஒன்றை மெல்ல—ஒரு ஜாக்கிரதையோடு திறந்தான்! மங்கிய வெளிச்சம் ஓரளவுக்கு அவ்வறையினுள்ளே பாய்ந்து வந்தது. கூடவே வைரக்கண்ணு எதிர் வீட்டு அம்மாளுடன் வாய்ச் சண்டை போடும் சத்தமும் பலமாய்க் கேட்டது. ஜன்னல் ஓரத்தில் கிடந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அவன் நெட்டுயிர்ப்பாய் ஒரு முறை சுவாசம் விட்டுக் கொண்டான். பிறகு எழுந்து வெளியே நடையைக் கட்டினான்.

திண்ணையில் படுத்திருந்த தன் மீது தெருப் புழுதியை அள்ளிக் கொட்டாத குறையாக வைரக்கண்ணு வீதி பெருக்க வேண்டுமா? அவளைச் சொல்லி என்ன பயன்? தன்னைச் சேர்ந்தவர்களே தன்னை மதியாத போது அண்டை வீட்டுக்காரர்களா மதிக்கப் போகிறார்கள்? ஊர்க் கோடியில் இருந்த கோயிலுக்கு அவன் போய்ச் சேர்ந்தான். துர்க்கையம்மன் சன்னதி எதிரில் நின்று பிரார்த்தித்தான் :

ஊதுவத்தியின் நறுமணப் புகை அலையலையாகச் சற்று மேலெழும்பி, பின்னர் காற்றோடு கலந்து மறைவதையே சுவாமி கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த அறையை அப்போது கூட்டிப் பெருக்கிச் சுத்தப்படுத்தியவனும் அவனே; அதில் ஒரு பக்கச் சுவரில் மாட்டப்பட்டிருந்த தெய்வப் படங்களுக்கு அடியில் அந்த ஊதுவத்திகளைக் கொளுத்தி வைத்தவனும் அவனே!

வாசலில் ஏதோ பேச்சரவம் கேட்டது. சுவாமி அவசரமாக எழுந்து வாசலுக்குச் சென்றான். அவன் சந்தேகம் வீண் போகவில்லை. அங்கு நின்றிருந்த மூன்றுவது வீட்டுக்காரரான சிரஸ்ததாரின் பேரனைப் பார்த்த போது அவனுக்கு மனத்தில் ஓர் எரிச்சலே ஏற்பட்டது.

சுவாமி, அந்தச் சிறுவனைப் பார்த்து, ''ஏண்டா! எங்கே வந்தே?'' என்று கோபத்தோடு கேட்டான்.

''தாத்தா பூ வாங்கிட்டு வரச் சொன்னாரு. கடைத் தெருவிலேயிருந்து பூ வாங்க மறந்து போய் வந்து விட்டாராம்! பூஜைக்குப் பூ வேணும்னு கேட்கச் சொன்னாரு!''

''பூ வாங்க மறந்துடணும், பூஜை மட்டும் வேணுமோ?... நீங்களும் உங்க பூசையும்...! ஏண்டா அறிவுங்கிறது உங்க ஜன்மத்திலேயே கிடையாதா? எத்தனை தரம் சொல்றது உங்களுக்கு. இந்த வேலே வைச்சுக்

காதிங்கன்னு! எவன் பயிராக்கி வைச்சிருப்பான், பறிச்சுக்கிட்டு வரலாமென்கிற ஒரே நினைப்புத்தானா உன் பாட்டனுக்கு? பாட்டன் வழியில் பேரன் என்று ஆகிவிடக் கூடாது. அந்த மனுஷனை இங்கே வரச் சொல்லு போ!''

சிரஸ்ததாரின் பேரன் திரும்பிப் போக ஓரடி எடுத்து வைத்தான். அதற்குள் உள்ளிருந்து, ''இந்தா, பூ!'' என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது. சுவாமி சட்டென்று திரும்பிப் பார்த்தான். அவனுடைய அண்ணனின் இளைய மகள் நிலைப்படியைக் கடந்து வெளி வாசலுக்கு வந்து நின்றுகொண்டு, கை நிறைய அடுக்கி வைத்திருந்த செம்பரத்தம் பூக்களை அந்தச் சிறுவனை நோக்கி நீட்டினாள்.

பூக்களை வாங்கிக் கொண்டு அந்தச் சிறுவன் போய்விட்டான். அவன் போகும்போது சுவாமியைப் பார்த்து ஒரு முறை சிரித்தான். அவன் சிரிப்பிலிருந்த ஏளனம் சுவாமியைச் சுட்டுப் பொசுக்கியது.

இப்போது மீண்டும் சுவாமி நாற்காலியில் அப்படியே ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தான். அவன் கண்களில் ஒரு வெறித்த நோக்கும் இருந்தது. ஆனால் எதிரிலிருக்கும் எந்த வஸ்துவின் பேரிலும் அவனுக்குக் கவனம் செல்லவில்லை.

சொல்லடி பட்டவனுக்குத் துன்பம் அதிகம் தானே! சுவாமியின் மனத்தில் ஏற்கனவே ஈட்டி முனைத் தாக்குதல்களினால் ஏற்பட்டிருக்கிற வடுக்களில் அவ்வப்போது அடியும் இடியும் பட்டுக் கசிவும் ஏற்படுகிற சந்தர்ப்பங்களிலெல்லாம் அவன் மருந்தாக ஓர் உருவத்தை நினைத்துப் பார்க்க முயலுவதுண்டு! இப்போதும் அவன் அந்த முயற்சியில்தான் ஈடுபட்டிருந்தான்.

சுவாமிக்கு இப்போது நாற்பது வயதுக்கு மேலிருக்கும். சுவாமியின் அண்ணன் ஒருவர் உத்தியோகத்தின் பொருட்டு வெளியூரில் தம் மனைவி மக்களோடு வசித்துக் கொண்டிருந்தார். அறிவையும் நெறிகளையும் புறக்கணித்துவிட்டு, வயதையும், சம்பாத்தியத்தையும் மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தால் அந்தக் குடும்பத்துக்குத் தலைவர் சுவாமியின் மூத்த அண்ணனே! அவருக்கு வியாபாரம் ஜீவனோபாயம். மனைவி, மக்கள் என்றெல்லாம் அவருக்கும் பேறுகள் கிட்டியிருந்தன. அவருடைய பையன் ஒருவன் கல்லூரியிலும் படித்துக் கொண்டிருந்தான்.


இதுகாறும், இவர்கள் அனைவரும் தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களே என்றுதான் சுவாமி எண்ணிக் கொண்டிருந்தான். இனியும் அவனால் அவ்வெண்ணத்தை மாற்றிக் கொள்ள முடியாது. ஆனால்...? வெளியூரிலிருக்கிற சுவாமியின் அண்ணனோ, தம் குடும்பம் என்றால் தாமும் தம் மனைவி மக்களும் மட்டுமே என்று எண்ணினார். தம்முடன் பிறந்தவர்களைக் கூடத் தம் குடும்பத்தில் ஒரு பாவனையாகவேனும் சேர்த்துக் கொள்வதில் அவருக்கு ஒரு தயக்கமே இருந்தது. அவர்களைப் பற்றிய பொறுப்புகளோ அல்லது ஆசைகளோ தமக்கு மனத்தில் இருந்தால்கூட அவற்றை வெளிப்படுத்திக் கொள்ளக் கூடாது என்று அவர் சர்வ ஜாக்கிரதையுடனேயே இருந்து வந்தார். அவருக்கு மனைவி வழியிலும் சொத்துக்கள் கிடைத்திருந்தன.

உள்ளூரிலிருக்கிற சுவாமியின் அண்ணனும் மனத்தளவில் சுவாமியை மட்டும் நீக்கிவிட்டு மற்றெல்லாரையும் தம் குடும்பமாகவே பாவித்தான்.

சுவாமி தனித்து விடப்பட்டு விட்டான். ஆயினும், அந்த வீட்டுக்குள் அவனுக்கு யாரும் உணவில்லை என்று சொல்லிவிடவில்லை. அவனும் உணவென்று கேட்டதில்லையே! அந்தக் குடும்பம் தன்னுடைய குடும்பமே என்ற நம்பிக்கை அவனுக்கு இன்னமும் இருந்ததால் அவனும் அங்கேயே சாப்பிட்டுக் கொண்டிருந்தான்!

அந்த வீட்டுக்குள் தனக்குக் கிடைத்திருக்கிற — கிடைத்து வருகிற அவமதிப்புக்களையும் உதாசீனங்களையும் கருத்திற்கொண்டு, தன்னையும், தன்னைச் சேர்ந்தவர்களையும் பற்றி எண்ணிப் பார்த்தபோது, கடைசியில் அவனது மனத்தில் எஞ்சி நின்றது ஒரு தவிப்பே! அப்போது கூட அவன் ஒரு பாமரனைப் போன்று பரிதவித்துப் போய்விடவில்லை. அந்தத் தவிப்புக்கு அடியில் ஒரு விவேகம் அரும்பு கட்டியிருந்ததால் அவன் யாரையும் பற்றிக் குறைப்பட்டுக் கொள்ளவுமில்லை. பிறரைக் குறை சொல்ல விரும்பாத ஒருவனுக்குத் தன்னைத் தானே நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியுண்டோ?

பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு வெளியே வந்த சுவாமி கொஞ்ச காலம் வரை அவ்வப்போது பத்திரிகைகளைப் பார்த்து வேலைகளுக்கென்று மனுக்கள் போட்டுக் கொண்டுமிருந்தான். எங்கிருந்தும் அவனுக்கு ஒரு பதில் வந்ததில்லை. அவனும் எதிர்பார்த்திருக்கவுமில்லையே! இந்த வேலை விஷயங்கள் எல்லாமே அவனுக்கு ஒரு வேடிக்கை விளையாட்டுத்தான்!



அவனுக்கு மனச் சாந்தி கிடைத்த இடம் ஆலயம்தான். வடக்குப் பிராகாரத்தில் உள்ள துர்க்கையம்மன் சந்நிதிக்கு வந்து,

''பித்துற்ற நெஞ்சிற்கோர் — அருட்
பேரொளி யாகிடுவாய்!
சித்தான வித்தையொன்றில் — .
சிந்தைதனை ஆழ்த்திடுவாய்!''

என்று திரும்பத் திரும்ப மனத்துக்குள் சொல்லிக் கொண்டு அதிலேயே ஆறுதல் பெற்று வந்தான். கோயிலுக்குப் போய் வருவதை நித்திய கடமைகளுள் ஒன்ருகவே கொண்டு விட்டிருந்தான்.

ஒரு நாள் மாலை நேரம். ஒரு பாதி உலகுக்கு ஒளியூட்டிய சூரியனும் அப்போது மறு பாதி உலகை எட்டிப் பார்க்கப் போய் விட்டிருந்தான். கோயிலில் துர்க்கையின் சந்நிதியில் கூப்பிய கரங்கள், மூடின கண்கள், அதே மானசிகப் பிரார்த்தனை — ''பித்துற்ற நெஞ்சிற்கோர்....'' நேரம் நிமிடக் கணக்கில் ஊர்ந்து கொண்டேயிருந்தது.

கண்களைத் திறந்த சுவாமியின் எதிரில் ஒரு பெண்மணி தோன்றிஞள். சுவாமி அவளையே பார்த்தான். அந்தப் பெண்மணி சுவர் விளிம்பில் வைத்திருந்த எண்ணெய்க் கிண்ணத்தை எடுத்துச் சரவிளக்குகளில் எண்ணெயை ஊற்றிய பிறகு அங்கேயே நின்று கொண்டிருந்த சுவாமியைப் பார்த்து என்ன நினைத்தோ ஒரு முறை சிரித்தாள். அப்பெண்மணி அப்படிக் கள்ளம் கபடமற்றுச் சிரித்ததைச் சுவாமி கவனித்தான். அவனுக்கும் பதிலுக்குச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது.

அந்தப் பெண்மணியுடன் வந்திருந்த சிறுமி விளையாட்டாகவும் ஒருவித உரிமையோடும் சுவாமி பக்கம் தாவிஞள். அவன் அவள் கன்னத்தைச் செல்லமாகத் தட்டிச் சற்றுக் கொஞ்சிவிட்டு அந்தப் பெண்மணியிடம் ஒப்படைத்தான்.

இன்னும் அங்கேயே நிற்பது ஓர் இங்கிதக் குறைவாகிவிடும் என்ற நினைப்பு ஏற்படவே சுவாமி அவ்வாலயத்தை விட்டு வெளியே வந்தான். வெளியே வந்த பிறகும் அவனுக்கு அந்தப் பெண்மணியைப் பற்றிய சிந்தனைகள் ஏற்படாமல் இல்லை. அவன் நினைத்துக் கொண்டான்: ''என்னைவிட வயதில் மூத்திருக்கிற இந்த அம்மாளை நான் எப்படிப் பாவித்துக் கொள்ள வேண்டும்? தமக்கை ஒருத்தியின் ஸ்தானத்தில் வைத்தா? இல்லை, இல்லை. அதற்கும் மேலே... மேலே...''

சுமார் இரண்டு மாத காலத்துக்கு சுவாமி அந்தப் பெண்மணியைத் தினந்தோறும் ஆலயத்தில் துர்க்கையம்மன் சந்நிதிக்கு எதிரே சந்தித்து வந்தான். அவளுடன் ஒரு வார்த்தை பேசியதில்லை. அதற்கு அவசியமும் இருக்கவில்லை. அவள் கண்களில் தென்பட்ட ஒரு பரிவு — அது அவனுக்குப் போதுமாய் இருந்தது. தனக்கு ஏற்பட்ட, ஏற்பட்டு வருகிற, இனி ஏற்படப் போகிற எல்லாச் சிறுமைகளையும் தாங்கும் சக்தியை அந்தக் கண்களின் பரிவு தனக்கு அளிப்பதை அவன் உணர்ந்தான். ஆனுல் இரண்டு மாதத்துக்குப் பிறகு அதற்கும் முடிவு ஏற்பட்டு விட்டது.

நான்கு நாட்களாக அவன் மனத்துக்கு இதமான அந்த நிழல் கிட்டாதது ஒருபுறம்; மனத்துக்கு நிழல் இல்லை என்பதால் வழக்கத்துக்கு அதிகமான வெப்பத்தின் கடும் தாக்குதல் ஒரு புறம்!

அந்தக் கோயிலுக்குப் போகிற வழியில் மிக முக்கியமான ஓரிடத்தைச் சுவாமி நெருங்கிக்கொண்டிருந்தான். தன்னைப் பொறுத்த வரையில் அவ்விடமானது அதி முக்கியமானதென்பது அவனுக்கே தெரியும். அவ்விடத்தை நெருங்குகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தன் மனத்தில் ஒரு பரபரப்பான குதூகலம் நிறைந்த தரிசன வேட்கை மிகுவதிலிருந்தே அதை அவன் புரிந்து கொண்டிருந்தான். இப்போதுகூட அந்த வேட்கை அவன் மனத்தில் மிகுந்துதான் இருந்தது.

அந்த வீட்டின் வாயிற்படிகளில் — இரு பக்கக் கைப்பிடிச் சுவர்களுக்குமிடையில் வழியை அடைத்துக் கொண்டாற்போல் ஒரு பெண் உட்கார்ந்திருப்பதைச் சுவாமியின் கண்கள் பார்த்தன. அவளை அங்கு பார்த்தவுடனேயே அவனுக்கு மனத்தில் ஒரு தவிப்பு ஏற்பட்டது. அந்தத் தவிப்பு இப்போது அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற இந்தப் பெண்ணுக்காக அல்ல என்பது அவனுக்கே தெரியும்.

''இந்த வீட்டில் ஒரு அம்மாள் இருப்பார்களே, அவர்கள்...''

''யாரைக் கேட்கிறீர்கள்?'' — அந்தப் பெண் சுவாமியைச் சில விநாடிகள் விசித்திர



பம்பாய் ரங்க பவனில் சுர்சிங்கார் சம்ஸதின் பதின்மூன்றாவது சங்கீத சம்மேளனம் சமீபத்தில் வெகு விமரிசையாக நடந்தது. இந்தச் சங்கீத சம்மேளனத்தில் 'ஸ்வர விலாஸ்' என்ற சங்கீத பீடப் பரிசைத் துணைவேந்தர் வி. எஸ். பாகே அவர்கள் சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தார். இந்தச் சம்மேளனத்துக்குத் தலைமை வகித்த மகாராஷ்டிர முதன் மந்திரி திரு எஸ். பி. சவான் சங்கீதத் துறைக்கு ஸ்ரீமதி எம். எஸ் செய்து வரும் சேவையைப் பாராட்டினர். பண்டிட் நாராயண் ராவ் வியாஸ் அவர்களுக்கும் இந்தச் சங்கீத சம்மேளனத்தில் 'ஸ்வர விலாஸ்' பட்டம் வழங்கப்பட்டது.


சமையலுக்குப் பெருந்துணை
ஓய்வில்லாத தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்
சமோசா, பட்டீஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும் மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவுகிறது.
Brown & Polson Cornflour
பிரவுன் & போல்ஸன்
வெரய்டி கஸ்டர்டு பவுடர்
6 இனிமையான சுவை வகைகள்! குடும்பத்தினரை மகிழ்விக்க வீட்டிலேயே புடிங், பாயசம், ரபடி ஆகிய பல்வேறு இன்சுவையுள்ள பண்டங்கள் தயாரிக்க சாலச் சிறந்தது.
Brown & Polson
ரெக்ஸ்
பேகிங் பவுடர்
கேக், பிஸ்கோத்து, பக்கோடா, பூரி, குலாப் ஜாமூன் ஆகியவற்றை சுவைபட அதி மென்மையாகத் தயாரிக்க உதவுகிறது. சிறிதளவே சிறப்பாகச் செய்து முடிக்கிறது!
REX BAKING POWDER
OBM 5457 TAM
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தரமுயர்ந்த தயாரிப்புகள். அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டவை— கிடைப்பனவற்றிலேயே சிறந்தவை.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ்,
எச். ஸோமானி மார்க,
பம்பாய் 400 001.

மாய்ப் பார்த்த பிறகு இப்படிக் கேட்டாள். சுவாமிக்கு இப்போது என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. அந்த ஸ்திரீயின் அகப்பொலிவையும், புறவழகையும் வர்ணித்துச் சொல்லி அவளை அவனால் யாருக்கும் அடையாளம் காட்ட முடியுமா என்ன? அவனது அந்தரங்க உணர்வுகள் மட்டுமே புரிந்துகொண்டிருக்கிற ஒரு பரம ரகசியம் அல்லவா அந்தப் பெண்மணி! அவன் ஒரு கணம் யோசித்துப் பார்த்துவிட்டுப் பேசினான்: ''ஒரு குழந்தையை அழைத்துக் கொண்டு கோயிலுக்கு வருவாரே அவர்தான்!''

''ஓ... அகிலாண்டத்தம்மாளைச் சொல்கிறீர்களா? அவரைப் பிரிந்தது எங்களுக்குக் கூடச் சங்கடமாகத்தான் இருக்கிறது... அவர்....!''

''என்ன சொல்கிறீர்கள்?'' — சுவாமி திடுக்கிட்டுக் கேட்டான். ''ஒன்றுமில்லை. அவர் பெங்களூருக்குப் போய்விட்டார். அவர் புருஷனைப் பழைய இடத்துக்கே மாற்றி விட்டார்கள். அந்த அம்மாளும் போய்விட்டார். இப்போது வீட்டுக்காரர்களாகிய நாங்கள் மட்டும்தான் இந்த வீட்டில் வசிக்கிறோம்.... அந்த அம்மாளுக்குப் பக்கத்தில் இருந்தாலே எங்களுக்கெல்லாம் கலகலப்பாக இருக்கும். அதைத்தான் சொல்ல வந்தேன்!''

அந்தப் பெண்ணின் வருத்தத்தைப் புரிந்து கொள்ளும் நிலையில் சுவாமி இல்லை. அவன் ஓர் ஆசுவாசப் பெருமூச்சு விட்டுக்கொண்டான். அந்த ஸ்திரீக்கு வேறொன்றும் ஆகிவிடவில்லை என்பதை அவன் புரிந்துகொண்டதற்கு அடையாளம் அது.

அவ்வீட்டு வாசலில் நின்ற அந்தப் பெண் இப்போது சுவாமியைப் பார்த்து, ''நீங்கள் யார்? அந்த அம்மாளை உங்களுக்குத் தெரியுமா?'' என்றெல்லாம் கேட்க நினைத்தாளோ, என்னவோ? அதற்குள் சுவாமி சாலைக்கு வந்து விட்டான்.

அந்த வீட்டுத் தெருவை விட்டு விலகிய உடனேயே சுவாமிக்கு மனத்தின் உயிர்ப்புத் திக்குமுக்காடியது. தனக்கு இப்படி ஆகுமென்று அவன் எதிர்பார்க்கவே யில்லையே!

அவன் அந்தச் சாலையில் அப்படியே நின்றான். கண்கள் குத்திட்டு வெறித்து நோக்க, அவனுக்கு உணர்வுகள் கனன்றன. உள்ளம் ஏங்கியது. 'அந்தப் பெண்மணியை இனி என்னால் பார்க்க முடியாதோ?' — சுவாமி அழவில்லை.

சுவாமி அடியெடுத்து வைத்து மெல்ல நடந்தான். இப்போது அவ்வுருவமும் தன்னுடனேயே நடந்து வருவது அவனுக்குப் புரிந்தது. தன் மனத்தின் ஓர் அந்தரங்கத் திறன்—கூறு — அவ்வுருவத்தில் அப்படியே வசப்பட்டுப் போய் நின்று அதையே தரிசித்துக் கொண்டிருப்பதையும் சுவாமி உணர்ந்தான். 'சந்தேகமேயில்லை, அதே பெண்மணிதான் !.... அந்த முகம்... அந்தப் பார்வை.... அதில் பூத்து வரும் தண்ணொளி.... அதே பெண்மணிதான் !'


சுவாமி உற்சாகம் மேலிட ஒரு தெம்போடு நடந்தான். அவ்வுருவமும் அவன் மனத்துக்குப் புலனாகிக் கொண்டே வந்தது.

சாலையில் நடந்தவாறே சுவாமி வேடிக்கையாகவோ, அன்றி, ஒரு பக்தனின் மன நெகிழ்வுடனோ இப்படி நினைத்துப் பார்த்தான்: 'இந்த மேலான பெண்மணியை நான் அழைத்துச் செல்கிறேனே, இவரை உபசரிக்க என்னிடம் என்ன வசதி இருக்கிறது?....இந்த மாயம் எப்படி நிகழ்ந்தது?'

பித்துற்ற நெஞ்சிற்கோர் — அருட்
பேரொளி யாகிடுவாய் !
சித்தான வித்தையொன்றில்—என்
சிந்தைதனை ஆழ்த்திடுவாய் !


என்று அவன் வாய் முணுமுணுத்தது.

தனக்கு ஏற்பட்டுள்ள இந்தத் 'தோற்றமானது, உணர்வு மயமான மிகச் சிலரைப் பொறுத்து இடைவிடாத நினைப்பினால்—மிக அபூர்வமாய் — ஏற்படுகிற உருவெளியே என்பதையும்; தன்னையும் அவ்வுருவத்தையும் வைத்துச் சுற்றுவது போல் அடிக்கடி தனக்குப் புலனாகிற அந்த ஒளிகூடத் தன் மனத்தின் அற்புதக் காந்தத் திறனே என்பதையும், சுவாமி இனிமேல் அறிவுபூர்வமாய்த் தெரிந்து கொள்வான். இனி அவன் தனக்குரிய பாட்டையில் அடியெடுத்து வைத்து, ஆழக் காலூன்றி, அதிலேயே சிந்தனையும் செயலுமாய் ஒன்றிக் கலந்து போய்விடுகிற வரைக்கும் தீய சக்திகள் அவன் மனத்தைத் தாக்காவண்ணம் இவ்வுருவமானது அவனைக் காத்து நிற்கும் என்பதும் நிச்சயமே ! இப்போதே அவன் மனத்தில் ஆக்கபூர்வமான சிந்தனைகள் அரும்பு கட்டத் தொடங்கி விட்டனவே !



வாழ்க்கையில் சந்தோஷமளிக்கும் பல தருணங்கள் ஏற்படுகின்றன

தலைவலி உங்கள் சந்தோஷத்தை கெடுக்க விடாதீர்கள்



2 ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்

ASPRO
Nicholas

மைக்ரோ-பைன் ஆஸ்ப்ரோ வலியை அதிவேகமாக வெளியே இழுத்து விடுகிறது

A.G.66 TM

சாஸ்திரம் என்ன சொல்கிறது?



புராணப் பிரவசனம் செய்யும் உபன்யாசகர்கள் தங்கள் உபன்யாசத்துக்கிடையே 'இதற்குச் சாஸ்திரம் என்ன சொல்கிறது என்றால்....' என்று மேற்கோள்களைக் கூறிப் பக்தர்களை மெய்மறக்கச் செய்வர். பாங்குத் துறையிலும் ஒருவர் 'இதற்கு சாஸ்திரம் என்ன சொல்கிறது ?' என்று கேட்டு, அந்த பரிபாஷையிலேயே பல சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறார் ! அவர்தான் கனரா பாங்கின் டெபுடி ஜெனரல் மானேஜர் திரு எஸ். வேங்கடராமன்.

இந்தியாவிலேயே முதல் தடவையாகக் கனரா பாங்கியின் தியாகராயநகர் கிளை வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருந்து சேவை புரிகிறது எனக் கேள்விப்பட்டு, விவரங்களைச் சேகரிக்கத் திரு வேங்கடராமனை அணுகினேன்.

சங்கீத 'கிரிடிக்'காக பம்பாய் இந்தியன் எக்ஸ்பிரஸில் பணிபுரிந்திருக்கிறார் 'எஸ்.வி.' என்ற எஸ். வேங்கடராமன். எனவே "தியாகராயநகர் கிளை ஏஜண்ட் திரு கைலாசம் 'இந்த ஏழு நாள் சேவை' என்ற அரிய சாதனையால் மேல்ஷட் ஜமத்தை எட்டிப் பிடித்து விட்டார் போங்கள்!" என்று சங்கீத பரிபாஷையில் மனமாரப் பாராட்டுதலை வழங்கிய வேங்கடராமன் அடுத்துப் பௌராணிகர் பாஷையில் இறங்கினார் :

"கனரா பாங்கியின் கிழக்கு மண்டலப் பிரிவு வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா, தமிழகம் அடங்கியது. இந்தக் கிழக்கு மண்டலப் பிரிவில் கிட்டத்தட்ட 3200 சிப்பந்திகள் பணிபுரிகிறார்கள். எங்கள் கனரா பாங்கின் தனி விசேஷம், நான் மூலஸ்தானத்திலேயே இருப்பவன். எங்கள் டிவிஷனல் மானேஜரும் பிராஞ்ச மானேஜர்களுந்தான் உத்ஸவ மூர்த்திகள்.

"எங்கள் பாங்கி 'சாமான்யர்'களுக்காக நடத்தப்படும் பாங்கி. கறிகாய்க் கடை குப்பம்மாவிலிருந்து சாதாரணத் தொழிலாளி சாத்தப்பன் வரை கணக்கு வைத்துக் கொள்ளும் முப்பத்தெட்டு லட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்ட பாங்கி. டெபாசிட் வரிசையில் கனரா பாங்கி இந்தியாவின் ஐந்தாவது சிறப்பிடத்தைப் பெற்றிருக்கிறது!"

இந்திய சர்க்கார் நிதித் துறையில் உதவியாளராகச் சேர்ந்த திரு எஸ். வேங்கடராமன் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் கணிதத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர்.

"எனக்குக் கனரா பாங்கியின் டெபுடி ஜெனரல் மானேஜர் பதவி பத்தாவது உத்தியோகம்" என்று கூறி முதல் ஒன்பது உத்தியோகங்களுக்கும் பட்டியல் தருகிறார்.

சிறு வயதிலேயே சங்கீதம் என்றால் இவருக்குக் கொள்ளை ஆசை. எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை சமயத்தில் இரவு விடிய விடிய திரு வீருசாமிப்பிள்ளை நாகஸ்வரம் கேட்கப் போய்விட்டு வந்து தூங்கி வழிந்தபடியே பரீட்சை எழுதியிருக்கிறார். அதனால் என்ன? வாழ்க்கை வெறும் கனவாகிவிடவில்லை. கடமைகளிலும் தூங்கிவிடவில்லை !

தியாகராயநகர் கனரா பாங்கி கிளைக்கு நேரிடையாகச் சென்று அந்தப் பாங்கியின் ஏஜண்ட் கைலாசத்தைப் பார்த்த போது, "எங்கள் கிளையின் அத்தனை சிப்பந்திகளும் அதிக அளவு ஒத்துழைப்பு தருவதாலேயே இந்த வாரத்தில் ஏழு நாள் சேவையை அமுலுக்குக் கொண்டு வர முடிந்தது. இதில் மகிழ்ச்சிக்குரிய விஷயம், சிப்பந்திகளின் எண்ணிக்கையைப் பெருக்காமலே, ஓவர்டைம் இல்லாமலேயே எங்களால் இந்தச் சேவையைச் செய்ய முடிகிறது!" என்று கூறினார்.

மவுண்ட்ரோடு கனரா பாங்கியின் ஏஜண்ட் சந்திரன், "எங்கள் மவுண்ட்ரோடு கிளையில் சேவிங்ஸ் கணக்குக்கு என்றே ஒரு தனி பிரிவு இயங்குகிறது. எங்கள் மவுண்ட் ரோடு கிளையே கனரா பாங்கியின் கிளைகளில் மிகப் பெரியது !" என்று பெருமைப்படுகிறார்.

கனரா பாங்கியின் எந்த ஏஜெண்டைச் சந்தித்தாலும் தங்கள் பாங்கியைப் பற்றிப் பேசுகிறார்கள். அடுத்து தங்கள் தலைவர் எஸ்.வி.யைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடாத குறையாகப் பேசுகிறார்கள். இத்தனைக்கும் அவர் ரொம்ப ரொம்பக் கண்டிப்பான பேர்வழியாம்! — பீ. எஸ். எம்.

18. டாக்டரின் உயில்

டாக்டர் ரமணன் நன்றாக விழித்துக் கொண்டிருந்தார். ஸிரிஞ்ச் நிறைய மருந்தை ஏற்றிக் கொண்டிருக்கும் கார்த்திக்கையே பார்த்தார். அவர் உதடுகள் துடித்தன. கண்கள் எதையோ தெரிந்து கொண்டதைப் போல இறைஞ்சின.

கார்த்திக் அவர் தோளைத் தட்டிக் கொடுத்துவிட்டு இடக் கையை எடுத்து ஊசியை ஏற்றினான். மருந்தின் அளவு ஸிரிஞ்சில் குறைந்து கொண்டே வந்தது. முழுதும் காலியானவுடன் ஸிரிஞ்சை இழுத்து விட்டு நிமிர்ந்தான். டாக்டர் ரமணனின் பார்வை தன் முதுகுக்குப் பின்னால் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அங்கே நிர்மலா சிலை போல் நின்று கொண்டிருந்தாள். "ஓ, நீயா ?" என்றான் கார்த்திக்.

நிர்மலா இதற்குப் பதில் சொல்லாமல் டாக்டர் ரமணனின் கண்களையே பார்த்துக் கொண்டு நின்றாள். டாக்டர் ரமணனும் அவள் முகத்தையே ஆசை, அன்பு, துயரம் ஆகிய பலவித பாவங்களுடன் பார்த்தார். பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவருடைய இமைகள் மெதுவாகக் கீழிறங்கி வந்து மூடிக் கொண்டன.

"அவர் இப்போது தூங்க வேண்டும் — நாம் பிறகு வருவோம்." கார்த்திக் அவள் தோளைப் பற்றித் திருப்பி மெதுவாக வெளியே அழைத்து வந்தான். யந்திரம் போல் பின்னால் வந்தாள் அவள். ஹாலுக்கு வந்ததும் 'பொத்'தென்று ஒரு சோபாவில் வீழ்ந்து விம்மி விம்மி அழுதாள்.

"அசடே ! எதற்காக இந்த அழுகை !" என்றான் கார்த்திக்.

"என்னை மன்னித்துவிடு, கார்த்திக் ! நான் உன்னைத் தப்பாக நினைத்து விட்டேன்......டாக்டர் ரமணனை நீ சிறுகச் சிறுகக் கொன்று கொண்டிருப்பதாக அந்தப் பாவி ரோஸி சொன்னதை நம்பிவிட்டேன்!"

கார்த்திக் சாவகாசமாக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். பிறகு, "அவள் உண்மையைத்தான் சொன்னாள்" என்றான்.

"என்ன !" . என்று கத்தியே விட்டாள் நிர்மலா.

"கத்தாதே, நிர்மல்! உனக்காக — உன் அழகான, இந்த மோகன விழிகளுக்காக நான் இந்த ஒரு டாக்டரை மட்டுமல்ல; இன்னும் ஓராயிரம் டாக்டர்களைக் கூடக் கொல்லத் தயார் !" என்றான்.

"கார்த்திக்! என்ன சொல்கிறீர்கள் ?" — குரல் நடுங்கக் கேட்டாள் நிர்மலா.

"ஆறு வருட காலமாக என் நெஞ்சப் பறவை சதா கதறிக் கொண்டிருப்பதைத்தான் சொல்கிறேன். இந்த ஆறு ஆண்டாக நான் தூங்கியதில்லை; சிரித்ததில்லை. உன் நிகரற்ற அழகு விழிகள் இரண்டையும் பெரிய கவர் சித்திரமாகச் செதுக்கி மாட்டி வைத்துக் கொண்டு கதறிக் கொண்டிருந்தேன்; முட்டி மோதிக் கொண்டிருந்தேன். 'மீண்டும் எங்களைச் சேர்த்து வை' என்று தெய்வங்களிடம் எல்லாம் மன்றாடிக் கொண்டிருந்தேன்..... மீண்டும் உன்னை அடைவதற்காக எதையும் செய்யத் தயாராக இருந்தேன்.... என் நெஞ்சில் காது வைத்துக் கேள் நிர்மலா — அது உன் பெயரைத்தான் சதா சொல்லிக் கொண்டிருக்கிறது..... என் இருதயத்தைக் கீறிப் பார். அங்கே உன் மோகன உருவம்தான் குடி கொண்டிருக்கிறது.... வாழ்வையே வெறுத்து சந்நியாசியாகப் போவதாக இருந்தேன். உன் சகோதரி வந்து நீ இருக்கும் இடத்தைக் கூறினாள். உடனே மனத்தை மாற்றிக் கொண்டு பழைய டாக்டர் பட்டத்தைப் புதுப்பித்துக் கொண்டு ஒரு திட்டத்துடன் இங்கே ஓடி வந்தேன்.... அந்தத் திட்டம் நிறைவேறப் போகிறது நிர்மல்—சீக்கிரமே நிறைவேறப் போகிறது.... அதன் பின் நீ என்னுடையவள்.... இந்தப் பங்களா, நர்ஸிங்ஹோம்.... எல்லாவற்றுக்கும் நீயும் நானும்தான் யஜமானர்கள்..... இந்த டாக்டர்..... என்னிடமிருந்து உன்னைப் பிரித்த இந்த டாக்டர்....." — நறநறவென்று பற்களைக் கடித்தான் கார்த்திக்.... "அழிந்து ஒழிந்து போய் விடுவான்."

"கார்த்திக் — "

"இனி அந்த ஆண்டவனே வந்தாலும் இவனைக் காப்பாற்ற முடியாது."



''கார்த்திக் !''

''எனக்கும் உனக்குமிடையில் இருந்த தடைகள் எல்லாம் நகர்ந்துவிட்டன!''

''கார்த்திக்!''

''பெரிய பெரிய மலைச் சிகரங்களை எல்லாம் தாண்டிக் கொண்டு போய்க் கடைசியில் எத்தனையோ காதலர்கள் இணைந்திருக்கிறார்கள். ஆழ்கடலலைகளையும் அகண்ட சமுத்திரங்களையும் நீந்திக் கடந்து சென்று சேர்ந்திருக்கிறார்கள் நிர்மல்... நானும் இடையில் வந்து எத்தனையோ மலை போன்ற இடையூறுகளைக் கடந்து உன்னிடம் இப்போது வந்திருக்கிறேன்.... இரும்பாகப் பிணைத்த கால் கட்டுக்களை உடைத்தெறிந்துவிட்டு வந்திருக்கிறேன்..... இடைமறித்தவர்களையெல்லாம் நீக்கித் தள்ளிவிட்டு வந்திருக்கிறேன்... எதற்காக? எதற்காக நிர்மல்? இந்தப் பங்களா, பெரிய நர்ஸிங் எஸ்டேட் ஆள் அம்பு இவைகளுக்காகவா?... இல்லவே இல்லை. உனக்காக! உன் ஒருத்திக்காக! என் நெஞ்சை எல்லாம் பஞ்சையாகச் செய்து வரும் உன் இந்த நிகரற்ற மோகன விழிகளிலே காதல் பெருக்கெடுத்து என் மீது பொழிவதை அநுபவிப்பதற்காக—'' இப்படிச் சொல்லிக் கொண்டே கார்த்திக் எழுந்துசென்று நிர்மலாவின் முகத்தைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பினான். அவன் ஸ்பரிசம் பட்டதும் நிர்மலா, தீயைத் தீண்டியவன் போல் ஓரடி பின் வாங்கினாள். ''சீ! ரத்தக் கறை படிந்த உன் கையால் என்னைத் தொடாதே! நீ ஒரு கொலைகாரன்! பேய்!'' என்று உறுமினாள்.

''ஆமாம். நான் கொலைகாரன்தான்!'' என்று கார்த்திக் சிரித்தான்.

''ஆனால் என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தது யார்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான். ''நீதான் நிர்மலா: நீயே தான்!''

''நானா உன்னை டாக்டரைக் கொலை செய்யச் சொன்னேன்? நானா சொன்னேன்? இந்த ஊரில் உள்ள ஒரு சிறு எறும்பு கூட அவரைத் தீர்த்துக் கட்ட நினைக்காதே! அவர் உத்தமர்: புழு பூச்சிக்குக்கூடத் தீங்கு நினைக்காதவர்.... நல்லவர்.... அவர் சாகக் கூடாது: சாக நான் விடமாட்டேன்....அவர் சாகக்கூடாது, கூடவே கூடாது!'' நிர்மலா வெறி பிடித்தவள் போல் கத்திக்கொண்டு டெலிபோனை நோக்கி ஓடினாள். ரிஸீவரை எடுத்தாள். டயலைச் சுற்றப் போன அவள்



கை மீது கார்த்திக்கின் இரும்புப் பிடி விழுந்தது. "என்ன செய்யப் போகிறாய்?"

" டாக்டர் பாண்டுரங்கனைக் கூப்பிடப் போகிறேன். அவர் காப்பாற்றிவிடுவார், ரமணனை !"

"பிரயோசனமில்லை, நிர்மலா !" என்று வெறிச் சிரிப்புச் சிரித்தான் கார்த்திக். "இந்த டெலிபோன் தொடர்பை நான் மாலையே துண்டித்துவிட்டேன். இது நாளை வரை, டாக்டர் ரமணனுடைய உடல் தகனம் ஆகி முடிகிற வரை வேலை செய்யாது."

"ஆங்!" — ரிஸீவரை நழுவ விட்டுவிட்டு விதிர் விதிர்த்து நின்றாள் நிர்மலா.

"நிர்மலா ! அசட்டுத்தனமாய் இராதே! சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்..... டாக்டரை நான் உனக்காகத் தான் தொலைத்துக் கட்டினேன்.... ஆகவே, நீ என்னுடன் ஒத்துழைக்க வேண்டும்...."

நிர்மலா இடைமறித்துச் சொன்னாள் : "சத்தியம் உன்னுடன் ஒத்துழைக்காது. அது உன்னை நீதிதேவனிடம் காட்டிக் கொடுத்து விடும். நாளைக் காலையில் வருகிற டாக்டர்கள் இறந்து போன ரமணனுடைய உடம்பில் நீ ஏற்றின விஷத்தைக் கண்டு பிடித்துவிடுவார்கள்."

"அதனால்தான், அவர்கள் எல்லாம் வராத நாளாகப் பார்த்து — அவர்கள் எல்லாம் தூர தூர இடங்களில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் நாளாகப் பார்த்து, ரமணனின் கடைசி நாளை நிர்ணயம் செய்திருக்கிறேன். டாக்டரின் உடலைப் பார்க்கக்கூட அவர்களுக்குச் சந்தர்ப்பம் இராது. இன்னும் சற்று நேரத்தில் ரமணன் இறந்துவிடுவார். நாளை மதியத்துக்குள், இங்குள்ள குட்டிப் படைகளை வைத்துக் கொண்டே டாக்டரைத் தகனம் பண்ணிவிடுவேன். மறு நாள் டாக்டர்கள் வரும் போது உடலே இராது ; உடல் இருந்தால் அல்லவா அதில் உள்ள விஷத்தைக் கண்டுபிடிக்க முடியும்?"

நிர்மலாவின் முகத்தில் அருவருப்பும் ஆத்திரமும் நிழலிட்டன. "சீ ! நீ ஒரு மனிதன். உனக்கு ஒரு காதல் ? உனக்கொரு பழி ! தூ !" என்று காறி உமிழ்ந்தாள் அவள். " ஒரு காலத்தில் உன்னையும் நேசித்தேனே என்று வெட்கப்படுகிறேன்!" என்று சொல்லி விட்டு வாசலை நோக்கி நடந்தாள்.

"நில்!" என்று கர்ஜித்தான் கார்த்திக். "வெளியே போய் என்னைக் காட்டிக் கொடுக்கலாம் என்று நினைக்காதே ! அந்த நாளில் நீ எனக்கு எழுதின காதல் கடிதங்கள் என்னிடம் இருக்கின்றன. அதே மாதிரி கையெழுத்தில், நீயே என்னை வரவழைத்து இந்தக் கொலையைச் செய்யும்படி தூண்டியதாக எழுதி வைத்திருக்கிறேன். வாழ்வானாலும் சாவானாலும் நம் இருவருக்கும் ஒன்று தான்..... நான் மாட்டிக் கொண்டால் நீயும் மாட்டிக் கொள்வாய்! ஜாக்கிரதை !" என்றான்.

நிர்மலா திரும்பினாள். அசாதாரண அமைதி நிலவியது அவள் முகத்தில். "நான் போய்க் காட்டிக் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை, கார்த்திக். டாக்டர் ரமணனுடைய சடலமே காட்டிக் கொடுத்துவிடும்" என்றாள்.

"நிர்மல்! என்ன சொல்கிறாய் நீ?"

"நீ அவர் உடலைத் தொலைத்துக் கட்ட முடியாது. அவர் ரொம்ப முன்ஜாக்கிரதைக் காரர். தாம் இறந்துவிட்டால், இறந்த மூன்று மணி நேரத்துக்குள், தம் உடலைத் தாம் வாழ்நாளை எல்லாம் எந்தத் துறைக்கு அர்ப்பணித்திருந்தாரோ, அந்த வைத்தியத் துறைக்கே கொடுத்துவிட வேண்டும் என்று உயில் எழுதி வைத்திருக்கிறார்....."

"ஓ, மை காட் !" என்று பெரிதாக அடி பட்ட பட்சி போலக் கத்தினான். " எனக்கு இது தெரியாமல் போய்விட்டதே ! மருத்துவப் பரிசோதனைக்குப் போனால் கண்டுபிடித்து விடுவார்களே...." என்று கூவினான். மேஜை கிடந்த தன் மருந்துப் பெட்டியைப் பாய்ந்து எடுத்துக் கொண்டான். "ரமணன் சாகக் கூடாது ! ரமணன் சாகக் கூடாது !" என்று கத்திக் கொண்டே ரமணன் படுத்திருந்த அறையை நோக்கி ஓடினான்.

அடுத்த கணம் அறைக்குள்ளிருந்து, "டாக்டர், பாவி ! என்னை மாட்டி வைத்துவிட்டுப் போய் விட்டாயே !" என்று அவன் அலறுவது கேட்டது. மறு விநாடி புயல் மாதிரி வெளியே ஓடி வந்தான். "பாவி ! உன்னால் தான் எனக்கு இக்கதி ! என்னோடு சேர்ந்து நீயும் அழிந்து போ !" என்று கத்திவிட்டு நிர்மலாவின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு மாடி வராந்தாவை நோக்கி ஓடினான். அந்த மூன்றாவது மாடியிலிருந்து குதித்து உயிரைவிட்டு விடுவது என்பது அவன் எண்ணம்.

ஆனால் வராந்தா திரையை இழுத்து அகற்றினதும் அவனுக்கு அங்கே ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே இன்ஸ்பெக்டர் சேகர், கையில் துப்பாக்கியுடனும் இரண்டு கான்ஸ்டபிள்களுடனும் நின்றான்.

"ஸார்! இதில் கார்த்திக்குக்கும் நிர்மலாவுக்குமிடையில் நடந்த சம்பாஷணை முழுவதும் பதிவாகியிருக்கிறது" என்று அந்த காஸெட்டைக் கொண்டு வந்து வைத்தாள் ரோஸி.

அப்போது சேகர் ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தான் — பதினேழாவது தடவையாக. அவன் கண்களில் நீர் ததும்பியிருந்தது. "எக்ஸ்க்யூஸ் மீ ஸார் — அசந்தர்ப்பமாக வந்துவிட்டேன்போலிருக்கிறது!"

"நோ... நோ... நோ...." — சேகர் அந்தக் கடிதத்தை ஜாக்கிரதையாக மடித்து, புனிதமான ஒன்றை வைப்பது போல் மேஜை மீது வைத்து, ஒரு வெயிட்டைத் தூக்கி வைத்தான். கோபால் உள்ளே வந்தார்.

" ஸார் ! இந்தக் கார்த்திக்தான் தாரிணியைக் கொன்றான்; டாக்டர் மீது வேட்டை நாயை விரட்டினான், குமாய் ரிப்போர்க்காரன் போல வந்து பாத் டப்பில் இந்த டாக்டரின் காலைக் கிளவுஸ் அணிந்த கையினால் பற்றி மேலே இழுத்து மூச்சுத் திணறச் செய்து கொன்றான்.... ஆனால் இதையெல்லாம் நம்



"நல்லா ஓடற படமா எடுத்தால் நீங்க விநியோகஸ்தராக இருப்பதாகச் சொன்னீங்களே! அதன்படி ஒரு படம் எடுத்திருக்கேன்."

"நல்லா ஓடுமா?"

"ஓ! மூன்று ரீல் கார் ஓடும், மூன்று ரீல் மோட்டார் சைக்கிள் ஓடும், இரண்டு ரீல்..."

"போதுமய்யா. இப்போ நான் கொஞ்சம் ஓடறேன்!" 'தி. கை. சே.'



THOMAS/DCMI 375/Tam

மால் நிரூபிக்க முடியவில்லை.... இந்தக் குற்றங்களைச் செய்தவர் யார் என்பது கடைசி வரை சாட்சிபூர்வமாக வெளிப்படவே முடியாது போலிருக்கிறதே, ஸார்!'' என்றார்.

'' அதனால் என்ன? தாரிணியின் ஆவி டாக்டர் ரமணனைக் வந்து பழி தீர்த்துக் கொண்டுவிட்டதே — போதாதா! இந்த ஒரு குற்றத்துக்கே கார்த்திக்குக்கு மரண தண்டனை நிச்சயம் கிடைக்கும்!''

''என்ன அண்ணா இது?'' என்று கேட்டுக் கொண்டே வேகமாக உள்ளே வந்தாள் மாலதி. ''விமலாவை இனி தேட வேண்டாம் என்று தந்தி கொடுத்துக் கோபால் ஸாரை நீதான் தருவித்தாயாமே — ஏன் அண்ணா?''

சேகர் ஒரு நிமிஷம் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தான். மெதுவாக உள்ளே வந்து மாலதியின் பின்னால் நின்ற ரமேஷைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டான்.

பிறகு, ''கோபால் மட்டுமில்லை, அம்மா! இந்த உலகத்தில் உள்ள அத்தனை போலீசும் ராணுவமும் சேர்ந்து தேடினால்கூட கண்டு பிடிக்க முடியாத இடத்துக்கு அவள் போய் விட்டாள், அம்மா!'' என்றான். அவன் குரல் நடுங்கிற்று.

'' அண்ணா! என்ன சொல்கிறாய்?'' என்று கூவினாள் மாலதி.

''சேகர்! சேகர்!'' என்று கதறினான் ரமேஷ்.

'' எஸ், ரமேஷ்.... மேஜை மேலே உள்ள கடிதத்தைப் படித்துப் பார்!''

மாலதி பாய்ந்து சென்று குமிழை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டுக் கடிதத்தை எடுத்துப் பிரித்து வாய்விட்டுப் படித்தாள். அதில்—

''ஆருயிர் சேகர்,

இந்தக் கடிதம் உங்கள் கையில் கிடைக்கும் போது நான் நடுக் கடலில் குலையத்தை நோக்கிச் செல்லும் விசைப் படகிலிருந்து குதித்து ஆழ்கடலின் அடித் தளத்துக்குச் சென்றிருப்பேன். அல்லது கடல் வாழ் ஜந்துக்களுக்கு உணவாகியிருப்பேன். என் உடல் அது ஒன்றுக்குத்தான் இனி பயன் படும். ஏனெனில், கடல் வாழ் ஜந்துக்களை விடக் கொடிய மனித ஜந்துக்கள் என் உடம்பை தேற்றுப் பாழ்படுத்திவிட்டன. இனி நான் திரும்பி வந்தும் பயனில்லை. நீரில் மூழ்கும் போதும் 'என் சேகர்! என் சேகர்' என்று ஜபித்துக் கொண்டேதான் மூழ்குவேன். அடுத்த ஜன்மத்திலாவது விதி நம்மைச் சேர்த்து வைக்கட்டும் — விமலா.''

''விமலா!'' என்று ஒரு பெரிய ஒலிவெள்ளம் ரமேஷின் அடி வயிற்றிலிருந்து பெரும் பிரளயமாய்ப் புறப்பட்டு வந்தது. ஆனால் அது தொண்டையை அடைவதற்குள் அவன் மூர்ச்சையடைந்து தடால் என்று விழுந்து விட்டான்.

ரோஸி அவசர அவசரமாகத் தண்ணீர் கொண்டு வர வெளியே ஓடினாள். **(முற்றும்)**

குறைந்த முதலீட்டில் சிறந்த முறையில் தேங்காய் நார் தயாரிக்க இயந்திரங்கள் இதோ!


தேங்காய் நார் தயாரிக்க இந்தியாவில் இதுவரை சரியான இயந்திரங்கள் இல்லாமல் இருந்தது. அதிக அளவு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய முடியாமல் இருந்தது.

இப்பொழுது இதற்குத் தேவையான எல்லா இயந்திரங்களையும் நாங்கள் தயாரித்துள்ளோம். இதன் மூலம் நீங்கள் குறுகிய காலத்தில் அதிக அளவு தேங்காய் நார் உற்பத்தி செய்யலாம். அதிக அளவு ஏற்றுமதியின் மூலம் அதிக வருவாய் தேடிக் கொள்ளலாம்...
உங்களுக்கும் உங்கள் தேசத்திற்கும்!


இதுவரை தென் இந்தியாவில் 12 இடங்களில் எங்கள் என்னுர் இயந்திரங்கள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன

மற்ற விபரங்களுக்கும் சரியான ஆலோசனைக்கும் எங்களை அணுகுக:


Manufacturers:
BHARAT MOTORS
5, Greames Road, Madras-600006
Phone: 86204 Cable: FIBRO-FLEX




Turbo Cleaner



Defibering Machine



Fibre Baling Press



Revolving Screen

கறை படாத கை

எக்ஸிக்யூடிவ் எஞ்சினீர் ராமாமிருதத்தைக் கட்டாய ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி அரசாங்கத்திலிருந்து உத்தரவு வந்தாலும் வந்தது. ஆபீஸே பரபரத்தது. அனைவரும் அதைப் பற்றியே கூடிக் கூடிப் பேசினார்கள். எங்கே தங்கள் தலைக்கும் ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சினார்கள், ஓரிரு தடவை மட்டும் 'கை நீட்டி' வாங்கின அப்பாவிகள், 'அனுபவஸ்தர்கள்' அதிகமாகக் கவலைப்படவில்லை. 'ஆதி' வந்த வழக்கத்தை அவ்வளவு எளிதில் கைவிட முடியுமா, என்ன ?

அன்றிரவு சாப்பாட்டுக்குப்பின் அப்பாவுடன் உரையாடிக் கொண்டிருந்தான் உதவி எஞ்சினீர் துரைராஜ்.

''பார்த்தீர்களா, அப்பா, ராமாமிருதத்துக்கு ஏற்பட்ட கதியை ? ஒழுக்கம் கெட்ட முறையில் சம்பாதிப்பவன் எல்லாம் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் மாட்டிக் கொள்வான்.''

ஐயாவு மகனை முறைத்துப் பார்த்தார். அவர் நரைத்த மீசை துடித்தது.

''ஏன்டா மகனே, எனக்கு மறைமுகமாக 'நேர்மை'யைப் பற்றிப் பாடம் படிக்கிறாயா ? நானும்தான் பொது மராமத்து இலாகாவில் பியூனாக முப்பது வருஷங்கள் கொட்டை போட்டு விட்டேன். கையை நீட்டி நாலு காசு வாங்கப் போய்த்தானே உன்னை எஞ்சினீரிங் காலேஜில் சேர்க்க முடிந்தது? என் சம்பளத்தை மட்டும் நம்பியிருந்தால் நட்டாற்றில் போக வேண்டியதுதான்'' என்றார் ஐயாவு.

''என்னப்பா, அப்படிச் சொல்கிறீர்கள்? என் படிப்புக்கு நீங்கள் ஒரு பைசாக்கூடச் செலவழிக்கவில்லையே! நினைவு தெரிந்த நாளிலிருந்து உபகாரச் சம்பளம்தான்.''

''நீ ஒருத்தன் தானுடா குடும்பம்? உன் தம்பி ஒவ்வொரு வகுப்பிலும் ரெண்டு மூணு வருஷம் ஒக்காந்து போறானே, அவனை மறந்துட்டியா? தந்திக் கம்பமாட்டம் கல்யாணத்துக்கு நிற்கிறாளே ஒரு தங்கச்சி, அது உன் கண்ணை உறுத்தலியா? சம்பளத்தை மட்டும் நம்பினால் அதோகதிதான்.''

'' ஆயிரம் தொல்லைகள் இருக்கலாம் அப்பா. யாருக்குத்தான் இல்லே? அதுக்காக லஞ்சம் வாங்கறது நியாயமாகி விடுமா?''

''நீ மட்டுமில்லே..உன் தலைமுறையே இப்படித்தான் சொல்லுது! நாலு இங்கிலீஷ் வார்த்தை தெரிந்து விட்டால் எல்லாம் தெரிந்ததாக நினைப்பு.... உலக அனுபவம் வேணுண்டா. அதுதான் முக்கியம். 'ஏற்பட்டதை' வாங்கிக் கொள்வதில் என்ன தவறு ? 'எஸ். இ.' ஆராவமுதாச்சாரி ஆனைப்பட்ட மனுஷன். பக்திமான். அவர் வாங்கலியா? 'ஈஈ'யாக இருந்து பெசன்ட் நகரிலே வீடு கட்டினாரே அப்துல் வஹாப், அவர் கை என்ன சுத்தமா ? எனக்குத் தெரிஞ்சு எத்தனையோ பேர் ரெண்டு கையையும் நீட்டி வாங்கியிருக்காங்க. நீ பின்னே பிறந்து 'தகப்பன்சாமி' பண்ணுறயாக்கும். போடா, போக்கற்ற பயலே'' என்று கூறிவிட்டுப் படுக்கச் சென்றார் ஐயாவு.

ஆபீசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் துரைராஜ். அவனை வழிமறித்த அப்பா, ''எனக்குத் தெரிஞ்சு ஆபீசுக்கு நடந்து போற எஞ்சினீர் நீ ஒருத்தன்தான். உன் பதவிக்கு ஒரு கார் வேண்டாமா ? 'நேர்மை' 'நேர்மை'ன்னு சொல்லிக்கிட்டிருந்தா ரிடையராகிற போது உன்கிட்டே ஒரு கட்டை வண்டிகூட இராது. நம்ம ராமமூர்த்தி ஐயர்





ஜி.எஸ்.பாலகிருஷ்ணன்

பிள்ளை சுப்புணி உன்னுட்டம் இளிச்சவாயன் இல்லே. 'ஜே. இ.'யாக இருந்தே கார் வாங்கி விட்டான். பிழைக்கத் தெரியாத அசமஞ்சன் நீ'' என்று சொல்லிவிட்டு ஆபீசுக்கு விரைந்தார் அப்பா.

'லஞ்ச்' இடைவேளையில் ஆபீசில் ஒரு கச்சேரியே நடக்கும். ஹெட்கிளார்க் கனக சபாபதி, ஓவர்சியர் முதலியார், 'டிராப்ட்ஸ் மேன்' சிங்காரம், பியூன் ஐயாவு முதலியவர்கள் மனம்விட்டு உரையாடுவது அப்பொழுதுதான். அத்தனை அதிகாரிகள் தலையும் அந்த வேளையில் உருளும்! பெரும்பாலும் 'பெருச்சாளி' 'கொன்னக்கோல்' முதலிய அருமைப் பெயர்கள் பேச்சில் அடிபடும். ('கன்னக்கோல்' எப்படிக் 'கொன்னக் கோலாக' மாறியது என்பது தனிக் கதை.)

''ஐயாவுவோட பிள்ளை 'அரிச்சந்திரன்' வந்தாலும் வந்தான், நம்ம பிழைப்பிலே மண் .விழுந்துடும் போலிருக்கே'' என்று வெண் பொங்கலை ஒரு கை பார்த்தபடி கச்சேரியைத் தொடங்கினார் கனகசபாபதி.

''இளவயசு. இலட்சியம், மண்ணாங்கட்டின்னு உளறத்தான் சொல்லும். பணத் தோட 'வால்யூ' தெரியாது. கல்யாண மாகிக் கத்திரிக்காய்ப் பை தோளிலே ஏறின உடனே உயர்ந்த இலட்சியங்கள் எல்லாம் மண்ணாகிவிடும்'' என்றார் 'அண்ணா' என்ற செல்லப் பெயருக்கு உரியவரான முதலியார்.

இந்த வேளையில் மண் பானையில் ஐயாவு குடி தண்ணீர் எடுத்து வரவும், ''ஏம்பா ஐயாவு, நீதான் உன் பிள்ளைக்குக் கொஞ்சம் புத்தி புகட்டக் கூடாதா? 'ஆதி' வந்த வழக்கத்தை எல்லாம் அழித்துவிடுவான் போல் இருக்கே இந்தச் சின்னப் பயல்! தான் வாங்காவிட்டால் போகட்டும், பிறரையும் அல்லவா வாங்கக் கூடாதுன்னு தடை உத்தரவு போடுகிறான்? பாசனத்துக்குத் தண்ணீர் திறந்துவிட்டால் மகிழ்ந்து போய் ஏதோ தர்றான் விவசாயி. நாம் அதைப் பங்கு போட்டுக் கொள்கிறோம். அவனுக்கும் நல்லது, நமக்கும் நல்லது. இதைப் போய்க் 'கூடாது'ன்னு ஒரே போடாகப் போடறானே உன் பிள்ளை?'' என்று சலித்துக் கொண்டார் முதலியார்.

''அண்ணா. அவனோடே எவன் பேசுவான்? பெரிய புரட்சி பண்றோம்னு நினைப்பு. நாம் எல்லாம் பத்தாம் பசலிகள்தானே? வாயைத் திறந்து ஏதாவது சொன்னால் தறுதலைத்தனமா 'தர்மோபதேசம்' பண்றான்...... விட்டுத் தள்ளுங்க....'' என்று ஐயாவு சொல்வதற்கும் துரைராஜ் ஆபீசுக்குள் நுழைவதற்கும் சரியாயிருந்தது. கடைசி வாக்கியத்தைக் காதில் வாங்கிக் கொண்டவன் மௌனமாகத் தன் அறைக்குச் சென்றான். அப்பாவை எப்படித் திருத்துவது என்று ஆராய்ந்தது மனம்.

இரவு மொட்டை மாடியில் உட்கார்ந்தபடி குடும்பத்தினருடன் உரையாடிக் கொண்டிருந்தார் ஐயாவு. அவருக்கு அன்று கொஞ்சம் தலை வலி. அமிர்தாஞ்சனத்தை நெற்றியில் அள்ளிப் பூசியிருந்தார்.

''அப்பா! உங்களுக்கோ வயசாகிவிட்டது. கூடிப் போனால் இன்னும் சில மாதங்களில் ரிடையராகிவிடுவீர்கள். நான்தான் நிறையச் சம்பாதிக்கிறேனே. நீங்கள் இன்னும் ஏன் மாடாக உழைக்க வேண்டும்? ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூடாதா? வேலையை ராஜிநாமா செய்துவிட்டு 'ஹாய்'யாக இருக்கிறதை விட்டுட்டு ஏன் இப்படி அலட்டிக்கணும்?'' என்றான் துரைராஜ்.

''கை நிறையச் சம்பாதிக்கிறானாம், கை நிறைய! அப்படி இருந்தால் நான் ஏன் கவலைப்படறேன்? மாசா மாசம் சம்பளம்னு ஒரு பிச்சைக் காசு வர்றதே, அதுக்குப் பேரா சம்பாத்தியம்? முழிச்ச பேர் வழின்னா முப்பதினாயிரம் இல்லே இந்நேரம் பாங்கியிலே இருக்கும்? நான் வேலையை விட்டால் இந்தக் குடும்பம் நடுத் தெருவில் நிற்க வேண்டியதுதான்.''

''குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள்...'' என்று துரை சொல்லி முடிப்பதற்குள், 'போடா பைத்தியக்காரா!' என்று அவன் பேச்சைக் கத்தரித்தார் ஐயாவு.

ஆபீஸில் யாரும் இல்லை. 'அண்ணு' எங்கேயோ 'லெவல்' எடுக்கப் போயிருந்தார். கனகசபாபதி லீவு. 'ஏ.இ.' ஊரில் இல்லை என்று தெரிந்த 'டிராப்ட்ஸ்மேன்' சிங்காரம் 'அபூர்வ ராகங்களுக்கு'க் கம்பி நீட்டியிருந்தார்: ஆபீசுக்கு எதிரிலிருந்த டீக் கடை வெறிச்சோடிக் கிடந்தது. முதலாளி நாயர் அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார். 'பட்சி சாஸ்திரம்' பழநிவேலு சோம்பல் முறித்தபடி பீடி குடித்துக் கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் வீற்றபடி வம்பு பேசிக் கொண்டிருந்தார் ஐயாவு. இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். பேசுவதற்கு நிறைய விஷயம் இருந்து கொண்டே இருக்கும். வெய்யிலின் கொடுமையில் தொடங்கி வேதாந்தத்தில் போய் முடியும்.

அன்று சம்பாஷணை சூடு பிடிக்கும் வேளையில் சைக்கிளில் வந்தார் ஒரு முரட்டு ஆசாமி. அவரைப் பார்த்தவுடனேயே எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தார் 'பட்சி சாஸ்திரம்'. ஐயாவு நகராமல் குந்தியிருந்தார். யாருக்குமே அஞ்சாத துணிந்த கட்டை அது!

''எம்பா, பட்சி சாஸ்திரம், எவ்வளவு நாளா இங்கே கடை பரப்பியிருக்கே?''

''அது இருக்குமுங்கோ ஒரு பத்துவருஷம்.''

''உனக்கு எதிரில் இருக்கும் ஆபீஸ்காரங்களை யெல்லாம் நல்லா தெரியுமா?''

''ஓரளவு தெரியுமுங்க.....''

''ஐயாவுன்னு பியூன் எவனாவது இருக்கானு?''

தம் பெயர் குறிப்பிடப்பட்டதும் நிமிர்ந்து உட்கார்ந்தார் ஐயாவு. ஆனால் அவசரப்பட்டு எதுவும் பேசிவிடவில்லை.

''ஐயாவுவைத் தெரியுங்கோ....''

''ஆசாமி எப்படி?''

''வயசான ஆளுங்க.''

''அதை யாரு கேட்டா? நான் என்ன பெண்ணுக்கு மாப்பிள்ளையா தேடறேன்?.... லஞ்சம் கிஞ்சம் வாங்குவாரா?''

'' நமக்கு அதெல்லாம் தெரியாதுங்க.''

''ஆசாமி ஒரே ஊழல் போலிருக்கே! இல்லாவிட்டால் எங்களுக்கு ஏன் புகார் வர்றது? நான் இரகசிய போலீஸிலிருந்து வருகிறேன்.... அந்த ஐயாவுப் பயலைக் கையும் களவுமாகப் பிடிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்..... அகப்பட்டான்னு குறைஞ்சது அஞ்சு வருஷம் கம்பி எண்ண வேண்டியிருக்கும். பென்ஷன், கின்ஷன் எல்லாம் போய்விடும்.... நீ இனிமேல் கொஞ்சம் கவனமாக இரு. அந்த ஐயாவு மேலே ஒரு கண் வைச்சுக்கோ. நான் உன்னை மீண்டும் பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு சைக்கிளில் மறைந்துவிட்டார் அந்த முரட்டு மனிதர்.

ஐயாவு முதல் தடவையாகத் தம் மகனின் ஆபீஸ் அறைக்குள் கால் எடுத்து வைத்தார்.

'' வாங்கப்பா.... உட்காருங்க, என்ன விசேஷம்?'' என்று பரபரத்தான் துரைராஜ்.

''ஒன்னுமில்லேடா. வேலையை விட்டுடலாம்னு இருக்கேன். அன்னிக்கு ராத்திரி நீ சொன்னே பாரு, யோசிச்சுப் பார்த்தேன். வயசு காலத்திலே நான் ஏன் அநாவசியமாகக் கஷ்டப்படணும்? ஓய்வு எடுத்துக் கொண்டு ஒரு மூலையில் கிடப்பதுதான் விவேகம்னு படறது. குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளத்தான் நீ இருக்கியே.... இந்தா என் ராஜிநாமாக் கடிதம். இதை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பிவிடு'' என்று கூறிவிட்டு மகனின் பதிலுக்குக் காத்திராமல் அறையைவிட்டு வெளியேறினர் ஐயாவு. ஆபீசிலிருந்த மற்றச் சிப்பந்திகள் அவர் திடீர் முடிவைக் கேட்டுத் திகைத்துப் போனார்கள். 'ஐயாவுக்கு என்ன நேர்ந்தது?' என்ற கேள்வி ஒவ்வொரு முகத்திலும் தொக்கி நின்றது.

ஏதோ ஒரு டெலிபோன் நம்பரைச் சுழற்றிக் கொண்டிருந்தான் துரைராஜ்.

''ஹல்லோ சீதாபதி, உன் நடிப்பு பிரமாதம் போ! கல்லூரி நாடகங்களில் எல்லாம் போலீசாக நடித்ததை மிஞ்சிவிட்டது. அப்பாவின் முன் நீ ஆடின நாடகம். பயந்து போய் ராஜிநாமா செய்துவிட்டார். ஓர் ஊழல்காரரை ஆபீஸை விட்டு மனஸ்தாபம் ஏதுமில்லாத முறையில் தந்திரமாக வெளியேற்றிவிட்டேன். வாழ்க, உன் நடிப்பு!''



ஷேக்ஸ்பியர் சுந்தரம்!

வி. எஸ். சீனிவாச சாஸ்திரியாரை ஒரு மாணவர் அணுகினார்.

''எனக்கு ஆங்கில ஞானத்தை விருத்தி செய்து கொள்ள வேணும். என்ன செய்யலாம்?'' என்று அக்கறையுடன் கேட்டார்.

''நீ ஷேக்ஸ்பியரை உருப்போட்டுவிடு!'' என்று பதில் கிடைத்தது.

ஏற்கெனவே 'மிமிக்ரி'யில் பெயர் வாங்கியிருந்த மாணவர் சுந்தரம் பல குரல்களில் பேசித் தனி நபராக ஷேக்ஸ்பியர் நாடகங்களை நடித்துக் காட்டத் தொடங்கினர். 'ஷேக்ஸ்பியர் சுந்தரம்' என்றே அவரை அனைவரும் அழைக்கலாயினர்.

அண்மையில் இவர் ஷேக்ஸ்பியர் நாடக நடிப்புக்கு வெள்ளி விழாக் கொண்டாடியும் விட்டார். விழா தமிழக உயர்நீதி மன்ற நீதிபதி இரு மோகன் தலைமையில் பாரதீய வித்யாபவனில் நடைபெற்றது.



இணையற்ற எழில்மேனி.
மென்மை, வழவழப்பு, இயற்கையான வனப்பு.
ஆம்! லக்ஸ் ஸுப்ரீம் உங்கள் மேனி-
எழிலுக்கு மெருகூட்டுகிறது. நீங்
களே அதை உணர்ந்து மகிழ்வீர்
கள். காரணம், லக்ஸ் ஸுப்ரீம்
மட்டுமே ப்யூடி க்ரீம் உட்கொண்ட
தாகும். பெருகும் அதன்
செழுமையான நுரையில் உள்ள
ப்யூடி க்ரீமின் ஸ்பரிசத்தையும்
அதனின்று கமழும் இணையற்ற
மெய்மறக்கச் செய்யும் நறுமணத்
தையும் நீங்கள் உண்மையாகவே அநுப
விக்கமுடியும். அதன் செழுமையான
நுரை உங்களது சருமத்தைத் தழுவிச்
சென்று, மேனியைப் பட்டுப்போன்று
மிருதுவாக இயற்கை வனப்புடன்
வைக்கிறது.
LUX
SUPREME
வேறு எந்த சோப்பையும்
பற்றிய சிந்தனையும் எழாது.

பெரும்பாலான கேசச் சாயங்கள் மங்கிவிடக் காரணம்
அவை உரோமத்திற்கு வெறும் மேல் பூச்சுப் போடுகின்றன.

ட்ரூ-டோன்

ஒவ்வொரு உரோமத்தையும் ஊடுருவுகிறது, மேம்பட்ட நிரந்தர இயற்கைப் பொலிவை அளிக்கிறது உங்கள் கேசத்திற்கு.





லிக்விட்

நீங்கள் தேர்ந்தெடுக்க:
ட்ரூ-டோன் லிக்விட் ஹேர் டைய
மற்றும் வடியாது படியும் கேசச்
சாயமான ட்ரூ-டோன் ஜெல்.

உங்கள் கேசத்தைப் பளபள
மென்மையோடு படிமானமாக
வைப்பதற்கென, இரண்டுமே
உள்ளமைப்பான ஹேர் கண்டிஷனர்
அடங்கியவை.



ஜெல்

> கேசத்திற்கு முதல் தடவையாக சாயமிட உத்தேசமா? எழுதிப்
> பெறுங்கள் இலவசக் கைப்புத்தகம்: ''ஹேர் டையிங் எக்ஸ்பெரியின்ஸ்''
> ஜே.கே. ஹெலன் கர்ட்டிஸ் லிட், ஜே.கே. பில்டிங், பம்பாய் 400 038.

கருநிறத்திலும் கருஞ் சிவப்பிலும் கிடைக்கிறது.
ஆடவருக்கென விசேஷ பேக்.

everest/269/JKH-tm.

மற்ற விவரங்களுக்கு மேற்கண்ட விலாசத்துக்கு எழுதவும்:

M/s. பாரி & கோ., லிட்., சென்னை ○ M/s. G. அதர்ட்டன் & கோ., பிரைவேட் லிமிடெட், கல்கத்தா ○ மார்க்கெட்டிங் டிவிஷன்: M/s. J. K. ஹெலன் கர்ட்டிஸ் லிட்., பம்பாய் & புது டெல்லி

வட்ட மேஜை

தீபாவளி மலரின் சிறப்புக்குக் காஞ்சிப் பெரியவாளின் கட்டுரை ''நாடகக் கலை— அன்றும் இன்றும்'' ஒன்றே போதும். 'கட்டுரை எழுதுவது எப்படி ?' என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் இக்கட்டுரையைப் படித்தால் போதும். ''*Thesis*'' எழுதுபவர்களுக்கும் பயன்படும் கட்டுரை. கட்டுரையில் உள்ள கருத்துக்களோ பரவசமூட்டுகின்றன. கட்டுரையின் கடைசிப் பாராக்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. எத்தனை ஆழமாக, அழுத்தமாக, எளிமையாக உபதேசம் செய்துவிட்டார்கள்.

இதர கட்டுரைகள் யாவுமே இனிக்கின்றன. ரசிகமணி டி. கே. சி. — மன்னிக்கவும், எஸ். மகராஜன் அவர்களின் கட்டுரை ரசிகமணியை நம் முன் கொணர்ந்து நிறுத்துகிறது. 'பெரியவா'ளைப் பற்றி ரா. கணபதி, ஃப்ரெடரிகா ஆகியோரின் கட்டுரைகள் மற்றும் ஆளுநர், டாக்டர் கவுனர், அக்னிஹோத்ரம் ஆகியோரின் எழுத்தோவியங்களும் கருத்துக் குவியலாக விளங்குகின்றன.

கதைகள் மட்டுமென்ன ? நவரசங்களை வெளியிடும் கதைகள் ரசிக்கின்றன. நா. பார்த்தசாரதி, ருக்மிணி பார்த்தசாரதி,— கி. ராஜேந்திரன், எஸ். வி. எஸ்.... ஹாஸ்யத்துக்கு அகஸ்தியன், முகுந்தன், இந்திரா பார்த்தசாரதி... அகஸ்தியன் கட்டுரையைப் படித்து சிரித்துச் சிரித்து.... 1940ம் ஆண்டு 'கல்கி' மலரில் வெளியான 'பரதன்' அவர்களின் 'தலைபுராணம்' நினைவுக்கு வந்துவிட்டது.

விஜயவாடா
6—11—75 க. ரா.

கல்கி தீபாவளி மலர் கண்டு மிக மகிழ்ச்சி அடைந்தோம்.

''தர்மபுரியில் சிற்பபுரி'' தர்மபுரிவாசிகளான எங்களுக்குப் பெருமிதத்தை அளித்தது.

ஒரு விஷயம். மதுரையில் போய், ''சொக்கநாதர் கோயில் எங்கே இருக்கிறது?'' என்று கேட்பதில்லை. ''மீனாட்சி கோயில் எங்கே உள்ளது ?'' என்று கேட்பதுதான் வழக்கம் அல்லவா ? அதுபோல் தர்மபுரியில் ஸ்ரீ கௌசிகன் என்னதான் குரலை உயர்த்திக் கம்பீரமாக, ''மல்லிகார்ஜுனேசுவரர் — கோயில் எங்கே இருக்கிறது ?'' என்று கேட்டாலும் அதில் பலனில்லை. சாதாரணக் குரலிலேயே, ''காமாட்சி அம்மன் கோயில் எங்கே?'' என்று கேட்டிருந்தாலும் போதும். யாரும் மேலும் கீழும் பார்த்திருக்கமாட்டார்கள். அன்னை காமாட்சிதான் இங்கு பிரசித்தம். அல்லது 'கோட்டை கோயில்' என்றாலும் போதும். ஊருக்குப் புதிதாகையால் அவர்களுக்கு அது தெரிய நியாயமில்லை.

கோயிலில் உள்ள சிற்பங்களை யெல்லாம் நாங்களும் பார்த்திருக்கிறோம். ஆனால் அவற்றில் உள்ள நயங்களை எல்லாம் 'கல்கி மலர்' மூலமாக விளக்கமாகத் தெரிந்து கொண்டோம் என்பதுதான் உண்மை. கம்பராமாயணச் செய்யுளைப் படித்துப் பொருளைப் புரிந்து கொண்டாலும், அதிலுள்ள நயங்களை ஒரு டி. கே. சி. விளக்கினால் அதன் ரசமே வேறுதான் அல்லவா ? அது போல் தான் இதுவும்.

சுபத்ரா கோவிந்தராஜன்
தர்மபுரி (காரியதரிசி)
15—11—75 தர்மபுரி மாதர் சங்கம்

'கல்கி' 9—11—75ம் தேதிய இதழில், ''நான் வணங்கும் மனித தெய்வம்'' என்ற தலைப்பில், திரு துரைசாமி (டி.வி.எஸ். ஸ்தாபகரின் புதல்வர்) அவர்கள் பற்றி, என் தந்தை எழுதிய கட்டுரையை வெளியிட்டது குறித்து மிக்க மகிழ்ச்சி.

என் தந்தை, திரு எம். அழகிரிசாமி இந்த வருடம் ஜுலை மாதம் 27ம் தேதி காலமாகிவிட்டார்.

தாம் எழுதிய கட்டுரையை, தம் தந்தையைப் போன்ற முதலாளியிடம், நேரடியாக எடுத்துச் சொல்லலாம் என அவர் விரைந்தோடிவிட்டார் போல் உள்ளது.

மதுரை — 3
10—11—75 அ. சோமசுந்தரம்

(தந்தையை இழந்த நண்பருக்கு நமது அனுதாபங்கள். — ஆசிரியர்.)

'சாரதி' அவர்கள் எழுதிய 'எனக்கென்று ஒரு நாள்' கதையைப் படித்துப் பிரமித்தேன்.

நகைச்சுவை இழையோடிய, புதுக் கோணத்தில் பூரித்துத் ததும்பிய நடையை அனுபவித்தேன். அநேக ஆங்கிலச் சொற்றொடர்கள் இருப்பினும் அவை அவசியமான இடங்களிலே வந்து கதைக் கருத்துக்கு ஓர் அழுத்தமும், பாத்திரச் சிறப்புக்கு ஒரு வலுவும் ஓட்டமும் தந்து அழகாய் அமைந்திருக்கின்றன.


சென்னை — 4
10—11—75 வேதம்

தமிழ் தெரிந்த எனது நண்பர் மாதவி என்ற சிறுகதையை எனக்குப் படித்து மொழி பெயர்த்துச் சொன்னார். கதையில் வரும் நிகழ்ச்சிகளைக் காணும் விதம் அற்புதமாய் உள்ளது. கதையின் உச்ச கட்டம் பிரமிப்பு ஊட்டுவதாக இருந்தது. மாதவி என்ற யானையின் உணர்ச்சிகள் நன்றாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. கதாசிரியர் வாழ்த்துக்கும் ஊக்குவித்தலுக்கும் உரியவர். கதையை யாரேனும் கன்னடத்தில் மொழிபெயர்க்க வேண்டும் என விரும்புகிறேன்.

பங்களூர் — 2
11—11—75 ராஜண்ணா

(ஆங்கிலக் கடிதத்தின் தமிழாக்கம் — ஆர்.)

அகத்தில் இளமை இருக்கையிலே...



...முகத்திலே அது மலரட்டுமே.



மலரட்டுமே மாந்தளிர் மேனியிலே மாசில்லா இளமையழகு
மலரட்டுமே பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் துணையோடு.
உங்கள் மேனியழகுக்குத் தேவைப்படும் குழைவான
இயற்கைத் தைலங்கள் யாவும் இணைந்த கலவை இதுவே.
உள்ளிறங்கத் தேய்த்து சருமத்திற்கு ஊட்டமளியுங்கள்.
குளிர் வாடைக் காற்றின் கொடுமையிலிருந்து
காத்திடுங்கள் உங்கள் மேனியை.

இளமை திகழும் மேனி என்றும் உமக்கே.

பான்ட்ஸ் கோல்டு க்ரீம்

சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்க் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் அமெரிக்காவில் இணைக்கப்பட்டது).

லின்டாஸ்-CFCA-140TH

இந்து மதத்தின் கருத்தாழம் மிக்க தத்துவங்கள், ஆங்கிலேயனையும் சொக்க வைக்கும் மொழி நடையில் அங்கே கூடியிருந்தோர் நெஞ்சங்களைக் கொள்ளை கொள்ளுகின்றன. உலகத்தின் அறிவு மேற்காகலாம். ஆனால் அதன் இதயம் கிழக்குத்தான் என்ற அறிஞரின் கூற்று மெய்ப்பிக்கப்படுகிறது.

விவேகாநந்தருக்குத்தான் எத்தகைய நாட்டுப் பற்று! "இந்திய மக்கள் தொண்டே என் பிறவிக் கடன், ஆயிரம் முறை பிறந்தாலும் அதன் ஒவ்வொரு கணமும் இந்திய சகோதரனே உனக்குத் தொண்டு செய்வதில்தான் புனிதப்படும்" என்கிறார்.

"சூரிய சந்திரனில் சோதியும், வேதங்களில் கருப் பொருளுமாகிய நான், மனிதனில் ஆண்மையாய் இருக்கிறேன்" —

— கீதையில் கண்ணபிரான்

துறவி என்றால் பேடியா? இல்லை என்கிறார் விவேகாநந்தர். மேலை நாட்டுப் பயணத்தின் போது கப்பலில் இரு வெள்ளையர்கள் இந்து மதத்தை மிகத் தரக் குறைவாக ஏளனம் செய்கின்றனர். விவேகாநந்தர் கருத்துக்களைக் காட்டி வாதியுங்கள் என்று பல முறை வேண்டுகின்றார். அவர்களோ மிஞ்சுகிறார்கள். தத்துவங்களை விட்டுவிட்டுப் பாமரர்களின் வழிபாட்டு முறைகளை மனம்



அன்பு, அறிவு, ஆண்மை!

புண்பட மேலும் மேலும் இகழ்கின்றனர். மனம் பொறுத விவேகாநந்தர் சிங்கமெனச் சிலிர்த்தெழுகின்றார். அவர்கள் ஆடையைப் பற்றி, "தரக் குறைவாய் ஒரு வார்த்தை இனி மேல் பேசினாலும் கடலில் தூக்கி எறிந்து விடுவேன்" என்று சீறுகின்றார். அவரது தோற்றமும் சீற்றமும் அவர்களை நடுங்க வைக்கின்றன. பிறகு ஏன் அவர்கள் பேசுகின்றார்கள்? இதைப் பற்றி அவரது விளக்கம்: "கருத்துக்களில் மோதாமல், இந்து மதத்தைக் கேட்பவர் கூசும் வகையில் ஏளனம் செய்வது என் தாய் மாற்றான் கைப்பட்ட காட்சி போன்றது! அதை எப்படிச் சகிக்க முடியும்?" — மான உணர்ச்சியை இதைவிட எப்படிக் கூற முடியும்? இந்தியச் சாமியார் என்றால் கேலிச் சித்திரத்தை நினைத்துக் கொண்டவர்கள் விவேகாநந்தரது தோற்றத்தில் கம்பன் கண்ட இராமனின் அழகையும், வலிமையையும் காண முடியும். விவேகாநந்தர் மல்யுத்தம், குத்துச் சண்டை, சிலம்பம் இவற்றில் சிறந்த பயிற்சி உள்ளவர். ஒரு சிறந்த விளையாட்டு வீரர்.

இந்தியா இளைஞர்களால்தான் ஏற்றம் பெற முடியும். சிந்தனைச் செறிவும், சீர்திருத்த வேகமும் மிக்க இளைஞர்களால்தான் இந்தியா காப்பாற்றப்பட வேண்டும் என்பது அவரது கணிப்பு. இதோ விவேகாநந்தர் அழைக்கிறார்: "நண்பர்களே! நமக்குத் தேவை வலிமையும், வேகமும் மிக்க இளைஞர்களே. அவர்கள் நூறு பேர் உலகத்தையே புரட்சிகரமாக்கி விடமாட்டார்களா?"

மனிதன் தன்னம்பிக்கை இழக்கலாமா? துப்பாக்கியில் குறி பார்ப்பவனுக்குத் தன்னம்பிக்கை தடம் புரண்டால்? இதோ விவேகாநந்தர் தரும் நம்பிக்கைச் சத்துணவு: "நமது முதல் தேவை தன்னம்பிக்கையே. நம்பிக்கை நெஞ்சுரம் கொண்ட சிலரது சாதனைதானே சரித்திரம்! நம்பிக்கை உன் இதயத்தில் மறைந்து கிடக்கும் ஆற்றலை இயக்கிவிட்டால் எதனைச் சாதிக்க முடியாது."

"நாம் ஏன் இன்னும் முன்னேற முடியவில்லை?" என்று கேட்டுக் கொண்டு பதில் தருகிறார் சுவாமி விவேகாநந்தர்.

"நமது முன்னேற்றத்துக்குத் தடையே பெரும்பான்மை மக்கள் அறியாமை நீக்கப்பட்டு வளமை அளிக்கப்படாததுதான். இது நடக்கும் வரை எந்தத் திட்டமும் முறையான பலனைத் தராது. கல்விதான் இதனைத் தரும்."

நமது தேர்தலே ஒரு நகைச்சுவை நாடகம் அல்லவா? படம் பார்த்து முத்திரையிடும் பரிதாபம் சாதனையல்ல. சாதிகள் வெற்றி பெறுவது விபரீதம். வோட்டுப் போடுவது உரிமை அல்ல, கடமை, அதில்தான் மக்களாட்சியின் உயிரே இருக்கிறது என்ற விழிப்புணர்ச்சியை இவர்கள் பெற்றிருந்தால் இது நடக்குமா? கல்வி தவிர வேறு எது இந்நிலையை மாற்ற முடியும்? "கஞ்சி குடிப்பதற்கில்லார் அதன் காரணங்கள் இவை என்னும் அறிவும் இல்லார்" என்ற பாரதியின் கருத்தைத் தானே விவேகாநந்தர் முன்பே சொல்லிவிட்டார்.

— வில்லவராயன்

கடைசிப்பக்கம்

கண்ணதாசன்



ஒரு குழந்தை அழுகிறது!

அதோ அங்கே ஒரு குழந்தை அழுது கொண்டிருக்கிறது.

அதை அப்படியே அழ விடுங்கள்.

அது ஒன்றும் பசியால் அழவில்லை.

'தொடர்ந்து அழ வேண்டுமே; அழுவது எப்படி?' என்று அது ஒத்திகை பார்க்கிறது.

இறைவன் முதலில் அதற்குக் கற்றுக் கொடுக்கும் வித்தை அதுதான்.

பிறந்து சில நாட்கள் வரை அது அழுமே தவிர, அதன் கண்களிலிருந்து கண்ணீர் வராது.

அது ஏன்.....?

அதன் பெயர்தான் ஒத்திகை!

நாகரிகச் சட்டை போட்டுக் கொண்டு ராஜா வேஷத்து வசனத்தைப் பேசும் நடிகன் மேடையில் அரங்கேறும்போதுதானே ராஜா வேஷத்துச் சட்டை போடுகிறான்?

குழந்தையும் அப்படித்தான்.

மனிதரின் முகங்களை எப்போது அது அடையாளம் கண்டுகொள்ளத் தொடங்குகிறதோ, அப்போதுதான் அதன் கண்களில் கண்ணீர் வரத் தொடங்குகிறது.

இதோ, அதுதான் தாய் என்று அடையாளம் கண்டு கொண்டு முகம் பார்க்கிறது. அதன் கண்கள் கண்ணீர் வடிக்கின்றன.

''உனக்கு ஒரு நாள் சந்தோஷம்; எனக்கு எவ்வளவு நாள் தலையெழுத்தோ?

'' இனி நான் செய்யப் போகிற பாவங்களுக்கோ, அனுபவிக்கப் போகும் துன்பங்களுக்கோ எந்த வகையில் நான் பொறுப்பு?

'' உங்கள் பள்ளியறையிலே உங்களிடம் வேண்டிக் கொண்டு இந்தப் பூமியிலே நான் ஜனித்தேனா?

''உங்கள் ஆச்சரியக் குறியில் உருவான கேள்விக் குறி நான்.

''உங்கள் ஆதங்கத்தில் வந்து விழுந்த மிருகங்கள் நான்.

'' தாயே! என்னைப் பெறுவதற்காக நீ மிகுந்த சிரமப்பட்டதாகப் பெருமைப்படுகிறாயா?

'' உனக்குப் பத்து மாதம்தானே சிரமம், எனக்கு எத்தனை வருஷமோ?

''இனி நான் எத்தனை கேள்விக்குறிகளுக்கு ஆச்சரியக் குறியாக இருக்கப் போகிறேனோ?

'' புஷ்பங்களைப் போல, மலர்ந்தோம், மறைந்தோம் என்றில்லாத மனித வாழ்க்கையில், என்னை உருவாக்கும் பொறுப்பை மட்டும்தானே நீ ஏற்றுக் கொண்டாய்!

'' இனி நான் அனுபவிக்கப் போகும் மன வியாதிகளையும், உடல் நோய்களையும் ஏற்றுக் கொள்ள உனக்குச் சக்தி உண்டா?

'' விதை போட்டுத் தண்ணீர் ஊற்றிய உங்கள் குல தர்மம், என்னைக் கனிமரமாக்குமோ, விறகாக்குமோ யார் கண்டது?

'' நான் சாகிற வரையில் எனக்குத் தேவையான எல்லா விஷயங்களுக்கும் உயில் எழுதி விட்டா நீங்கள் பள்ளி அறையில் சந்தித்தீர்கள்?

'' 'மகள் கர்ப்பமாகிவிட்டாள்' என்று தாயாரும், 'மருமகள் கர்ப்பமாகிவிட்டாள்' என்று மாமியாரும் வளைகாப்பு கொண்டாடுகிறார்கள்.

'' என் நிலை என்ன?

'' உடல் உறவை நியாயப்படுத்திய சாஸ்திரங்கள், நான் நடக்கப் போகும் வழியெங்கும் எந்த வகையில் துணை புரியப் போகின்றன?

'' 'அம்மா' என்று சொல்வதற்கு எனக்குக் கற்றுக் கொடுக்கிறாய்; அதன் பொருள் என்ன?

'' இனி நான் அழும்போதெல்லாம் 'அம்மா' என்றுதானே அழப் போகிறேன்; அதுதானா?

''அழும்போது 'அம்மம்மா' என்றும், 'போதும் போதும்' என்று அலுத்துக்கொள்ளும் போது 'அப்பப்பா' என்றும் மனிதர்கள் கதறுகிறார்கள்.

''நீங்கள் இரண்டு பேர்தானே அத்தனைக்கும் காரணம்! அதனால்தான்!

'' தாயே!

'' நீ ஏன் என்னைத் தூங்க வைக்கிறாய்?

'' நான் அழாமல் இருப்பதற்குத்தானே!

''தூங்கிக் கொண்டே இருந்துவிட்டால் நிச்சயமாக நான் அழப் போவதில்லை.

'' நிரந்தரமாகத் தூங்கிவிட்டால் பிறகு அழுகையே இல்லை.

''அதைவிட நான் பிறக்காமலே இருந்திருந்தால்.......?

''அதை நான் நினைத்து என்ன செய்வது?

''காமதேவன் விட்ட அம்பு, காலதேவன் மடியில் வந்து விழுந்துவிட்டது.

''இனி மரண தேவனைச் சந்திக்கிற வரையில் என் வாழ்க்கை கரணம் போடத்தான் போகிறது; கண்ணீர் விடத்தான் போகிறது.''

— அந்தக் குழந்தையின் கண்களில் இருந்து கண்ணீர் வரும்போது இவ்வளவையும் சிந்திக்கிறதா?

ஆம்; சிந்திக்கிறது.

அதைப் புரிந்துகொள்ளும் யோக்கியதை விஞ்ஞானிக்குக் கூடக் கிடையாது.

அது ஒத்திகை முடிந்து அப்போதுதான் அரங்கேறுகிறது.

அதற்கு ஆண்டவன் தலைமை வகிக்கிறான்.


அந்தக் குழந்தையை அழ விடுங்கள்.


அது பசிக்காக அழவில்லை;

பிறந்த பாவத்துக்காக அழுகிறது!

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras 600031. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)





அதிகபட்ச உணவு விளைச்சலுக்கு


உங்களுக்குத் தேவை எதையும் தாங்கும் நம்பகமான பாட்டரி

நாட்டிற்கு மேலும் உணவு வேண்டும். அதுதான் இன்றைய முக்கியத் தேவை. இதற்கு இந்தியா உங்களைத்தான் நம்பியிருக்கிறது.

நேரத்தை வீணாக்கிவிட முடியாது. உங்கள் டிராக்டர் ஒவ்வொரு நிமிடமும் செயல்பட்டாக வேண்டும்.

உங்கள் டிராக்டரில் ஆம்கோ பவர் பிளஸ் பாட்டரி இருக்கின்றதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள். எந்தவித டிராக்டருக்கும் மிக நம்பகமான பாட்டரி அது. எனவேதான் இந்தியாவில் உள்ள பிரதான டிராக்டர் தயாரிப்பாளர்கள் அனைவரும் ஆம்கோவை ஒரிஜினல் பாட்டரியாக பொருத்துகின்றனர்.

ஆம்கோ டிராக்டர் பாட்டரிகள் மிகக் கடுமையான பரிசோதனைகளை—பழுதின்றி—எப்போதும் தாங்கி நிற்கின்றன என்று நிபுணர்கள் நற்சான்று அளித்துள்ளனர்.





ஆம்கோ—அயராத பாட்டரி

ஆம்கோ பாட்டரீஸ் லிமிடெட்
பெங்களூர்